புது நாள்

தி. ஜ. ர.

பழனியப்பா பிரதர்ஸ்

31 MAR

புது நாள்

ஆசிரியர் :
மிஹேல் ஜோஷென்கோ
தமிழாக்கம் :
தி. ஜ. ர.

பழனியப்பா பிரதர்ஸ்

சேப்பாக்கம் :: தெப்பக்குளம்
சென்னை-5 :: திருச்சிராப்பள்ளி

முதற் பதிப்பு — 1955
உரிமை பதிப்பகத்தார்க்கே

விலை ரூபா இரண்டு

ஏஷியன் பிரிண்டர்ஸ்,
சென்னை—5.

முன்னுரை

இது ஸோவியத் ருஷியக் கதை. இதன் ஆசிரியர் மிகவும் பிரபலமானவர். ஆரம்பத்தில் நகைச் சுவை நிறைந்த சிறு கதைகள் அல்லது நடைச் சித்திரங்கள்தான் நிறைய எழுதினார். அதிலிருந்து இவர் புகழ் பரவியது. 'லிலிபுட்' போன்ற பிரசித்தமான ஆங்கிலப் பத்திரிகைகளில் இவருடைய பல சிறு கதைகளும் நடைச் சித்திரங்களும் மொழிபெயர்ப்பாக வெளியாயின.

ஸோவியத் ருஷிய வாழ்க்கையிலேயே சில அம்சங்களை இவர் கேலி செய்வார். ஸோவியத் அதிகாரிகளைக் கிண்டல் செய்வதும் உண்டு. கம்யூனிஸ்ட் ருஷியாவுக்கு நகைச் சுவையே இல்லை யென்பது வெறும் புரளி என்பதற்கு இவருடைய எழுத்துக்களே அத்தாட்சி பகரும். இவருடைய நகைச் சுவை, அலாதி ரகம்; விசித்திரமா யிருக்கும்; அடக்கமான புன் சிரிப்பை எழுப்பும். அதற்கு இந்தக் குட்டி நாவலில்கூட அங்கங்கே சில உதாரணங்களைக் காணலாம்.

ஆயினும், தமக்கு வழக்கமான நகைச் சுவையை விட்டு, இந்தக் குறு நாவலைத் தீவிர ரீதியில் எழுதியிருக்கிறார். ருஷியாவில் நடந்த கம்யூனிஸ்ட் புரட்சியையே பொருளாகக் கொண்டது இது. அதில் சம்பந்தப்பட்ட ஒரு பெண் தன் வாழ்க்கை வரலாற்றைச் சொல்

வது போல இதைக் கற்பனை செய்திருக்கிறார். படாடோபமோ ஆர்ப்பாட்டமோ இல்லாமல் அமைந்த முறையில் ஆற்றொழுக்குப் போலக் கதையைக் கூறுகிறார்.

இராயவரம் திரு. ராம. ரங்கநாதன் அவர்களே நான் இதைத் தமிழாக்கக் காரணமாயிருந்தவர். அவருக்கு என் நன்றி உரியதாகும். 'ஹிந்துஸ்தான்' பத்திரிகைக்கு நான் ஆசிரியனாக இருந்த காலத்தில், அதில் தொடர்ச்சியாக இதை எழுதி வந்தேன். இப்போது, இதைத் திரு. பழனியப்பா வெளியிடுவது எனக்குப் பெருமகிழ்ச்சி அளிக்கிறது. துப்புரவாகவும் அழகாகவும் மிக விரைவிலும் புத்தகங்களை அவர் வெளியிடுவதைத் திரும்பத் திரும்பப் பாராட்டத் தான் தோன்றுகிறது. இந்த விஷயத்தில் புத்தகாசிரியர்களின் உணர்ச்சி மற்றவர்களுக்குத் தெரியாது. அதற்கு அஞ்சி, பதிப்பகத்தாரைப் பாராட்டாதிருக்க என்னால் இயலவில்லை.

வாசகர்களுக்கு என் அன்பு.

சென்னை-8
17-12-'55

தி. ஜ. ர.

புது நாள்

1. பழைய நினைவுகள்

லெனின்கிராட் நகரின் தொழிற்சாலை ஒன்றில் அக்டோபர்ப் புரட்சியின் ஆண்டு விழா நடைபெற்றது. அப்போது ஒரு நாள் மாலையில், அவரவர் தங்கள் தங்களுடைய பழைய ஞாபகங்களைச் சொல்லுவது என்று ஏற்பாடு செய்திருந்தார்கள்.

ரணகளமான பழைய நாட்களைப் பற்றியும், புரட்சியில் அவரவர் செய்த வேலை பற்றியும், பிரபல புரட்சிக்காரர்களின் தீரச் செயல்களையும் போராட்டங்களையும் குறித்தும், யார் வேண்டுமானாலும் பேசினார்கள்.

பழைய ஞாபகங்களைப் பலரும் பரிமாறிக் கொண்டார்கள். அதிலே ஆடம்பரமோ, தடபுடலோ இல்லை; மண்டபம் இல்லை; மேடை இல்லை; சபாநாயகரும் இல்லை. நண்பர்களாய்க் கூடித் தேநீர் பருகினார்கள்; அப்போது விருந்தாளிகள் பேசிக் கொண்டார்கள். அவ்வளவுதான். இதனால், அவர்களுடைய பேச்சு உற்சாகம் நிறைந்திருந்தது; இயற்கையாயிருந்தது. அன்று மாலை என் 'நோட்டு'ப் புத்தகம் பூராவும் குறுக்கும்

நெடுக்குமாய்க் கிறுக்கி விட்டேன். பல கதைகள் எழுதப் போதிய குறிப்புகளும் விஷயங்களும் நிறைந்துவிட்டன.

மற்ற எத்தனேயோ பேருக்கு நடுவிலே யாரோ லியானிடாவ் என்ற ஒருவன் பேசினுன். அவன் ஒரு தொழிற்சாலை நாவிதன். அவன் பேச்சைப் பலர் சுவையாய்க் கேட்டார்கள். புரட்சிக்கு முன்னுல் தனக்கு நேர்ந்த அநுபவங்களே அவன் வேடிக்கை வேடிக்கையாய்ச் சொன்னுன். அப்போது அவன் மார்ஸ்காயா வீதியில், நாகரிகமான க்ஷவரக் கடை ஒன்றை நடத்தி வந்தானும். பல ரகமான தளபதிகளுக்கும் கோமகன்களுக்கும், அவன் க்ஷவரம் செய்திருக்கிருனும். அவர்கள் மிகக் கடுமையாய், மகா இறுமாப்போடு நடந்து கொள்வார்களாம். தங்களுடைய மதிப்பரிய உடம்பின் மேல் இவன் விரல் படாமலே க்ஷவரம் செய்ய வேண்டும் என்பார்களாம்.தான் சென்ற காலத்தில் பெற்றஅநுபவங்கள் பலவற்றை இப்படி லியானிடாவ் வேடிக்கை வேடிக்கையாய்ச் சொன்னபோது, எல்லாருமே சிரித்து விட்டார்கள். ஆனுல், அந்தக் கதையை யெல்லாம் பின்னுல் ஒரு சமயம் பார்த்துக் கொள்ளலாம்.

லியானிடாவ் பேசி முடித்ததும், கொரொட்டாவ் என்ற ஒரு கிழவன், சுருக்கமாய்ப் பேசினுன். அவன் பூட்டு ரிப்பேர் செய்யும் ஒரு தொழிலாளி. பிப்பிரவரிப் புரட்சியில் காயம் பட்டவன். நடுத்தெருவிலே போலீஸாரை எதிர்த்துத் தான் போட்ட சண்டைகளேப் பற்றி அவன் கூறினுன். அந்தச் சண்டைகளுள் ஒன்றிலே தான் அவனுக்குக் காயம் பட்டது.

எல்லாருக்கும் கடைசியிலே, தோழி அன்னு காஸ்யனுவா பேசினுள். அவள் தொழிற்சாலேக் கமிட்டியில் ஓர் அங்கத்தினள்; கொஞ்ச நாளேக்கு முன்புதான் செங்கொடி விருது பரிசு பெற்றவள்.

2. தோழி காஸ்யனுவா பேச்சு

காஸ்யனுவாவின் பேச்சு மிகச் சுவையா யிருந்தது; கேட்போர் மனம் லயிக்கும்படி யிருந்தது; நீண்ட வாழ்க்கை யநுபவங்கள் நிறைந்திருந்தது. புரட்சி, உள் நாட்டுக் கலகம், பிரசித்திபெற்ற பிரெகாப் போர், ருஷிய மேல் வகுப்பு மக்கள் நாட்டை விட்டு ஓடிய ஓட்டம் இவை பற்றிய ஞாபகங்களெல்லாம் அவளுடைய பேச்சிலே நிரம்பியிருந்தன.

புரட்சிச் சம்பவங்கள் என்ற தீக் கொப்பரையில் முழுகி எழுந்த ஒருத்தியின் வாழ்க்கைக் கதையா யிருந்தது அவள் சொன்ன வரலாறு.

இந்தப் பெண் பிள்ளை, ஒரு சாதாரணப் பெண் அல்ல; அவளுடைய கதை, நிதமும் எங்கும் நிகழக் கூடிய எளிய வரலாறல்ல. அவள் பேசத் தொடங்கிய வுடனேயே இதை நான் உணர்ந்து கொண்டேன். அவள் கதையைச் சொல்லச் சொல்ல, அது எங்கள் மனத்தில் தைத்தது. ஒருவிதச் சிறப்பான உட்பொருள் கொண்டது போல் அது எங்களுக்குத் தோன்றியது.

ஒவ்வொருவரும் அவளுடைய வார்த்தைகளிலே சொக்கிப்போய் விட்டார்கள். ஒன்றரை மணி நேரம் பொழுது போனதே தெரியவில்லை.

அவள் பேசி முடிந்து அடுத்தவள் பேச ஆரம்பிக்கு முன், தோழி காஸ்யனுவாவின் பக்கத்திலே நான் சென்றேன். அவளுடைய வாழ்க்கை வரலாற்றை ஒரு நாவலாய் எழுத எனக்கு அநுமதி தரும்படி, அவளை நான் கேட்டேன்.

காஸ்யனுவா சொன்னாள்: "வெறும் பொழுது போக்குக்காக என்றால், அந்த நாவலை எழுதவேண்டாம். மக்கள் என் வாழ்க்கை வரலாற்றைப் பற்றிக் கேலி

செய்துகொண் டிருக்க எனக்கு இஷ்டமில்லை. புரட்சியின் லட்சியத்துக்கு என் கதை உதவியா யிருக்குமானால், நீங்கள் அதை எழுத எனக்குச் சம்மதந்தான்."

"ஆனால், நான் இதுவரையில் சொன்னதெல்லாம், பழைய கதை" என்று மேலும் தொடர்ந்து அவள் சொன்னாள்: "இப்போது நாம் சிரத்தை கொண்டிருப் பவை வேறு விஷயங்கள்-நம் நாட்டை எப்படி நிர்மா ணம் செய்வது, அபிவிருத்தி செய்வது என்ற விஷயங் கள். என் கதையைவிட அதிக நவீனமான எத்தனையோ விஷயங்கள் இருக்கின்றனவே; அவற்றை எழுதினால் என் கதையைவிட அதிகப் பயனுள்ள இலக்கியமாக இருக்குமே?" என்றாள்.

கடைசியில் நாங்கள் ஓர் ஏற்பாடு செய்து கொண் டோம். நாவல் முழுவதையும் நான் எழுதி முடித்துவிட வேண்டியது; பிறகு அவளும் நானும் சந்திக்க வேண்டி யது; நடந்த நடப்புக்கு மாறான பிசகுகளோ மாறுதல் களோ நாவலில் இருப்பதாக அவள் கண்டால், அவற்றை அவள் திருத்திவிட வேண்டியது-இதுவே அந்த ஏற்பாடு.

நாவலை எழுதி முடித்தேன். அதில் ஒன்றும் பெரிய பிசகுகள் அவளுக்குத் தட்டுப்படவில்லை. தன் வாழ்க்கை வரலாற்றை அச்சிட்டு வெளியிட, தோழி அன்னா காஸ்ய னுவா எனக்கு அநுமதி கொடுத்து விட்டாள். ஒரு விஷயத்தை நான் அழுத்தமாய்ச் சொல்ல வேண்டும், கதாநாயகியிடம் எத்தனையோ அசட்டுத்தனங்கள் உண்டு. அவளுடைய குரலே ஒரு தினுசா யிருக்கும். அவளுடைய அந்த அசட்டுத்தனங்கள், குரல், வார்த்தை கள், அவள் சொன்ன மாதிரி இந்த இத்தனையையும் என் கதையிலே நான் அப்படியே பாதுகாத்து வைத்திருக் கிறேன்.

என் கதையைத் தொடங்கு முன்பு, காஸ்யனுவாவின் வெளித் தோற்றத்தைப்பற்றி, நான் சில வார்த்தைகள் சொல்ல வேண்டும்.

அவள் நடுத்தரமான உயரம்; கொஞ்சம் பாரியான சரீரம். இப்போது அவளுக்குச் சுமார் நாற்பது வயது இருக்கும். நீலக் கண்கள். செம்பட்டை மயிர். மிகவும் விசாலமான முகம். வாலிபத்தில், அவள் மிக்க அழகாயிருந்திருக்க வேண்டும். ருஷியர்களுக்கு இயற்கையாகவே அமைந்துள்ள அற்புத எழிலும் ஆரோக்கியமும் வலிமையும் தன்னம்பிக்கையும் அபூர்வ சாந்தியும் அவளிடம் இருந்திருக்கும்.

காஸ்யனுவா நமக்குச் சொன்னது இது:

3. குழந்தைப் பருவம்

நான் ஒரு தொழிலாளர் குடும்பத்தில் பிறந்தேன். என் தகப்பனுரின் பெயர் லாவ்ரிண்டே காஸ்யனுவ். அவர் நிலத்தைப் பயிரிடவில்லை. கருப்பஞ்சாறு சுத்தம் செய்யும் ஒரு தொழிற்சாலையில் வேலை செய்தார். கீயெப் நகரத்துக்கு 40-கிலோ மீட்டர் தூரத்தில் உள்ள ஒரு கிராமத்தில் நாங்கள் வாழ்ந்தோம்.

ஜப்பானிய யுத்த காலத்தில் தொழிற்சாலையில் நடந்த ஒரு வேலை நிறுத்தத்தில் என் தகப்பனுர் கலந்து கொண்டார். இதற்காக ருஷிய சர்க்கார் என் தகப்பனுரைக் கைது செய்து, எங்கேயோ அனுப்பி விட்டார்கள். அதன் பிறகு அவர் எங்களிடம் திரும்பி வரவேயில்லை.

இதற்குப் பின்பு, என்னவோ சொல்லுவார்களே அந்த மாதிரி, எங்கள் குடும்பத்தில் ஓர் இடி விழுந்தது. தகப்பனுரோ திரும்பி வரவில்லை. பதினேழு வயதான என் மூத்த அண்ணனும் ஈரானுக்குப் போய், அங்கேயே தங்கி விட்டான். என் அக்காளுக்கு நீர் ரோகம்

கண்டு, மாண்டு விட்டாள். இந்தத் துக்கங்களினுல், என் தாய் மனம் நொந்து, அணைந்து வரும் தீபச் சுடர் போல் வர வர மெலிந்து, சீக்கிரமே இறந்து விட்டாள்.

ஆகவே, எனக்கு ஏழு வயதாயிருக்கும்போது, நான் அடியோடு அநாதையாகி விட்டேன். கீயெப் நகரில் என் அத்தை இருந்தாள். அவள் ஒருத்திதான் என் உறவினள். தன்னை வந்து பார்த்தால், என்ன செய்வது என்று யோசிக்கலாம் என்று, அத்தை எனக்குச் சொல்லியனுப்பினுள். நான் யாரும் துணையின்றித் தன்னந் தனியே வந்திருப்பதைக் கண்ட அத்தை, ஆச்சரியப் பட்டுப் போனுள். பக்கத்துக் கிராமத்தில் என் அத்தையின் சிநேகிதரான ஒரு பணக்கார மிராசுதார் இருந்தார். அவரிடம் தாதி வேலை பார்க்க, அத்தை என்னை அனுப்பினுள்.

அந்த மிராசுதாரின் குடும்பம் பெரியது. அவர், சில உறவினர்கள், இரண்டு பிள்ளைகள், ஒரு சிறு பாப்பா இத்தனை பேரும் அந்தக் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள். பிள்ளைகளுக்கு மிஷ்கா என்றும், அன்டோஷ்கா என்றும் பெயர். பாப்பாவுக்கு, பென்யா என்று பெயர். அது பெண் குழந்தை. அந்தப் பாப்பாவைக் கவனித்துக் கொள்ளத்தான் நான் தாதியாக அமர்ந்தேன்.

அந்தப் பணக்கார மிராசுதாரின் குடும்பத்தை என் ஆயுள் உள்ள வரையில் நான் மறக்க மாட்டேன். மிராசுதார் மிக மிகப் பெரிய பணக்காரர். வேலைக்காரர்களைச் சரியான அடிமைகள் மாதிரிதான் நடத்துவார். அவருக்கு மாக்ஸிம் டியேவ் என்று பெயர்.

தமது நிலத்தில் வேலை செய்யவும் தம்முடைய ஆடு மாடுகளைப் பார்த்துக் கொள்ளவும் அன்றுடக் கூலிகளாகப் பல தொழிலாளர்களை அவர் அமர்த்திக்கொண்டிருந்தார்.

4. தொழிற்சாலையில்

நான் செய்த தாதி வேலையைப் பார்த்தார் அந்த மிராசுதார். அது அவருக்குச் சரிப்படவில்லை. "சரி, இவனைத் தொழிற்சாலைக்குத்தான் அனுப்பிவிடவேண்டும்" என்று தீர்மானித்தார்.

சர்க்கரை எடுக்கும் பீட் கிழங்குச் சாறு சுத்தம் செய்யும் தொழிற்சாலைக்கு என்னை அவர் அனுப்பிவிட்டார்; என் தகப்பனுர் எங்கே வேலை செய்தாரோ அதே தொழிற்சாலைக்கு.

தொழிற்சாலையில் நான் வேலை செய்யத் தொடங்கினேன். நாள் ஒன்றுக்குப் பன்னிரண்டு மணிநேரம் அங்கே வேலை செய்தேன்.

இப்படி வேலை செய்து விட்டு வீட்டுக்குப் போனுல், அங்கேயும் எனக்கு ஓய்வு கிடையாது. வீட்டிலும் வேலை செய்து கொண்டே யிருக்க வேண்டியதுதான். விறகு சுமந்து வர வேண்டும். கொட்டகை பெருக்கவேண்டும். பசுக்களைக் கரம்பை வெளிக்கு ஓட்டிச் செல்ல வேண்டும். கோழிகளுக்குத் தீனி போடவேண்டும். இத்தனையும் போக, பாப்பாவைத் தூக்கி வைத்துக் கொண்டு சீராட்ட வேண்டும். அடுத்த நாள் காலை ஐந்து மணிக்கே எழுந்திருந்து மறுபடியும் தொழிற்சாலைக்குப் போய்விட வேண்டும்.

பொம்மைகளை வைத்துக்கொண்டு விளையாட வேண்டும் போல், எனக்குத் தோன்றும். மற்றக் குழந்தைகளுடன் ஓடியாட, எனக்கு ஆசையா யிருக்கும். இவற்றுக்கெல்லாம் பதிலாக, உழைப்பதே என் கதியாயிற்று.

தொழிற்சாலையில், சில்லறை வேலைகளை யெல்லாம் குழந்தைகள் செய்தன. சாறு பிழிவதற்கான பீட் கிழங்குகளைக் குழந்தைகள் பொறுக்கி வைக்கும். ஒவ்

வொரு குழந்தையும் ஒரு விதமான இரும்புக் கொக்கியைக் கையில் வைத்துக் கொள்ளும். இந்தக் கொக்கிகளுடன், நானும் பிற குழந்தைகளும் முன்னும் பின்னும் ஓடி ஓடி, பீட் கிழங்குகளைப் பொறுக்குவோம். ஏனென்றால், சாறு பிழியும் இயந்திரத்தின் வாயில் பீட் கிழங்குகளைக் கொட்டும்போது, கிழங்குகள் கீழே தவறி விழுந்து ஓடும். அவற்றை நாங்கள் இப்படிப் பொறுக்க வேண்டும்.

எனக்கு ஒன்பது வயது ஆயிற்று. உடனே என்னை இந்தச் சின்ன வேலையிலிருந்து பெரிய வேலைக்கு மாற்றி விட்டார்கள். பீட் கிழங்கு நறுக்கும் பெஞ்சிகளுக்கு நான் மாறினேன். அங்கே பீட் கிழங்குகளைப் போட, ஒரு வகையான தனிப் பெட்டிகள் இருக்கும். நானும் பிற குழந்தைகளும் பீட் கிழங்குகளை வாரி, அந்தப் பெட்டிகளில் கொட்ட வேண்டும்.

எனக்குப் பன்னிரண்டு வயதானதும், நானே ஒரு பெஞ்சிக்கு மேஸ்திரியானேன். அதில் நான் கிழங்குகளை நறுக்க வேண்டும். பதினைந்து வயதாகும் வரையில், நான் இந்த வேலையைச் செய்துகொண் டிருந்தேன்.

இந்த வேலைக்காக மிராசுதார் எனக்கு மாதம் ஒன்றுக்கு ஒரு ரூபிள் (சுமார் ஒன்றரை ரூபாய்க்குச் சமம்) சம்பளம் கொடுத்தார். ஆனால், தொழிற்சாலையிலிருந்து என் சம்பளமாக மாதம் ஒன்றுக்கு மூன்று ரூபிளை மிராசுதாரே முதலில் வாங்கிக் கொண்டார். பின்னல் எட்டு ரூபிளை என் சம்பளமாக அவர் வாங்கிக்கொண்டார்.

இப்படியே ஆறு வருஷ காலம் வரையில், எனக்காக அவர் எட்டு ரூபிள் சம்பளம் வாங்கிக் கொண்டேயிருந்தார்.

ஆனால், எனக்கு மட்டும் இன்னமும் ஒரே ஒரு ரூபிள்தான் மாதச் சம்பளம் கொடுத்து வந்தார். இந்தப்

பணத்தைக்கொண்டே, நான் பூட்ஸும் துணி மணிகளும் வாங்கிக் கொள்ளவேண்டும்.

இந்தக் கேடு கெட்ட ஒரு ரூபிள் சம்பளக் காசை ஒவ்வொரு மாதமும் நான் வாங்கும் போது, மிராசுதாருக்கு நான் நன்றி செலுத்த வேண்டும் என்று அவர் என்னை வற்புறுத்தினர். ஏன் என்ருல், அவர் எனக்குப் பெரிய தானம் வழங்குகிருர் அல்லவா, அதற்காக! நானும் அவருக்கு மனப் பூர்வமாகவே நன்றி செலுத்தி வந்தேன். இவையெல்லாம் இயற்கை என்றே நான் நினைத்தேன். புரட்சிக் கொள்கையிலிருந்து பார்க்கும்போது, இவையெல்லாம் பெரிய அவமானம் என்று ஏற்படுகிறது. ஆனல், இது எனக்கு அப்போது தெரியவில்லே. எனக்கு ஒன்றுமே தெரியவில்லே. அப்போது நான் பதினைந்து வயதுப் பெண். அப்படியிருந்தும், அடர்ந்த காட்டில் வசிப்பது போல, நான் வாழ்ந்தேன்.

புரட்சி வந்த பிறகுதான் என்னவோ சில விஷயங்கள் எனக்குப் புரியத் தொடங்கின.

ஆனல், புரட்சி நாட்களில், இந்தப் பணக்கார மிராசுதாரிடம் நான் வேலே செய்துகொண்டிருக்கவில்லே. கீயெப் நகரில் ஒரு சீமானிடம் சமையல்காரியாக, வேலே பார்த்துக்கொண்டிருந்தேன். என்ருலும், முன்னே இந்த மிராசுதார் என்னைச் சுரண்டியது எனக்கு ஞாபகம் வந்தது. இவர் எப்படி எனக்கு ஒரே ஒரு ரூபிளைக் கொடுத்துவிட்டு மீதியைத் தாமே அபகரித்துக் கொண்டார் என்று எனக்குத் திடீரென்று ஞாபகம் வந்தது. என் சம்பளப் பணத்தை அபகரித்துக் கொண்டதல்லாமல், இரவிலும் என்னைத் தமது வீட்டில் வேலே செய்யச் செய்திருக்கிருர். ஒரு நாள் இருபத்துநான்கு மணி நேரத்தில், ஐந்தே ஐந்து மணி நேரந்தான் நான் தூங்கியிருக்கிறேன்!

இந்த விஷயத்தை யெல்லாம் நான் நினைத்தபோது, எனக்கு வருத்தம் தாங்க முடியவில்லை; ஆத்திரம் ஆத்திரமாய் வந்தது. என் உடல் பதறியது. அந்தக் கிராமத்துக்குப் போய் மிராசுதாரிடம் சண்டை போட லாமா என்று கூட எனக்குத் தோன்றியது.

இதெல்லாம் பிப்பிரவரிப் புரட்சி நடந்தவுடனே நிகழ்ந்த யோசனை.

5. கிராமத்துக்குப் பயணம்

அப்போது எனக்குப் பத்தொன்பது வயது. அந்த நாட்களில் நான் முன்னே சொன்னபடியே, கீயெப் நகரில் வசித்துக்கொண் டிருந்தேன். ஒரு சமையல் காரியாக வேலை பார்த்து வந்தேன்.

மிராசுதார் என்னைச் சுரண்டியது எனக்கு ஞாபகம் வந்ததும், கிராமத்துக்குப் போக நான். தீர்மானித்ததும், என் உள்ளத்தினுள்ளே ஒரு பெரிய கொந்தளிப்பை எழுப்பின.

நான் கிராமத்துக்குப் போகத்தான் வேண்டும் என்று மனத்தைத் திடப்படுத்திக் கொண்டேன். ஆனால், அங்கே எனக்கு ஒரு வேலையும் கிடையாதே!

என்றாலும், மே மாதத்தில் நான் கிராமத்துக்குப் போனேன். பணக்கார மிராசுதாரின் வீட்டுக்குச் சென்றேன். வீட்டின் முன்முற்றத்தில், வசந்த கால இளவெயிலை அநுபவித்துக்கொண்டு, அவர் உட்கார்ந் திருந்தார்.

மூன்று வருஷ காலமாய் அவரைப் பார்க்கும் பேறு எனக்குக் கிட்டவில்லை. என்றாலும், அவருக்கு நான் தலை வணங்கி மரியாதை செய்யவில்லை. அவரும் எனக்கு மரியாதை செய்யவில்லை.

“ உனக்கு இங்கே என்ன வேலை? பிறர் வீட்டு முற்றத்திலே அத்து மீறி ஏன் நுழைந்தாய்? மக்கள்

என்ன என்ன அநியாயமெல்லாம் செய்யப் போகிருர்களோ தெரியவில்லை!'' என்று முரட்டுக் குரலில் அவர் சொன்ஞர்.

எனக்கும் ஆத்திரம் தாங்கவில்லை. ''கேடுகெட்ட அயோக்கியப் பதரே! நீர் எட்டு ரூபிளை வாங்கிக்கொண்டு, எனக்கு ஒரு ரூபிளைக் கொடுத்தீரே, ஏன்? புரட்சிக் கொள்கையிலிருந்து பார்க்கும்போது, இது என்ன அநியாயம் என்று உமக்குத் தெரியுமா?'' என்று நான் கத்தினேன். மிராசுதார் சிரித்தார். தம் பிள்ளைகளான மிஷ்காவையும் அன்டோஷ்காவையும் கூப்பிட்டு என்னை வெளியே விரட்டச் சொன்ஞர்.

புரட்சி என் உள்ள வேதனையைத் தீர்க்கவில்லையே என்று அப்போது நான் ஆச்சரியமடைந்தேன். பின்ஞல்தான் எனக்கு இதன் காரணம் விளங்கியது. நடந்த புரட்சி, நடுத்தர வகுப்பாரின் புரட்சியே என்று அறிய வந்தேன். நடுத்தர வகுப்பாருக்கும் நமக்கும் என்ன சம்பந்தம் இருக்கிறது? மக்கள் புரட்சி ஏற்படுவதற்காக, இன்னுமோர் ஆறுமாதம் நாம் காத்திருக்க வேண்டியதாயிற்று. மக்கள் புரட்சி ஏற்பட்டபோதுதான், எல்லா விஷயங்களும் ஒழுங்குபட்டன.

அது எப்படியாஞல் என்ன? மிராசுதார் என் வார்த்தைகளைக் கேட்டுச் சிரித்தார்; விழுந்து விழுந்து சிரித்தார். அந்தச் சிரிப்பிலே, மிஷ்காவையும் அன்டோஷ்காவையும் சரியாய்க் கூப்பிடக்கூட அவரால் முடியவில்லை.

அவர்கள் இருவரும் ஓடிவந்தார்கள். அவர்களைக் கண்டபோது, அவர்கள் இருவரும் இந்த மூன்ருண்டுக் காலத்தில் எவ்வளவு கொழுகொழு என்று வளர்ந்திருக்கிருர்கள் என்று நான் வியப்புற்றேன்.

ஆரோக்கியமான குதிரைக் குட்டிகள் மாதிரி அவர்கள் வளர்ந்திருந்தார்கள்.

அவர்களைப் பார்த்து, "வாருங்கள், இதோ இந்தப் பரட்டைத் தலை நாயை அடித்துத் துரத்துங்கள். இவள் கீயெப் நகரில் தான் கற்ற பிதற்றலைப் பிதற்றிக்கொண்டு, இங்கே நம்மைத் தொல்லை செய்ய வந்திருக்கிருள்" என்ருர் மிராசுதார்.

மிராசுதாரின் மூத்த மகனை மிஷ்கா என்னைத் துரத்த மறுத்து விட்டான். "வேண்டாம்; அவளைத் துரத்த வேண்டாம்" என்று அவன் சொன்னன். ஆனல், அவன் தம்பியான அன்டோஷ்கா, காட்டெருமை பாய்வது போல் என் மேல் பாய்ந்தான்.

அவன் என்னை உதைத்தான். முற்றத்திலேயிருந்து வெளியே இழுத்துக் கொண்டுபோய்த் தள்ளினன். அங்கே நானும் அவனுமே இருந்தோம். திடீரென்று நானும் அவனும் ஒருவர் முகத்தை ஒருவர் எதிரெதிரே பார்த்துக்கொண்டு நின்ருேம்.

அவன் சிரித்தான். பின்பு "அன்யுக்தா, அப்பா சொன்னதால்தான் நான் உன்னை முற்றத்திலேயிருந்து அடித்து விரட்டினேன். ஆனல், உனக்கு இஷ்டமானல், எங்களிடமே வேலைக்கு அமரலாம். அமர்ந்து ஈ ஓட்டலாம்" என்ருன்.

அவனுடைய கேலி வார்த்தைகளைக் கேட்டதும், எனக்குத் தலைகால் புரியவில்லை. மடத்தனமான அவனுடைய பழிச் சொற்களால் நான் என்னை மறந்து போனேன்.

கிணற்றருகே நட்டிருந்த குத்துக் கால் ஒன்றைச் சட்டென்று பிடுங்கினேன். அதைக் கொண்டு மிராசுதாரின் மகன் அன்டோஷ்காவை நன்ருய் மொத்தி விட்டேன். இரண்டு தடவை மொத்தினேன். மேலும்

மொத்தினேன். பின்பு, சம்மட்டியடிப்பது போல மடமட வென்று மொத்திக்கொண்டே யிருந்தேன் என்று தோன்றுகிறது.

என் பேராத்திரத்தைக் கண்டு, அவன் நடுநடுங்கிப் போனுன். ஒரு பெண் இப்படியும் ஆத்திரம் கொள்ளக் கூடும் என்று அவன் நினைக்கவே யில்லை.

பயத்தால், "ஐயையோ! அவள் என்னை அடிக் கிருளே!" என்று கூச்சலிட்டான்.

பின்பு, வாயாலும் மூக்காலும் ரத்தம் கொட்ட வீட்டுக்குள்ளே ஓடினுன்.

எனக்கு அப்போதுதான் சுய நினைவு வந்தது. அந்த இடத்தை விட்டு அகன்று போய்விட்டேன். யாரா வது என்னைத் துரத்திக்கொண்டு ஓடிவருகிருர்களோ என்று நான் திரும்பிக்கூடப் பார்க்கவில்லை. அந்த நேரத்தில், நான் துளியும் கவலைப்படவில்லை. இது எனக்கு நன்ருய் ஞாபகமிருக்கிறது.

தாமே என்னைத் தம் கைத்துப்பாக்கியால் சுட்டு விட வேண்டுமென்று மிராசுதார் விரும்பினுராம். ஆனுல், நான் நகர ஸோவியத்தில் ஓர் அங்கத்தினள் என்று யாரோ அவருக்குச் சொன்னுர்களாம். இதன் மேல் தான் அவர் என்னைச் சுடப் பயந்தாராம். இந்த விஷய மெல்லாம் பின்னுல்தான் எனக்குத் தெரியவந்தது.

ஆனுல், இதெல்லாம் அப்போது எனக்குத் தெரி யாது. நான் சற்றும் அஞ்சாமலே சென்றேன். இனிக் கிராமத்துக்குத் திரும்பிப் போவதேயில்லை என்று மாத் திரம் நினைத்துக் கொண்டேன்.

ஆனுல், பன்னிரண்டு வருஷம் சென்ற பின்பு, நான் மறுபடியும் கிராமத்துக்குத் திரும்பிப் போனேன். அப் போது அந்த மாவட்டத்திலேயே நான் இருந்தேன். ஒரு காரியமாக, கிராமத்துக்குத் திரும்பிப் போனேன்.

இது நடந்தது 1930-ஆம் ஆண்டு.

கிராமத்திலே மிராசுதாரின் வீட்டுக்குப் போனேன்.

ஆனால், கிழ மிராசுதார், வெகு நாளைக்கு முன்பே மறு உலகத்துக்குப் போய்விட்டார் என்று கண்டேன். மிஷ்கா, அன்டோஷ்கா இருவரையும் அந்த மாவட்டத்தை விட்டே வெளியேற்றிவிட்டார்கள். அவர்களுடைய உறவினர் எவரையும் அங்கே காண வில்லை.

நான் அந்தக் குடிசைக் குள்ளே நுழைந்தேன்.

அவர்களுடைய குடிசையில் இலவச வாசகசாலை ஒன்று அமைந்திருந்தது.

இந்த வாசகசாலைக்கு உள்ளே நுழைந்தபோது, எனக்குத் திடீரென்று சிரிப்பு வந்தது. பழைய நடப் பெல்லாம் ஞாபகம் வந்தது. நான் ஒருபோதும் குரூர மாய் நடந்ததில்லை. பிறர் துன்பப்படும்போது, என் உள்ளம் இளகிவிடும். ஆனாலும், இந்தக் குடிசைக்குள் நுழைந்தபோது, நான் சரிக்கத்தான் சிரித்துவிட்டேன்.

"எதற்காகச் சிரிக்கிறீர்கள் ?" என்று வாசகசாலை யின் மானேஜர் என்னைக் கேட்டாள். இயல்பாகவும் கள்ளங்கபடில்லாமலும் நடந்துகொள்ளும் மனோபாவம் அப்போது எனக்கு ஏற்பட்டிருந்தது. ஆகவே, இயல் பாகவும் கள்ளங்கபடில்லாமலுமே அவளுக்கு நான் பதில் சொன்னேன்.

நான் சொன்ன பதில் இதுதான்: "மக்கள் புரட்சி ஏற்பட்டு விட்டது என்றே நான் சிரிக்கிறேன். அந்தப் புரட்சியால், என் ஆசைகள் நிறைவேறி விட்டன."

மானேஜருக்கு நான் சொல்வதொன்றும் புரிய வில்லை. அவள் சொன்னாள்: "ஒரு வேளை நீங்கள் படிக்க ஏதாவது புத்தகம் வேண்டுமோ? உங்கள் கலை ஞானத்தை உயர்த்திக்கொள்ள விருப்பமோ?"

இதற்குமேல் நான் என்ன செய்தேன் என்று எனக்கு ஞாபகமில்லை. ஏதோ ஒரு புத்தகத்தை வாங்கிக் கொண்டதாக மட்டும் ஞாபகம். ஆனால், அந்தப் புத்தகத்தை அந்த நாட்களில் நான் படிக்கவில்லை. ஏனென்றால், புத்தகங்கள் இல்லாமலே, அப்போது என் உள்ளம் பூரித்துப் பொங்கியிருந்தது.

6. கீயெப் நகரில்

புரட்சிக்கு முந்திய வாழ்க்கையை மறுபடியும் பார்க்கலாம். ஏறக்குறைய என் பதினொருவது வயது வரைக்கும் அந்தப் பணக்கார மிராசுதார் டியேவின் வீட்டிலேயே நான் வசித்து வந்தேன்.

எனக்குப் பதினாறு வயது ஆயிற்று. ஒரு காலத்தில் தொழிற்சாலையில் என்னோடு வேலை செய்து கொண்டிருந்த என் சிநேகிதன் ஒருவன், கீயெப் நகரிலிருந்து கிராமத்துக்கு வந்தான்.

அவனுக்கு என்னிடம் பிரியம் விழுந்தது.

"அனுஷ்கா, இந்த மிராசுதாரை விட்டுத்தொலை. நாம் இருவரும் கீயெப் நகருக்குப் போவோம். அங்கே நான் உனக்கு ஏதாவது வேலை சம்பாதித்துத் தருகிறேன். நான் இப்போது அங்கேதான் ஒரு வர்ணக் கடையில் வேலை பார்த்துக்கொண்டிருக்கிறேன். உனக்கு இஷ்டமானால், ஞாயிற்றுக் கிழமைகளில் நாம் ஒருவரை யொருவர் சந்திக்கலாம்" என்று அவன் என்னிடம் சொன்னான்.

நானும் அப்படியே என் மிராசுதாரை விட்டுத் தொலைத்தேன். கீயெப் நகருக்குப் போனேன்.

சீக்கிரத்திலேயே ஒரு சீமாட்டியின் வீட்டில் எனக்கு வேலை கிடைத்துவிட்டது-சமையல்காரி வேலை.

ஆனால், அவள் நிஜமான சீமாட்டி அல்ல. இதை நீங்கள் தெரிந்து கொள்ள வேண்டும். அவளுடைய

புருஷன், ராணுவ சப்ளைக் கண்டிராக்டர். எந்த நேரமும் அவன் வெளியே போய் விடுவான்.

சீமாட்டி, ஒரு சின்னத் தொப்பிக் கடை வைத்திருந்தாள். ஆனால், அந்தத் தொப்பிக் கடைக்குள் அவள் ஒரு நாளும் போனதேயில்லை. காரணம், அவளுக்கு எப்போதும் வியாதியா யிருந்ததே. கடையில் யாரை யாவது வேலைக்கு வைத்து விட்டு, லாபத்தை மாத்திரம் அவள் தன் ஜேபியில் போட்டுக் கொள்ளுவாள். ஒருவர் உழைப்பதும் மற்றொருவர் லாபத்தை அடித்துக் கொள்வதும், அந்தக் காலத்து வழக்கமா யிருந்தது. இது என்ன விபரீதம் என்று யாரும் யோசிப்பதே யில்லை. அப்போது இது-இந்தச் சுரண்டல்-மிகச் சாதாரணமாய் நடந்துகொண் டிருந்தது.

இந்தச் சீமாட்டிக்கு ஒலியென்கா என்று ஒரு மகள். ஒலியென்காவை எப்போது நினைத்தாலும் எனக்கு விசுவாசம் உண்டாகிறது. அவள்தான் எனக்கு எழுதப் படிக்கச் சொல்லிக் கொடுத்தாள். தானும் அப்போது ஹைஸ்கூலில் உயர்வகுப்பில் படித்துக்கொண் டிருந்தாள். எந்த நேரமும் சிரித்த முகம். அவளுடைய வயதுக்கு அவள் மிக நல்ல படிப்பாளி. சகல ஆண்களும் அவளைச் சுற்றிக்கொண்டு திரிவார்கள். ஓர் உத்தியோகஸ்தர் அவளிடம் கொண்ட காதலால், தம்மைத் தாமே சுட்டுக் கொள்ளக் கூட எத்தனித்தார்.

அப்படியிருந்தும், எனக்குப் பாடம் போதிக்க, அவளுக்கு நேரம் இருந்தது. பூகோளம், இலக்கியம், கணக்கு, தாவர சாஸ்திரம் ஆகிய எல்லாம் அவள் எனக்குச் சொல்லிக் கொடுத்தாள்.

மொத்தத்தில், அவள் எனக்குப் படிப்புச் சொல்லிக் கொடுத்ததற்காக, அவளிடம் எனக்கு மிகுந்த நன்றி. அவள் படிப்புச் சொல்லிக் கொடுத்ததால்

தானே, புரட்சிக்காலத்தில் நான் பரம மூடமா யில்லா திருந்தேன் ?

இந்த ஒலியென்கா பின்னால் கலியாணம் செய்து கொண்டு, கீயெப் நகரை விட்டுப் போய்விட்டாள். அவள் இப்போது எங்கே இருக்கிறாளோ, எனக்குத் தெரியாது.

அவர்களிடம் நான் இரண்டு வருஷம் உழைத்தேன். வீட்டை விட்டு வெளியே எங்கேயும் நான் போனதே யில்லை. என்னைக் கீயெப் நகருக்கு அழைத்துக் கொண்டு போன சிநேகிதனைச் சேனையில் சேர்த்து, போர்முனைக்கு இழுத்துக்கொண்டு போய்விட்டார்கள். அவனைக் கட்டாய ராணுவ சேவையில் சேர்த்துக் கொண்டு விட்டார்கள்.

ஸ்டேஷனுக்குப் போய் அவனை நான் வழியனுப்பினேன். அதற்குப் பின் அவன் என்ன ஆனானோ, எனக்குத் தெரியாது. யுத்தத்திலே அவன் மாண்டு போயிருக்கலாம்; அல்லது தப்பித்து ஓடியிருக்கலாம். அது எப்படியானாலும் சரி; அவனைப்பற்றி எனக்கு ஒரு தகவலும் கிடைக்கவில்லை.

என்னை விட்டுப் பிரிய நேர்ந்ததில், அவனுக்குப் பெருந்துக்கம் உண்டாயிற்று. புதிதாய்க் கலியாணமான பெண்ணும் மாப்பிள்ளையும் போல, ஸ்டேஷனிலே நாங்கள் ஒருவரை ஒருவர் முத்தமிட்டுக் கொண்டோம்.

மிக நெருங்கிய உற்றார் உறவினரை இழந்து இழந்து என் மனம் உரத்து விட்டது. ஆகவே, இந்தச் சிநேகிதனை இழந்ததில் எனக்கு வருத்தம் உண்டாகவில்லை.

இதற்குப் பின்பு, நான் முன்னிலும் கடுமையாய் உழைத்தேன். தனிமையின் வெறிப்பை மாற்றிக் கொள்ளவே அப்படி உழைக்கத் தொடங்கினேன்.

சமையல் தொழிலில் என்னுடைய ஞானத்தை வளர்த்துக் கொள்வதற்காக, சமையல் சாஸ்திரக் கலாசாலைக்குக் கூடப் போய்ப் படித்தேன்.

இந்தக் கலாசாலைக்குப் போய்வர, என் எஜமானியும் அநுமதி கொடுத்தாள். நான் அவளுக்கு முதல்தரமாய்ச் சமைத்துப் போடவேண்டும் என்பது அவள் ஆசை. மாலையில் சமையல் கலாசாலைக்குப் போய்வர, அவள் என்னை அநுமதித்தாள்.

ஆனால், பாவம்! என் சமையல் படிப்பால் அவள் லாபம் அடையவில்லை. ஏனென்றால், சில நாளிலேயே நான் அவளை விட்டுக் கிளம்பிவிட்டேன். அவள் வீட்டை விடப் பெரிய இடம் எனக்குக் கிடைத்துவிட்டது. அது ஒரு தளபதியின் வீடு.

7. தளபதியின் மனைவி

நான் வசித்த வீட்டுக்குப் பக்கத்திலே, தன்னந் தனியான ஒரு மாளிகை இருந்தது. அதில் தளபதியின் மனைவி ஸ்ரீமதி நினை விக்டராவ்னா துபஸாவா வசித்தாள். நெட்லர் என்ற பிரபுவின் மகள். நல்ல வாலிபம். பார்வைக்கும் அழகா யிருந்தாள். வயது முப்பது இருக்கும்.

தளபதி துபஸாவ் சதாகாலமும் போர்முனைக்குப் போய்விடுவார். எப்போது பார்த்தாலும் வேலை செய்து கொண்டே யிருப்பார். தளபதியின் மனைவி, குபேர பட்டணத்துப் பெண்போல வாழ்ந்தாள்.

அவர்கள்-இந்தத் துபஸாவ்கள்-மகா பணக்காரர்கள். அவர்களுக்கு உக்ரேனில் ஏராளமான கிராமங்கள் சொந்தமா யிருந்தன. குடியானவர்கள் எந்த நேரமும் பற்பல உணவுத் தானியங்களையும் பிற வினை பொருள்

களையும் அவர்களுக்குக் கொண்டுவந்து கொடுத்துக் கொண்டே யிருப்பார்கள். அவையெல்லாம் போதா என்று, அவர்களைத் தலைபணிந்து, அவர்களின் கைகளை யும் முத்தமிடுவார்கள். அந்தக் குடியானவர்கள் முந்நூற் றறுபது நாளும் உழைத்தார்கள். அவர்களுக்குப் பதி லாக ஸ்ரீமதி துபஸாவ் ஓய்வு அநுபவித்துக்கொண் டிருந் தாள்; உலகத்திலே என்ன என்ன சுகங்கள் உண்டோ அத்தனையையும் அவள் ரசித்து அநுபவித்தாள். இப்படி யெல்லாம் நடந்ததா என்று எண்ணிப் பார்த்தால், இப்போது நம்மால் நம்பவே முடியவில்லை.

சுருக்கமாகச் சொன்னால், சீமாட்டி போகபாக்கியங் களிலே மூழ்கிக் கிடந்தாள். குறை என்பதே அவளுக்குத் தெரியாது.

அவளிடம் மூன்று சேவகர்கள் இருந்தார்கள். போர் முனையிலிருந்து வீட்டுக்கு வரும்போது தளபதி வேறே இரண்டு சேவகர்களைக் கூட்டிக் கொண்டுவருவார். இந்த இரண்டு பேருக்குப் பணிவிடை செய்ய, இவ்வளவு வேலைக்காரர் எதற்கு என்று நினைத்தால் வேடிக்கையா யிருக்கிறது. இந்த வேலைக்காரர்களைத் தவிர, இரண்டு குதிரைக் காசாரிகள், இரண்டு வாசல் காவலர்கள், ஒரு வேலைக்காரி, ஒரு கரி தள்ளி, ஒரு சமையல்காரி-இத்தனை பேர் அவர்களிடம் இருந்தார்கள். தளபதிதான் எந்த நேரமும் போர் முனைக்குப் போய் விடுவாரே; அதனால் இத்தனை பேரின் பணிவிடையையும் சீமாட்டியே அநுப வித்துக்கொண் டிருந்தாள். அவளுக்கோ எந்த நேர மும் தலைவலியும் காய்ச்சலும் வந்துகொண்டே யிருக்கும்.

தன் வீட்டு மாடியில் இருந்தபடி சீமாட்டி என்னைப் பல முறை பார்த்திருக்கிறாள். என் எஜமானியை விட்டு விட்டுத் தன்னிடம் வந்துவிடும்படி, அவள் எனக்குச்

சொல்லி அனுப்பினுள். என்னைப் பார்த்ததுமே அவளுக்குப் பிடித்துப் போயிற்ரும். இது தான் காரணம்.

எனக்கு இரண்டு பங்கு சம்பளம் கொடுப்பதாகவும் அவள் சொன்னுள். நான் பழைய வீட்டில் ஆறு ரூபிள் சம்பளம் வாங்கிக்கொண் டிருந்தேன். தளபதியின் மனைவி பன்னிரண்டு ரூபிள் கொடுப்பதாகச் சொன்னுள். அந்தக் காலத்தில் பன்னிரண்டு ரூபிள் என்ருல், பெரிய தொகை.

ஆகவே, நான் அவளிடம் வேலைக்குப் போய் விட்டேன். அவள் மகா பித்துப் பிடித்தவள் என்று வெகு விரைவிலே நான் தெரிந்துகொண்டேன். எதற் கெடுத்தாலும் சிடுசிடுத்து, பிசாசு மாதிரி கூச்சலிட ஆரம்பித்து விடுவாள்.

எந்த வேலைக்காரர்களுக்கும் அவளைச் சகிக்க முடிய வில்லை. ஒவ்வொரு நாளும் யாராவது ஒரு வேலைக்காரனை அவள் வேலையை விட்டுத் தள்ளிக்கொண்டே யிருந் தாள். இது தவிர, சம்பளமும் கொடுப்ப தில்லை. வாசல் காவலாளியிடம் அவளுக்குக் கோபம் வருகிறது என்று வைத்துக் கொள்ளுங்கள். நியமன உத்தரவின் நகலை அவன் மூஞ்சியிலே அவள் விட்டெறிவாள். "இந்த நிமிஷமே போ வெளியே!'' என்று கத்துவாள். சம்பளம் கொடுக்கவில்லை என்று அவள் மீது எந்தக் கோர்ட் டிலும் வழக்குத் தொடர முடியாது.

கூப்பிட்ட குரலுக்கு ஏன் என்று கேட்க மூன்று வேலைக்காரர்கள் அவளிடம் உண்டு. அவர்களை அவள் நாள்தோறும் அடித்து நொறுக்குவாள். இப்போ தென்ருல், எந்தப் புருஷனுங்கூடத் தன்னிடம் வேலை செய்யும் வேலைக்காரர்களை இப்படி அடிக்கத் துணி

வாளு ? அப்போதோ இந்தச் சந்தேகமே எழவில்லே. அடிப்பது மிகவும் நியாயம் என்றே எல்லாரும் எண்ணி யிருந்தார்கள். அற்பக் குற்றங்களுக் கெல்லாம் அவள் இப்படி அடிப்பாள்.

வேலேக்காரர்களே முகத்திலே அடிப்பாள். அவளுக்குக் கோபம் வந்து அடித்தாள் என்பதுகூட இல்லே; அடிப்பது அவளுக்கு ஒரு வழக்கமாகப் போய்விட்டது.

அவர்களோ சிப்பாய்கள் அல்லவா ? தங்களே அவள் அடிக்கும்போது வாயே திறக்கமாட்டார்கள். உடம்பை அசைக்கக்கூட மாட்டார்கள். அணிவகுப்பில் நிற்கும் சிப்பாய்கள் மாதிரி அசையாமல் நிற்பார்கள்.

ஒரே ஒரு வேலேக்காரன் மட்டும், தற்காப்பாகக் கையைத் தூக்கிவிட்டான். பொராவ்ஸ்கி என்று அவனுக்குப் பெயர்.

அவள் கொடுக்க வந்த அடிகள் தன் முகத்திலே விழாமல் தடுப்பதற்காக, அவன் கைகளேத் தூக்கி மறைத்துக் கொண்டான். "நிறு விக்டராவ்ளு, என் உள்ளம் கொதிக்கிறது. இன்னும் ஓரடியும் தாங்க மாட்டேன். அடித்தாயாளுல், நான் என்ன செய்வேளுே, எனக்கே தெரியாது; சொல்லிவிட்டேன்" என்ருன்.

அவளேக் கையால் மெல்லத் தள்ளவும் தள்ளிவிட்டான். அவள் மிதமிஞ்சிப் போகாம லிருப்பதற்காகவே, இப்படி அவன் தள்ளிஞன். உடனே, அவள் தாளுக வேண்டுமென்றே திடீரென்று தரையில் விழுந்து உருண்டாள். பெருங் கூச்சல் போட்டாள். பிசாசு போல் வீறிட்டாள். என்ன நடந்துவிட்டது என்று பார்ப்பதற்காக, சுற்றிலும் பல மைல் தூரத்திலிருந்த மக்களெல்லாம் ஓடி வந்துவிட்டார்கள்.

பொராவ்ஸ்கி கைதியாகிச் சிறை சென்ருன்.

8. புதிய சமையல்காரி

இதில் என்ன வேடிக்கை என்ருல், இதற்குப் பிறகும் அவள் கொஞ்சம்கூடச் சாந்தமாய் நடக்கவில்லை. பழையபடி சேவகர்களை அடித்துக்கொண்டேதான் இருந்தாள்.

ஆனுல், ஒன்று; ராணுவ சிப்பாய்களான வேலைக்காரர்களைத்தான் அடிப்பாள். மற்றவர்கள் விஷயத்தில் சற்று ஜாக்கிரதையாகவே இருந்தாள். அவர்களையும் அடித்துவிடுபவள் போல அடிக்கடி கையைத் தூக்குவாள். ஆனுல், அடிக்கமாட்டாள்.

ஒரு சமயம் என்னிடமே அவள் பாய்ச்சுக் காட்டிஞள். என்னை அடிக்கக் கையைத் தூக்கிஞள்.

ஆனுல், நான் மிக அமைதியாக வெடுக்கென்று இப்படிச் சொல்லிவிட்டேன்: "நிஞ விக்டராவ்ஞ, இந்தா, இதை மாத்திரம் தெரிந்துகொள்: என்மேல் உன் விரல் பட்டதோ, நான் என்ன செய்வேஞே? எனக்கே தெரியாது. அப்புறம் என்னைச் சொல்லிப் பயனில்லை."

அந்தக் காலத்தில் நான் நல்ல பலசாலியாயிருந்தேன். தேகாரோக்கியத்தோடிருந்தேன். என் உடம்பு கொழு கொழு என்று பூரித்திருந்தது. ஓர் உதாரணம்: நான் அந்தக் காலத்தில் ஒரு பதக்கம் அணிந்திருந்தேன். எல்லார் பதக்கங்களும் தொங்குவது போல, அது என் மார்பிலே தொங்குவதில்லை. என் பதக்கம் தட்டையாக நிமிர்ந்து நிற்கும். நான் குனியாமலே அதைப் பார்க்க முடியும். குனிந்தேஞனுல், அது இன்னும் நிமிர்ந்துவிடும். இது எனக்கு அப்போது அதிசயமாகவே தோன்றவில்லை.

இது எப்படியானாலும் சரி, நான் அப்போது மிகமிகத் தேகாரோக்கியத்தோ டிருந்தேன். எனக்கு இஷ்டமானால், அந்த நினா விக்டராவ்னாவை நான் ஓர் அறையிலிருந்து இன்னோர் அறைக்கு அலக்காய்த் தூக்கி எறிந்திருக்க முடியும். அதுவும் அவள் உருவத்தில் சிறுத்துப் பஞ்சையா யிருந்தாள். ஆள் பகட்டுத் தான். ஆனால், எலும்பும் தோலுமான கறுப்பாயி. அவள் வீட்டுக்கு வந்த விருந்தாளிகள் எல்லாம், அவளைப் பார்க்க மாட்டார்கள்; என்னையேதான் பார்ப்பார்கள். இதைக் கண்டு அவள் எரிச்சல் மூண்டு, நிம்மதியிழந்து போவாள்.

அந்தக் காலத்தில் நான் அதிரூப சுந்தரியா யிருந்தேன் என்று சொல்லிக் கொள்ளவில்லை. ஆனால், எத்தனையோ பேர் என்னிடம் பிரியம் கொண்டார்கள். என் தேகாரோக்கியமே அவர்களுடைய கவனத்தைக் கவர்ந்தது. தேகாரோக்கியத்தால் நான் பூரித்துப் பொங்கி யிருந்தேன்.

என் குறைகளையும் சொல்லவா? என் கைகளே எனக்குத் தீமையைத் தேடிக்கொடுத்தன. பிற்காலத்தில் வெண் சேனை வீரர்கள் என்னைக் கிரிமியாவில் பிடித்துக்கொண்ட போது, என் கைகளே என்னைக் காட்டிக் கொடுத்தன. நான் யார் என்று ஒரு கணத்தில் அவர்கள் கண்டுகொண்டார்கள். வேலை செய்து வேலை செய்து காய்த்துப் போயிருந்தன என் கைகள். அடுப்பங் கரையிலே ஓயாமல் உழைத்து, அக்கினி போல் சிவந்திருந்தன என் கைகள். அவை பெரிய ஆண் பிள்ளைக் கைகளா யிருந்தன. பணக்காரர்களின் கண்ணிலே இது மிகப் பெருங் குறையாகப் படும் அல்லவா? கைகள் வெள்ளை வெளேர் என்று வெளுத்து, வேலை

செய்ய முடியாது திக்கற்றவர்களாய்க் காட்சியளிப்பதற்காக, பணக்காரப் பெண்கள் தங்கள் கை ரத்தத்தை உறிஞ்ச அட்டைகளைக்கூட அந்தக் காலத்தில் கைகளிலே கடிக்கவிட்டுக் கொள்வார்கள். நாசூக்கான ஆட்டுத் தோல் கையுறைகளைப் போட்டுக் கொண்டுதான் அவர்கள் படுக்கப் போவார்கள். ஏனென்றால், அந்தக் காலச் சமுதாயத்தில் வேலை செய்வதென்றாலே பெருத்த அவமானமாய் மதித்தார்கள். நீங்கள் தொழிலாளி வர்க்கத்தைச் சேர்ந்தவர் என்று காட்டிவிடக் கூடிய எதையுமே செய்துவிடாமல் ஜாக்கிரதையா யிருந்தால் தான் தப்பலாம்.

பொதுவாய்ச் சொல்லப் போனால், மெல்லிசான கை, அழகாய்த்தான் இருந்தது. அந்த மாதிரி கைகள் எனக்கும் இருந்திருக்குமானால், நான் சந்தோஷமே அடைந்திருப்பேன். ஆனால், எனக்கு மெல்லிசான கைகள் இல்லையே என்று அன்று நான் அழ வில்லை. என் வாழ்க்கையில் பெருங் கொந்தளிப்புகள் நிறைந் திருந்தன. என் கைகளைப் பார்த்து, என்னை இழிவாய் நோக்கிய மனிதர்களிடையே நான் வாழ்ந்தேன். இது தான் எனக்குச் சங்கடமா யிருந்தது.

இதற்குப் பின்பு வெகு காலம் நான் என் கையால் பாடுபட்டு உழைக்க வில்லை. என் கைகளும் இயற்கையாக மாறின. என்றாலும், அவை அசாதாரணக் கைகளாகவே விளங்கின. இதைக் கண்டு அநேக சமயம் நான் சள்ளைப்பட்டேன். ஏனென்றால், என் நோக்கங்களை அடைய, நான் என் எதிரிகளை ஏமாற்ற வேண்டியிருந்தது. அதற்கு, நீல நரம்போடிய வெண்மையான சீமாட்டிக் கைகள் எனக்குத் தேவையா யிருந்தன.

9. சீமதியின் விருந்தாளிகள்

இவையெல்லாம் போகட்டும். நான் என்ன சொன்னேன்? தளபதியின் மனைவி ஸ்ரீமதி நினு விக்டராவ்னு துபஸாவாவுக்குச் சமைத்துப் போடப் போனேன் என்று அல்லவா?

அவளுக்கு என்னிடம் மிகவும் பிரியம் உண்டாயிற்று. ஏனென்றால், அந்தக் காலத்தில் நான் பார்வைக்கு அழகா யிருந்தேன். இது அவளுக்கு உவப்பா யிருந்தது. தங்களைச் சுற்றிலும் உள்ள எல்லாப் பொருள்களும் மனிதர்களுமே அழகாய் இருக்க வேண்டும் என்று சில சீமாட்டிகளுக்கு ஓர் ஆசை. அப்படிப்பட்ட நேர்த்தியான சீமாட்டிகளில் அவளும் ஒருத்தி. பார்வைக்கு அழகானவர்களையே எப்படியோ அவள் தன் வேலைக்காரர்களாகப் பொறுக்கி விடுவாள்.

வீட்டுக்கு வரும் விருந்தாளிகளுக்கு ஒரு வேலைக்காரன் கதவைத் திறந்து விடுவான். அவன் அழகைக் கண்டு விருந்தாளிகள் வியப்பார்கள். அதைப் பார்த்துச் சீமாட்டி களிப்பாள். அவளுடைய வீண் டம்பத்துக்கும் வறளிப் பெருமைக்கும் இது திருப்தி அளித்தது.

ஆனால், நானோ சமையல்காரி. அதனால், விருந்தாளிகளுக்கு நான் கதவு திறந்துவிட வேண்டிய அவசியமில்லை. பகல் வேளையா யிருந்தால், சேவகர்கள் கதவு திறக்கிறார்கள்; இரவு வேளையா யிருந்தால், வேலைக்காரி கதவு திறக்கிறாள். நான் எதற்காகத் திறக்க வேண்டும்?

என்றாலும், நானும் கதவு திறக்க வேண்டும் என்று சீமாட்டி பிடிவாதம் பிடித்தாள்.

ஆகவே, மாலை வேளையில் யாராவது மணி அடித்தால், நானும் கதவு திறக்கத் தொடங்கினேன். சீமாட்டியின் சொந்த வேலைக்காரிக்குக் காட்யா என்று பெயர். விருந்தாளிகளுக்கு அந்த வேலைக்காரி போய்க் கதவு திறந்து விடுவதில் சீமாட்டிக்குச் சம்மத மில்லை. ஏனென்றால், வேலைக்காரி காட்யா உருவத்திலும் சரி, கண்ணிமைக் கறுப்பிலும் சரி, வேலைக்காரியாகத் தோன்றவில்லை; சீமாட்டிக்கே எஜமானியாகத் தோன்றினாள். இது சீமாட்டிக்குச் சங்கடமா யிருந்தது. நண்பர்களின் கண்களில் தன் கௌரவம் குறைந்து போவதாகவும் அவள் எண்ணினாள்.

ஆயினும், மாலை நேரத்தில்தான் விருந்தாளிகளுக்கு நான் கதவு திறந்து விட்டேன்.

ஆனால், அதுவும் வெகு நாள் நீடிக்க வில்லை. ஏனென்றால், அவள்தான் அசட்டுப் பிணமாயிற்றே. அவள் காதல் கொண்ட ஓர் உத்தியோகஸ்தனை நான் பிடித்துக் கொண்டதாக அவளுக்குப் பொறாமை உண்டாகி விட்டது.

யூரி புரகாப் என்ற ஒரு வாலிப உத்தியோகஸ்தன், நாள்தோறும் சீமாட்டியைப் பார்க்க வருவான். அவன் ஒரு பொம்மைபோல் மிக அழகா யிருந்தான்.

அந்த மாதிரி வேறோர் அழகனை நான் பார்த்ததேயில்லை. அவன் ஒரு கந்தர்வனைப் போல் இருந்தான். கன்னத்திலே ஒரு திருஷ்டிப் பொட்டு இருந்தது. உதடுகளுக்குச் சிவப்பு வர்ணம் பூசி யிருந்தான். அவன் வரும் போதெல்லாம் ஒரு சிறு பெட்டி கொண்டு வருவான். அதிலே வாசனைப் பவுடர் இருந்தது. அந்தப் பவுடரை எடுத்து, சற்று நேரத்துக் கொரு தடவை தன் தேகத்

திலே அவன் ஒற்றிக் கொள்வான், ஏன்? தன் தோல் மகா மிருதுவா யிருக்கவேண்டும் என்பது அவன் ஆசை.

இப்படி அவன் பொம்மைபோல் தோன்றிய தோற்றம், முதலில் எனக்கு வேடிக்கையா யிருந்தது. இந்த மாதிரி மென்மையான புருஷர்களும் உலகத்தில் இருக்கிறார்கள் என்றே அதற்குமுன் எனக்குத் தெரியாது. முதல் முதலில் அவனைப் பார்த்தபோது, எனக்குச் சிரிப்புச் சிரிப்பாய் வந்தது. பித்தியைப்போல் சிரித்தேன். பொம்மை மாதிரி இருந்தது மட்டும் அல்லாமல், அவன் ஒரு குழந்தையைப் போலும் நடந்து கொண்டான். எதற்கெடுத்தாலும் முகத்தைச் சிணுங்குவான்; கீச்சிடுவான். தலைவலி வந்து விட்டதென்று சோபாவில் சாய்வான்.

ஆனால், நினாவுக்கோ, அவனிடம் பித்துப் பிடித்தது போல் காதல் உண்டாகிவிட்டது. அவனைத் தெய்வமாய்ப் போற்றினாள். அவனிடம் அவளுக்கு ஒரே பித்து. நாள் கணக்காய் அவனைப் பார்த்துக்கொண்டே இருந்தாலும் அவளுக்குப் போதும். உலகத்திலேயே அபூர்வ அற்புத சுந்தர புருஷன் அவனே என்று அவள் மதித்தாள்.

உண்மையிலேயே அவனை அவள் கொஞ்சினாள்.

தளபதி போர் முனைக்குப் போய்விடுவார். யூரி புரகாவ் நாள்தோறும் சீமாட்டியைப் பார்க்க வந்து விடுவான்.

அவன் பியானோவில் பாட்டுக்கள் வாசிப்பான். வாயாலும் பாட்டுக்களைச் சீட்டியடிப்பான். அவனுக்குத் தெரிந்த பாட்டெல்லாம் ஒரே சோகமாய்த்தான் இருக்கும். அந்த அத்தனை பாட்டுக்களிலும் இரண்டை மிக அடிக்கடி அவன் பாடுவான்.

ஓஹோ! கனவாய்க் கழிந்தது போச்சே!

என்பது ஒன்று;

உன் கொஞ்சும் மொழிகளில் வஞ்சியே,
என் நெஞ்சம் பறிமுதல் விஞ்சியே

என்பது இன்னொன்று.

இதெல்லாம் போக, கவிதைகளி லிருந்து அடிக்கடி அவன் மேற்கோள்கள் கூறுவான். (அவற்றில் சில, எனக்கு இன்னமும் ஞாபகம் இருக்கின்றன. ஏனென்ருல், அவற்றை நான் குறித்து வைத்துக் கொள்வது வழக்கம்.) அந்தக் கவிதைகளில் ஒன்று இதுதான்:

இன்பம் என்பதும் ஏதடா?
இதனை அறியார் எவரடா?
துன்பம் ஒழியத் தம்மை மாய்க்கத்
துப்பாக்கியினைத் தோளில் தாங்கி
மன்பதைகள் சிரித்தும் அழுதும்
வாழும் வாழ்வின் சிக்கலெல்லாம்
துடைக்கும் மருந்து சாவடா!

பிரெளனிங் கவிதைகள் அடங்கிய புத்தம் புதிய புத்தகம் ஒன்றை அவன் வாங்கி வைத்திருந்தான். அது அவன் கையை விட்டு அகலுவதே யில்லை. அவன் அடிக்கடி அதைக் கையில் பிடித்துக் கொடிபோல் ஆட்டுவான்.

10. களிப்பான நாட்கள்

ஆனல், சீமாட்டி என்னிடம் பொருமை கொண்டது வெறும் அசட்டுத்தனம். இந்த வாலிபனிடம் எனக்குத் துளியும் ஆசை விழவில்லை. அவன் நடந்து கொண்ட நடப்புத்தான் எனக்கு வேடிக்கையா யிருந்தது. ஆனுலும், அவன் மட்டும் சில சமயம் என்மீது வைத்த கண்ணை எடாமல் பார்த்துக்கொண் டிருப்பான். இது உண்மையே.

ஒரு சமயம் கூடத்திலே இருக்கும்போது, என்னிடம் அவன் சொன்னான்: "அன்யுக்தா, எங்கள் உயர் வகுப்புச் சமூகத்திலே உன் மாதிரி பெண்ணே கிடையாது. இது எனக்கு மிக வருத்தமாயிருக்கிறது. அவர்களெல்லாம் மெலிந்து பஞ்சடைத்த தோல் பொம்மைகள் போல் இருக்கிறார்கள். உன் மாதிரி ஒரு பெண்ணோடு நான் வாழ முடியுமானால், என் சோகமெல்லாம் தீர்ந்து விடும்!" என்றான்.

நான் அவன் மூஞ்சிக்கு நேரே சிரித்து, "நீர் இந்த மாதிரி விஷயங்களெல்லாம் பேசக்கூடாது" என்று சொல்லிவிட்டேன்.

ஆனால், அவன் என்னோடு பேசுவதே சீமாட்டிக்குப் பிடிக்க வில்லை. அவள் சொன்னாள்: "அன்யுக்தா, மிகவும் கீழான சமூகத்தைச் சேர்ந்தவள் நீ. உன்னிடம் பொறாமை கொள்வதென்றால், அது என் கௌரவத்துக் குத் தகாது. என்றாலும், இனிமேல் நீ போய்க் கதவு திறக்க விடமாட்டேன்" என்றாள்.

ஆனால், இதைப்பற்றி நான் கவலைப்பட வில்லை. ஏனென்றால், ஒளிக்காமல் சொல்லுகிறேன்: இந்த இரண்டு பேரையுமே எனக்குக் காணச் சகிக்கவில்லை.

இந்த வாலிப உத்தியோகஸ்தனுக்கு, அடுப்பங்கரையில் உள்ள நாங்கள் யுரோச்கா என்று பெயர் வைத்திருந்தோம். அவனோடுகூட அவனுடைய சிறந்த நண்பன் ஒருவன் வருவான். காப்டன் கிளப் ஸ்வெதயேவ் என்று அவனுக்குப் பெயர். அவன் முற்றிலும் வேறு மாதிரியானவன். அவனுமே மென்மையான அழகு படைத்தவன்தான். ஆனால், யுரோச்காவோடு ஒப்பிட்டுப் பார்த்தால், காப்டன் மிகவும் குஷியான ஆசாமி. நல்ல சுறுசுறுப்பானவன். தேகாரோக்கியம் உள்ளவன். தன்

நண்பன் யுரோச்காவைப் போல் நோய் பிடித்தவனு யில்லை. மற்றப்படி அவனும் அதே ரகத்தைச் சேர்ந்த வன்தான். அவனும் பவுடர் ஒற்றிக் கொண்டான். உதட்டுக்குச் சாயம் பூசிக்கொண்டான். அவன் கன்னத் திலும் ஒரு திருஷ்டிப் பொட்டு இருந்தது. பிரெஞ்சு நடிகன் அடால்ப் மெஞ்சோவைப் போல மெல்லிய கறுப்பு மீசை அவன் உதட்டிலே அரும்பி யிருந்தது.

இதெல்லாம் போக, மிக மெல்லிய லேடீஸ் சிகரெட்டு களை அவன் குடித்தான். புருஷர்களிடமே காதல் கொண்டான். அவன் அப்பிக் கொண்ட பவுடரைக் கண்டு, ஈக்களெல்லாம் பயந்தோடிப் போயின.

நினு அவனை மிக அழகனுக மதித்தாள்; அதாவது யூரி புரகாவுக்கு அடுத்தபடியான இரண்டாவது அழக னுக. அவனுடைய புன்சிரிப்பின் மோகனத்தால், ரோஜா மொக்குகளெல்லாம் இதழ் விரிந்துவிடும் என்று அவள் சொல்லுவாள். அதனுல் அவன் ஓயாமல் புன்சிரிப்புப் பூத்துக்கொண்டே யிருப்பான். ஆனுல், அவனுடைய புன்சிரிப்பிலே நான் ஒன்றும் சிறப்பைக் காண வில்லை. அது பொய்யான போலிப் புன்சிரிப்பு; அவன் மறுபுறம் திரும்பியவுடனே மறைந்துபோகும் புன்சிரிப்பு.

பின்னுல், இந்த உத்தியோகஸ்தனை நான் கிரிமியா வில் சந்தித்ததை இங்கே குறிப்பிடுவது ரசமா யிருக்கும். அப்போது அவன், புரட்சிக்கு எதிர்த் தரப்பில் யால்டா வில் ரகஸிய உளவு இலாக்காவில் சேவை செய்துகொண் டிருந்தான். அங்கேயும் கூட, சித்திரவதைக்கு ஆளான என் முகத்தைக் கண்டு அவன் இதே புன்சிரிப்புத்தான் பூத்தான். ஆனுல், அதெல்லாம் பிந்திய சதை.

ஸ்வெதயேவ் இன்னெரு சிநேகிதனை அழைத்துக் கொண்டு வந்தான். கவுண்ட் ஷிட்லாவ்ஸ்கீ என்று

அவனுக்குப் பெயர். அவனுக்குத்தான் என்ன துணிச்சல்! அவன் என்னவாவது உளறிக்கொண்டு, என்னைத் தொடர்ந்துகொண்டே யிருப்பான்.

மிருதுவாய்க் கொழு கொழு என்றிருந்த முகமும் விசித்திர நடவடிக்கைகளும் படைத்த அவனைக் கண்டு எனக்கு மிக வெறுப்பா யிருந்தது.

ஆனால், அவனோ தன்னை யாருக்கும் பிடிக்காமலிருக்க முடியாது என்றே மயங்கி யிருந்தான். என் மீது அவன் கை பட்டாலும், அருவருப்பால் என் உடம்பு நடுங்கும்.

இந்த உத்தியோகஸ்தர்களெல்லாம் நாள்தோறும் எங்கள் வீட்டுக்கு வருவார்கள். அவர்கள் குடிப்பார்கள்; ஆடிப்பாடுவார்கள்; சீட்டு விளையாடுவார்கள். ஒரே கேளிக்கைதான்.

சில சமயம், இரவு முழுவதும் குடிப்பார்கள். பிரமாதக் கூச்சலா யிருக்கும். இன்னும் என்னவெல்லாம் செய்வார்களோ, அதெல்லாம் எனக்குத் தெரியாது. அவர்கள் அழையாமல், வேலைக்காரர் எவரும் உள்ளே நுழையக் கூடாது.

இந்தக் கேளிக்கைகள் இல்லாமல், நினாவுக்கு ஒரு நாள்கூடப் போது போகாது. இந்தக் கேளிக்கைகளுக்குப் பிறகு, அவள் ஆரஞ்சுப் பழம்போல் மஞ்சளாய் மெலிந்துபோவாள். தேகம் தெம்பு குன்றாம லிருப்பதற்காக, ஹாப்மான் தேகபுஷ்டி மருந்துத் துளிகளை நாள் முழுவதும் அவள் குடித்துக்கொண் டிருப்பாள்.

புகழ் பெற்றவர்களெல்லாம் சில சமயம் எங்கள் வீட்டுக்கு விருந்தாளிகளாக வருவார்கள் - நடிகை வீரா கொலோத்நாயா, ஸினிமா நடிகர் ரூனிச் முதலியவர்கள். புகழ்பெற்ற பாடகரான வெர்ட்டின்ஸ்கீ ஒரு சமயம்

மாஸ்கோ நகரி லிருந்து வந்தார். தம்முடைய பிரசித்த மான பாட்டுக்களை அவர் பாடினர். அந்தப் பாட்டுக்கள் அப்படியே யூரி புரகாவின் இருதயத்தைக் கௌவி விட்டன. அவன் உள்ளம் உருகிக் கண்ணீர் விட்டான். "இந்தப் பாட்டுக்களைச் சதா காலமும் என் காதிலே பாடிக்கொண் டிருங்களேன்" என்று கெஞ்சினள்.

கிளப் ஸ்வெதயேவையும் இந்தப் பாட்டுக்கள் உள்ள முருக்கி விட்டன. அவனும் "ஐயோ! முழு உலகமுமே என் தலையை வந்து அமுக்குவதுபோ லிருக்கிறதே; அதி லிருந்து தப்ப வழியே காணேனே!" என்று புலம்பினன்.

பிப்பிரவரி மாதம் புரட்சி வரும்வரையில்-மாரிகாலம் முழுவதும்-நாட்கள் இப்படிக் கழிந்தன எங்கள் வீட்டிலே.

11. பிப்ரவரிப் புரட்சி

புரட்சி என்ருல் என்ன என்று எனக்கு அப்போது திட்டமாய்த் தெரியாது. அந்த வார்த்தையையே அது வரையில் நான் கேள்விப்பட்ட தில்லை.

இந்த விஷயத்தை எனக்கு விளக்கிச் சொல்லக் கூடிய மனிதர்களை நான் சந்தித்ததும் அபூர்வம். தொழிற்சாலையில் 'புரட்சி, புரட்சி' என்று பேச்சு நடந்த தென்னவோ உண்மைதான். ஆனல், அப்போது நான் மிகவும் இளம் பெண்; இதைப்பற்றி யெல்லாம் புரிந்து கொள்ள எனக்குச் சக்தி கிடையாது. பணக்கார மிராசு தார் டியேவின் வீட்டில் புரட்சி என்ற வார்த்தையைக் கேட்டிருக்க முடியாது.

ஏதோ அடர்த்தியான ஒரு காட்டில் வாழ்வதுபோல் நான் வாழ்ந்தேன்.

ஒரு நாள் நான் சந்தைக்குப் புறப்பட்டேன். வீதி யிலே போலீஸ்காரர்களைப் பள்ளிக்கூட மாணவர்கள்

மறித்துக்கொண்டு அவர்களுடைய ஆயுதங்களைப் பிடுங்கிக்கொண் டிருப்பதைக் கண்டேன். என் நெஞ்சு படபட என்று அடித்துக்கொண்டது. "ஏதோ விசேஷம் நடந்திருக்கிறது" என்று எனக்குள் நானே எண்ணிக் கொண்டேன்.

மேலும் நடந்தேன். ஒவ்வொரு சந்து முனையிலும் மாணவர்கள் பாராக் கொடுத்துக்கொண் டிருப்பதைக் கண்டேன். போலீஸ்காரர்களைக் கண்ணிலேயே காண வில்லை!

"என்ன நடந்தது?" என்று ஒரு மாணவனைக் கேட்டேன்.

"புரட்சி! இது புரட்சி!" என்று அவன் பதில் சொன்னான்.

ஆனால், இதெல்லாம் எப்படி நடக்கும் என்று அப்போது எனக்குத் தெரியாது. ஆகவே, 'என்னதான் செய்கிறார்கள், போய்ப் பார்ப்போம்' என்று தீர்மானித்தேன்.

என் கூடையைத் தூக்கிக் கொண்டு, மேலும் நடந்தேன். திடீரென்று பிரம்மாண்டமான ஒரு ஜனக் கும்பல் என்னை நோக்கி வருவதைக் கண்டேன். அவர்களில் சிலர் கைத் துப்பாக்கி வைத்திருந்தார்கள்; சிலர் செங்கொடி தாங்கி யிருந்தார்கள்; மற்றவர் வெறுங் கையோடு நடந்தார்கள்.

"தீனிச் சந்தைக்குப் போவோம். கைதிகளை விடுவிப்போம். வாருங்கள்! எல்லாரும் வாருங்கள்!" என்று அவர்களில் பலர் ஒரே கூச்சலாய்க் கத்திக்கொண் டிருந்தார்கள்.

கீயெப் நகரில் தீனிச் சந்தைக்குப் பக்கத்திலே பிரம்மாண்டமான ஒரு சிறைக்கூடம் இருந்தது. அதில் ஏராளமான அரசியல் கைதிகள் இருந்தார்கள்.

ஆகவே, நானும் அவர்களோடு கூட நடந்தேன். திடீரென்று நாங்கள் எல்லாரும் சேர்ந்தாற்போல் ஒரு புரட்சிப் பாட்டைப் பாடத் தொடங்கினோம். பாட்டின் வார்த்தைகள் மட்டும் எனக்குப் புரியவே யில்லை. பாட்டைப் பாடிக் கொண்டே, தீனிச் சந்தை இடத்துக்கு நாங்கள் சென்றோம். சிறையும் கண்ணில் தென் பட்டது.

உடனே ஜனக் கும்பல் கூச்சல் போட்டுக் கொண்டு, சிறைக் கட்டிடத்தை நோக்கிப் பாய்ந்தோடி, "எல்லாக் கைதிகளையும் விடுவியுங்கள்" என்று சிறை அதிகாரிகளை வற்புறுத்தியது.

நானும் இன்னும் சில வாலிபப் பெண்களும் சிறை மதில்மேலே தொற்றி ஏறி 'ஜம்' என்று அதன் உச்சியில் உட்கார்ந்து கொண்டோம். என்னதான் நடக்கிறது பார்க்கலாம் என்பது எங்கள் ஆவல். இன்னமும் என் கைக் கூடையை நான் விடவில்லை. சந்தையில் சாமான் வாங்கிச் சென்று, பன்னிரண்டு மணிக்கு என் சமையல் வேலையைத் தொடங்கி விட வேண்டாமா? அதனால்தான்.

இப்படியாக, கைக் கூடையோடு நான் மதில் உச்சியில் உட்கார்ந் திருந்தேன். பயங்கரமான ஒரு கூச்சல் கேட்டது. "கைதிகளை விடுங்கள் வெளியே!" என்று ஜனக் கும்பல் போட்ட கூச்சல்தான் அது. திடீரென்று எல்லாக் கதவுகளும் வாசல்களும் உண்மையிலேயே திறந்து விட்டன. கைதிக ளெல்லாம் ஜன்னலுக்கு ஜன்னல் கூடிக் கூடி நின்றுகொண் டிருப்பது தென்பட்டது. அவர்க ளெல்லாம் திடுக்கிட்டு, என்ன நடக்கிறது என்றே அறியாதவர்களாய்த் தோன்றினார்கள். அதிகாரிகளுக்கு இது பெரிய ஆத்திரமூட்டி விடாதா என்றே அவர்கள் எண்ணினார்கள்.

கதவுகளும் வாசல்களும் திறந்து விட்டன. பாராக்காரர்களின் தலையையே காணவில்லை. அப்படியிருந்தும், கைதிகளோ ஒருவர் கூட வெளியே வரமாட்டோம் என்கிறார்கள்!

ஜனங்கள் பொறுமை யிழந்து, "வாருங்கள் வெளியே! எங்களை நம்புங்கள்!" என்று கத்தினார்கள்.

மெள்ள ஒரு கோஷ்டி கைதிகள் வெளிப்பட்டார்கள். அவர்கள் வாசலுக்கு வெளியே வந்து பார்த்தபோது தான், அவர்களுக்கு விஷயம் புரிந்தது. அவர்களில் ஒரு கைதி, அப்படியே பிரமித்து மூர்ச்சை போட்டு விழுந்து விட்டான். இன்னொரு கைதியோ, டபார் என்று மதில்மேலே ஏறி நின்றுகொண்டு, ஒரு பெரிய பிரசங்கம் செய்ய ஆரம்பித்துவிட்டான். அவன் ஒரு போல்ஷிவிக். அவன் நீண்ட நேரம் பேசினான். நானும் கையிலே கூடையுடன் பிரசங்கத்தைக் கேட்டுக் கொண்டே உட்கார்ந் திருந்தேன்.

முதலிலே, புரட்சிக்குக் கட்டுப்பாடு வேண்டும் என்று அவன் சொன்னான்.

"தொழிலாளர் சங்கங்களிலே சேர்ந்து ஐக்கியப் படுங்கள். அப்போதுதான் உங்களுடைய முக்கிய சத்துருக்களை - நடுத்தர வகுப்பாரை - நீங்கள் எதிர்த்துப் போரிடமுடியும்; அவர்கள் இனியும் உங்களைச் சுரண்டாதபடி தடுக்கமுடியும்" என்று ஜனக் கும்பலுக்கு அவன் சொன்னான்.

அவன் பேச்சைக் கேட்டு மக்கள் கைதட்டி ஆரவாரம் செய்தார்கள். என்றாலும், அவன் பேசியது என்ன என்று மட்டும் அவர்களில் பெரும்பாலோருக்கும் விளங்கவில்லை.

இதற்கிடையிலே, எல்லாக் கைதிகளும் சிறை வாசல் வழியாக வெளியே வந்தார்கள். கைதிகளில் சிலர்

மலேத்துப் போய் ஆடி விழுந்து கொண்டே நடந்தார் கள். மற்றவர்களோ, ஆனந்தக் கூச்ச லிட்டுக்கொண்டு ஓடிவந்து, ஜனக் கும்பலிலே கலந்து கொண்டார்கள், அங்கே நின்ற தங்கள் உற்ருர் உறவினர்களேயும் நண் பர்களேயும், அவர்கள் கட்டித்தழுவி முத்தமிட்டுக் கொண் டார்கள்.

அப்புறம் ஒரு கோஷ்டி சாதாரணக் கைதிகள் வெளியே வந்தார்கள். ஆயினும், அவர்களில் எவரும் அசட்டுத்தனமாக நடந்துகொள்ள வில்லே; அமைதி யாகவும் கம்பீரமாகவுமே நடந்துகொண்டார்கள். ஆனுல் ஒவ்வொருவரிடமும் ஒரு சிகரெட் மட்டும் அவர்கள் கேட்டார்கள்.

12. எதிர்பாராத சந்திப்பு

சிறை மதிலில் நான் உட்கார்ந்துகொண்டே யிருக் கையில், எங்கள் சேவகன் பொராவ்ஸ்கீ திடீரென்று வெளியே வருவதைக் கண்டேன். தளபதியின் மனேவி அவனே அறைந்ததைத் தடுத்ததற்காக ஆறு மாத காலம் அவன் சிறையில் இருந்திருக்கிருன்.

இந்தக் காலத்தில் அவன் புனர் ஜன்மம் அடைந் திருந்ததை நான் கண்டேன். முன்னெல்லாம் யாருட னும் சேராமல் எப்போதும் ஒதுங்கி மௌனமாய் இருந்து வரும் வழக்கமுடைய அவன், இப்போது தானுகவே ஒரு வண்டிக் கூட்டின்மீது ஏறிக்கொண்டு பிரசங்கம் செய்யத் தொடங்கிவிட்டான். ஜனங்களெல்லாம் அவன் பேச்சுக் கும் கை தட்டினுர்கள்.

அப்புறம் நான் வழி விலக்கிக்கொண்டு, அவன் அண்டையில் போனேன். “பாஷா பொராவ்ஸ்கீ, என்ன, சௌக்கியமா ?” என்று விசாரித்தேன். ஒரு சிநேகிதி யைக் கண்டது அவனுக்கு மிக மகிழ்ச்சியாயிருந்தது.

அவனும் நானும் எப்போதுமே ஒன்றுசேர்ந் திருக்க முடிவு செய்தோம்.

இப்போது ஜனங்களின் கூச்சல் மீண்டும் கிளம்பி யது; "நகர சபைக்குப் போவோம். எல்லாரும் கிளம் புங்கள். அங்கே மிக முக்கிய விசேஷங்கள் நடக்கின்றன" என்ற கூச்சல்.

ஆகவே, பொராவ்ஸ்கீயும் நானும் நகர சபைக்குப் போனேம். பிரசங்க மேடைக்குப் பக்கத்திலே நாங்கள் நின்றுகொண்டோம்.

தீ கக்கும் பல பிரசங்கங்கள் நடந்தன. பொராவ்ஸ்கீ யும் இன்னொரு பிரசங்கம் செய்தான். தன்னைப்பற்றியும் தளபதியின் மனைவியைப்பற்றியும் சொன்னன். "நடுத் தர வகுப்பாரையும் பிரபு குலத்தாரையும் நம்பவே நம்பா தீர்கள் !" என்று ஆணையிட்டான்.

அப்போது நான் கடிகாரத்தைப் பார்த்தேன். மணி நான்கு ஆகிவிட்டது. அதாவது, தளபதியின் மனைவிக் குச் சாப்பாட்டு வேளை. சாப்பாட்டு விஷயத்தில், அவள் துளிக்கூட நேரம் தவறமாட்டாள். ஐந்து நிமிஷம் தாம தித்தாலும் அவளால் பொறுக்க முடியாது.

சாப்பாட்டுக்கு வேண்டிய பண்டங்களைக் கூட இன் னமும் நான் வாங்கவில்லை. அது இப்போதுதான் எனக்கு நினைவு வந்தது.

பொராவ்ஸ்கீ எனக்குச் சொன்னன் : "இப்போது எதுவும் வாங்கிப் பயனில்லை. நேரே வீட்டுக்குப் போ. என்னவாவது அசந்தர்ப்பம் நேரிடுமோ என்று உனக் குப் பயமாயிருந்தால், நானும் உன் கூட வருகிறேன். என் முன்னிலையில், நீ உன்னை என்ன சொல்லு கிருள் பார்க்கலாம். அவளுக்குத் தைரியம் வருமா ?" என்ருன்.

முதலில் எனக்குச் சற்றுப் பயமா யிருந்தது. பொராவ்ஸ்கீ என்னேடு வரவே, எனக்கு ஒரே திகிலாய்ப் போயிற்று. ஆனல், அதுவுங் கூட எனக்கு ஒரு தமாஷா யிருந்தது.

பொராவ்ஸ்கீயும் நானும் வீடு போய்ச் சேர்ந்தோம். அவனையும் என்னையும் சேர்ந்தாற்போல் கண்டதும், வீட்டுச் சேவகர்க ளெல்லாம் பிரமித்துப் போய் விட்டார்கள்.

"இதோ பாருங்கள், இது மிக மோசம். என்ன இருந்தாலும் அத்துமீறிப் போகலாமா?" என்று அவர்கள் சொன்னர்கள்.

ஆனல், நடந்த விஷயத்தை யெல்லாம், அவர்களுக்கு நாங்கள் சொன்னேம். அவர்களுக்குள்ளேயே ஒரு வாதப் பிரதிவாதம் கிளம்பியது.

நாங்களெல்லாம் சமையல் அறையில் உட்கார்ந்து பேசிக்கொண் டிருந்தோம். திடீரென்று கதவு திறந்தது. வாயிற்படியிலே நினு தோன்றினள். என்றும் கண்டிராத பெருங் கோபக் கோலம் பூண்டிருந்தாள்.

ஆத்திரம் வந்து நெஞ்சை அடைத்துக்கொள்ள, "புரட்சி நடக்கிறதாம் புரட்சி! அதைப்பற்றி யெல்லாம் எனக்குக் கவலையில்லை. நான் எஜமானி. அந்த அதிகாரத்தை நான் செலுத்தத்தான் செலுத்துவேன். அதை யாரும் மீற முடியாது. ஓடுங்கள். இந்த மாதிரி மறுபடியும் ஏதாவது நடக்குமானல், உங்கள் அத்தனை பேரையும் துவம்சம் செய்து விடுவேன்" என்ருள்.

இப்படிச் சொல்லிக் கொண்டே யிருக்கையில், பொராவ்ஸ்கீ ஒரு நாற்காலியில் உட்கார்ந் திருப்பதைத் திடுமென்று அவள் கண்டாள். உடனே அவள் உடம்பெல்லாம் சவம்போல் ஒரேயடியாய் வெளிறிட்டுப்

போயிற்று. கதவுப் பிடியைக் கையிலே பிடித்துக் கொண்டு, "அட கடவுளே !" என்று முனகினாள்.

என்ன நடந்திருக்கிறது என்று அப்போதுதான் அவளுக்குப் புரிந்ததுபோ லிருக்கிறது. தன் வாழ்க்கையிலே ஏதோ ஓர் அசாதாரண அநுபவம் நேர்ந்திருப்பதை அவள் உணர்ந்துகொண்டாள்.

பொராவ்ஸ்கீ சரேல் என்று நாற்காலியை விட்டு எழுந்தான். அவனுடைய உடல் பதறுவதை நாங்கள் கண்டோம். அவன் மிகப் பரபரப்பா யிருந்தான்.

நாற்காலியை விட்டு எழுந்து, அதை வெகு அமைதியாகவே பின்புறம் தள்ளினான். நினைவைப் பார்த்து அவன் சொன்னது இதுதான் : "போதும்."

அவன் இன்னும் ஏதாவது சொல்லியிருந்தால், நினை அவ்வளவு பயந்துபோ யிருக்க மாட்டாள். ஆட்சேபக் குறியுடன் கையை ஆட்டிக்கொண்டே, "போதும்" என்று அவன் சொன்னது, அவளை நடுநடுங்கச் செய்துவிட்டது.

அவள் 'கோ!' என்று அலறிக்கொண்டு, உடல் பதறி, வெளிறிட்டு, ஆடி விழுந்து, ஓடி விட்டாள்.

எல்லாச் சேவகர்களும் சிரித்துக்கொண்டே, "புரட்சி புரட்சி என்கிறோமே; அது இதுதாண்டாப்பா!" என்றார்கள்.

13. நுழைவாயில்

பின்பு, சமையல் அறைக்குள் திடீரென்று காப்டன் கிளப் ஸ்வெதயேவ் நுழைந்தான். அவன் தனக்கியல்பான புன்சிரிப்புடன் பொராவ்ஸ்கீயிடம் சொன்னான் :

" சிநேகிதரே, புரட்சியால் நீர் விடுதலை யடைந்து விட்டீர். ஆனால், கைதியான ராஜாங்கக் குற்றவாளியான நீர், சீமாட்டியின் வீட்டிலே வந்து வசிக்கலாம் என்று

அதனால் ஏற்பட்டு விடவில்லை. ஆகவே, உம்மை வேண்டிக் கொள்ளுகிறேன்: இந்த நிமிஷமே வீட்டை விட்டு வெளியேறி விடும். இல்லையானால், மெத்தக் கஷ்டங்கள் நேரிடும்'' என்றான்.

"நான் போகிறேன். ஏனென்றால், என் தோழர்களுக்கு என்னால் கஷ்டம் விளையக் கூடாது. அதிகாரியே, நீரும் நானும் அடித்துக்கொண்டால், அவர்கள் என்னைக் காப்பாற்ற வருவார்கள். அதன் விளைவாக, அவர்களுக்கு என்ன கதி நேருமோ, அறியேன். நான் போவதற்கு இதுதான் காரணம்; இது ஒன்றேதான். ஆனால், அதிகாரியே, நீரும் நானும் மறுபடியும் சந்திப்போம். அப்போது காட்டுகிறேன். இப்படிப் பழித்தீரே, இந்தப் பழிச்சொற்களை ஏன் சொன்னோமென்று அப்போது நீர் வருந்தப் போகிறீர்!'' என்றான் பொராவ்ஸ்கீ.

இந்த வார்த்தைகளுக்குப் பின்பு, ஏதோ பிரமாத விபரீதம் நேரப் போகிறது என்று நாங்களெல்லாம் எண்ணினோம். ஆனால், காப்டன் ஸ்வெதயேவ், கணமும் தாமதியாமல், வந்த வழியே திரும்பி, கதவைப் படீர் என்று சாத்திவிட்டு ஓடிப் போனான். அவன் ஓடின வேகத்தில், அலமாரியிலிருந்த காபி ஜாடி கீழே விழுந்து நொறுங்கி விட்டது.

இதன் பிறகு, பொராவ்ஸ்கீயும் எங்களிடம் விடை பெற்றுச் சென்றான். அன்று பல்கலைக்கழகத்தில் நடக்கும் பொதுக்கூட்டத்துக்கு நான் வருவதாக என்னிடம் வாக்கு வாங்கிக்கொண்டு, அவன் சென்றான். அந்தக் கூட்டத்தை இரவு ஒன்பது மணிக்கு நடத்துவதென்று ஏற்பாடு செய்திருந்தது.

கையில் கிடைத்த பண்டங்களை இட்டு, வெகு விரைவில் சாப்பாட்டைத் தயாரித்தேன். வேலைக்காரி

காட்யா அதை வட்டித்தாள். சீமாட்டியும் அவள் சிநேகி தர்களும் வாய் பேசாமல் அதை விழுங்கினார்கள்.

பின்பு, நான் உடை மாற்றிக்கொண்டு பல்கலைக் கழகப் பொதுக்கூட்டத்துக்குப் போனேன். நினாவிடம் ஒரு வார்த்தையும் சொல்லிக்கொள்ள வில்லை. இப்படி ஒரு வேலைக்காரி சொல்லிக் கொள்ளாமல் வெளியே போவது அந்தக் காலத்தில் மிகப் பெரிய குற்றம்.

நான் பல்கலைக்கழகத்துக்குப் போய்ச் சேர்ந்தேன். ஏற்கனவே அங்கே கூட்டம் கூடி நெரித்துக் கொண் டிருந்தது. பிரசங்கிகளில் பெரும்பாலோரும் மாணவர் கள்-வாலிபரும் யுவதிகளுமான மாணவர்கள்.

பொராவ்ஸ்கீ என்கிட்ட வந்தான். "இப்போது, அன்யுக்தா, நீ எங்களை ஏமாற்றக்கூடாது. இன்று நீ பேசவேண்டும். குடும்ப வேலைக்காரர்களின் சார்பாகப் பேசவேண்டும். அது பெரிய பரபரப்பை உண்டாக்கும். வேலைக்காரர்களை அவர்கள் எப்படி உறிஞ்சுகிறார்கள் என்பதைப்பற்றி, கொஞ்சம் கடுமையாக ஏதாவது நீ சொல்லவேண்டும்" என்றான்.

அவன் இப்படிச் சொன்னதும், என் உடம்பெல்லாம் ஒரே ஆட்டமாய் ஆடிப்போயிற்று. ஏனென்றால், நான் அதற்குமுன் ஒருபோதும் பிரசங்கம் செய்ததே யில்லை; எப்படிப் பிரசங்கம் செய்வது என்றும் எனக்குத் தெரியாது.

ஆனால், நான் என்ன ஆட்சேபித்தும், பொராவ்ஸ்கீ ஒப்புக்கொள்ள வில்லை. என்னைப் பிரசங்க மேடைக்கு அவன் அழைத்துச் சென்றான். அங்கே இருந்த பிரதான புரட்சிக்காரர்களுக் கெல்லாம் என்னை அறிமுகம் செய்து வைத்தான்.

அவர்களில் ஒருவன் (ரோஸென் புளூம் என்று அவன் பெயர்) என்னை எவளோ தேர்ந்த பிரசங்கி என்று எண்ணிக்கொண்டு, "தோழி காஸ்யனுவா, தொழிலாளர் இயக்கத்தைப்பற்றி என்னவாவது இரண்டு வார்த்தை சொல்லு" என்றான்.

இங்கே ஒளிக்காமல் சொல்லுவதானால், நான் இதைக் கேட்டுப் பெரிதும் திடுக்கிட்டுப் போனேன்; இதை நான் ஒப்புக்கொள்ளத்தான் வேண்டும். ஏனென்றால், அன்று வரையில் அப்படி ஓர் இயக்கம் இருப்பதாகவே எனக்குத் தெரியாது. அதைப்பற்றிச் சொல்ல ஏதும் விசேஷ விஷயம் இருப்பதாகவும் எனக்குத் தெரியாது.

ஆனாலும், என்னை அவர்கள் மேடைக்கு இட்டுச் சென்று, சபையோருக்கு அறிமுகமும் செய்துவைத்து விட்டார்கள்.

நான் என் பேச்சை எப்படித் தொடங்கினேன் என்று எனக்கு ஞாபகமில்லை. காற்றிலே இலை ஆடுமே அந்த மாதிரி நான் அந்த மேடைமீது ஆடினேன் என்று மட்டும் எனக்கு ஞாபகமிருக்கிறது. ஆனால், எப்படியோ சமாளித்து என்னை நானே திடப்படுத்திக் கொண்டேன். பிரசங்கமும் செய்தேன். என் பேச்சைக் கேட்டு, சபையிலே அற்புத மௌனம் நிலவியது. நான் பேசியதை எல்லாரும் உன்னிப்பாய்க் கேட்டார்கள். "இவள் சொல்லுவது மிகவும் ஆச்சரியமாயிருக்கிறதே!" என்று அவர்கள் சொல்லிக் கொண்டார்கள்.

என் குழந்தைப் பருவத்தில் மிராசுதார் என்னை எப்படிச் சுரண்டினான் என்பதையும், நினுவின் வீட்டில் இப்போது என் வாழ்வில் என்ன கஷ்டங்களை நான்

அநுபவிக்கவேண்டி யிருக்கிறது என்பதையும் அவர் களுக்கு நான் வர்ணித்துச் சொன்னேன்.

கடைசியில் " நிஹிலிஸம் அடிபட்டுச் சிறைக் கும் சென்ற சேவகன் பொராவ்ஸ்கீ இங்கே நமக்கு நடுவிலேயே இருக்கிறான் " என்று சொன்னேன்.

" அந்தப் பொராவ்ஸ்கீயை நாங்கள் பார்க்கவே ண் டும்; நாங்கள் பார்க்க வேண்டும் " என்று மக்கள் கூச்சலிட்டார்கள்.

பொராவ்ஸ்கீ மேடைமீது ஏறி "அவள் உங்களுக் குச் சொன்னதெல்லாம் உண்மையே " என்றான்.

அப்போது மக்களெல்லாம் ஒரே குரலாக, அந்தச் "சீமாட்டியின் விலாசத்தைச் சொல்லுங்கள். அவளுக்குச் சரியான உதை கொடுக்கிறோம் - உங்கள் சீமாட்டிக்கு " என்று கத்தினார்கள்.

அதை விட்டு, அன்று காலையில் நான் கேட்ட விஷ யத்தை அவர்களுக்குச் சொன்னேன். மேடையி லிருந்து கொண்டபடி, "அவள் விலாசத்தைப் பற்றிக் கவலைப்படா தீர்கள்! புரட்சியைக் கட்டுப்பாடான முறையில் நடத்தி முடிக்க வேண்டும். தொழிலாளர் இயக்கத்தைப் பலப்படுத்த வேண்டும். பின்பு, சரியான முறையில் திட்டம்போட்டு, நடுத்தர வகுப்புக் கனவான்களுடன் போராடவேண்டும் " என்றேன்.

இங்கே மக்கள் பிரமாதமாகக் கை தட்டி ஆரவாரம் செய்தார்கள். அந்த அதிர்ச்சியில் மண்டபமே இரண் டாய்ப் பிளந்துவிடுமோ என்று நான் எண்ணினேன். மெய் மறந்து கண்ணீர் துளிக்க, மேடையை விட்டு இறங்கினேன்.

எல்லாரும் என்னிடம் ஓடி வந்தார்கள். "என்ன ஆச்சரியம்! நீ எவ்வளவு நன்ருய்ப் பேசினுய்!" என் ருன் பொராவ்ஸ்கீ.

"அன்யுக்தா காஸ்யனுவா, தொழிலாளர் சங்கம் அமைக்கும் பிரசாரகர்களில் ஒருத்தியாக நீ வேலே பார்க்க வேண்டும். நாளைக்கு நீ நகரசபைக்கு வா. அங்கே சங்க அமைப்பு இலாக்காவுக்கு வந்தால், உன்னை ஒரு பிரசாரகியாக நியமித்து விடுகிருேம்" என்ருன் ரோஸென் புளும்.

மதுவுண்ட ஈயைப் போல் பரவசத்துடன், நான் வீட்டுக்குப் புறப்பட்டேன். இன்னெரு சமயம் பிரசங் கம் செய்யும்போது என்னவெல்லாம் சொல்லுவது என்று, வழி நெடுகலும் யோசித்துக்கொண்டே போனேன்.

14. புதிய வாழ்க்கை

அடுத்த நாள் காலையில் என் எஜமானி நினு, என்னைக் கூப்பிட்டனுப்பினுள்.

"என்னிடம் நீ தொடர்ந்து வேலே செய்வதானுல், இந்த மானங்கெட்ட நடத்தையை விட்டு விடவேண்டும். கண்ட கண்ட கூட்டங்களிலெல்லாம் போய்ப் பராக்குப் பார்த்துக் கொண்டு நிற்க விடமாட்டேன். அங்கே என்ன இழவெல்லாமோ பேசுகிருர்கள்!" என்ருள்.

அப்படியானுல் நான் வேலேயை விட்டு நின்று கொள்ளுவதாக, அவளிடம் சொன்னேன். "அப்படிச் செய்யாதே!" என்று அவள் என்னைக் கெஞ்சத் தொடங்கினுள். வீட்டிலே அமைதியும் நிம்மதியும் இருந்தால் போதும் என்றும், எனக்கு மும்மடங்கு சம்பளமும் சில ஆடைகளும் தருவதாகவும் அவள் சொன்னுள்.

"நீயோ படித்த வகுப்பைச் சேர்ந்தவள். நீயே இப்படி மிக அசட்டுத்தனமாய்ப் பேசுகிருயே! நீ பேசுவ தெல்லாம் வீண் பேச்சு; பயனற்ற பேச்சு. மக்களெல் லாம் எப்படி மாறிக்கொண் டிருக்கிருர்கள் என்று நீ பார்க்க வில்லையா? அதையெல்லாம் நான் எப்படித் தடுக்கமுடியும்?" என்று பதில் அளித்தேன்.

இந்தச் சமயத்தில் வாசல் மணி அடித்தது. லெப்டினண்ட் யூரி புனகாவ், சாப்பாட்டறைக்குள் நுழைந்தான். அவனுடன் காப்டன் கிளப் ஸ்வெத யேவும் நுழைந்தான்.

செத்த சவம்போல் புனகாவ் ஒரேயடியாய்க் கலவர மடைந்து, சோபாவில் போய் விழுந்தான்.

அவன் சொன்ஞன்: "தெருவிலே என்ன வெல் லாமோ நடக்கிறது. எனக்கு ஒன்றுமே புரியவில்லை. அங்கே ஒரே காலிகளின் கும்பலா யிருக்கிறது. வெளியே தலை நீட்டப் பயமா யிருக்கிறது. என்ன அக்கிரமம்! இந்தக் காட்டுமிராண்டிகளின் கையிலே ருஷியா அகப்பட்டுக் கொண்டால், அதன் கதி என்ன ஆகுமோ! அதை நினைக்கவும் பயமா யிருக்கிறது. ஆனல், நிலைமை அப் படித்தான் ஆகிவருகிறது. ஏனென்ருல், அவர்களுக்கு எதிரே நாம் மிகவும் சொற்ப எண்ணிக்கையே இருக் கிறேம். நீங்கள் வெளியே போய்ப் பாருங்கள். நான் சொல்லுவது சரி என்று தெரியும்" என்ருன்.

பிறகு, காப்டன் ஸ்வெதயேவ் ஒரு பழமொழி சொன் ஞன். அதன் அர்த்தம் அப்போது எனக்குப் புரிய வில்லை. பத்து வருஷங்களுக்குப் பின்புதான் புரிந்தது. அவன் சொன்ஞன்: "பழிக்குப் பழி வாங்கும் நேரம் வந்துவிட்டது. அப்பன் புளி தின்ன, மகனுக்குப் பல் கூசிவிட்டதாம்."

யூரி புனகாவ் சோபாவிலிருந்து துள்ளி எழுந்தான். அவனிடம் பொங்கிய கோபத்தைக் கண்டு, நான் பிரமித்துப் போனேன்.

அவன் சொன்னான் : " ஆனால், போராட்ட மில்லாமல் நாம் நம் உரிமைகளைக் கைவிடப் போவதில்லை; விடுவோமா ?" என்றான்.

காப்டன் சொன்னான் : " கடைசிச் சொட்டு ரத்தம் உள்ள அளவும் நாம் போராடத்தான் போகிறோம்! இதில் ராஜிக்கே இடமில்லை. ஏனென்றால், இரண்டு உலகங்களுக்குள் சண்டை மூண்டிருக்கிறது. இப்போது நடப்பதை, இனி நடக்கப்போவதுடன் ஒப்பிட்டுப் பார்த்தால், இது வெறும் தூசிக்குச் சமமாகும் !" என்றான்.

இந்தச் சமயம் நினா என்னைப் பார்த்து, "அனுஷ்கா, நீ அப்பாலே போ! நீ இல்லாமல் சில விஷயங்களைப் பற்றி நாங்கள் யோசிக்க வேண்டி யிருக்கிறது" என்றாள்.

அன்று தினமும் பகல் சாப்பாட்டை முடித்துக் கொண்டு சங்க அமைப்பு இலாக்காவுக்கு ஓடினேன்.

அந்த இலாக்காவில் இருந்த எல்லாரும் இதற்குள்ளே என்னைப்பற்றிக் கேள்விப்பட் டிருந்தார்கள். " காஸ்யனுவா, நீ நம் கிளர்ச்சிக்காரர்களிலே ஒருத்தியாக இரு. பொதுமக்களிடம் சென்று தொழிலாளர் சங்கங்களைப் பலப்படுத்தப் பிரசாரம் செய். புரட்சியை நீ சரியாய்ப் புரிந்துகொண் டிருக்கிறாய்" என்று அவர்கள் என்னிடம் சொன்னார்கள்.

" நான் சீமாட்டியை விட்டு விலகலாமோ ?" என்று வெகுளித்தனமாகக் கேட்டேன்.

அவர்களெல்லாம் சிரித்தார்கள். " விலகலாம்; விலகியே தீரவேண்டும் " என்றார்கள்.

இதன்மேல் நான் வீட்டுக்கு ஓட்டமாய் ஓடினேன். என் சாமான்களை யெல்லாம் மூட்டை கட்டினேன். "நான் விலகிக் கொள்கிறேன்" என்று சீமாட்டியிடம் சொன்னேன்.

அப்போது நடந்ததை யெல்லாம் வர்ணித்துச் சொல்வது அசாத்தியம். ஆனால், அந்தப் புயலை நான் சமாளித்துக்கொண்டு வெளிவந்தேன். சமையல் அறைக்குள்ளே வராமலே, சீமாட்டி என் ஆள் அடையாளச் சீட்டை என் முகத்திலே விட்டெறிந்தாள். ஆனால், எனக்குச் சேரவேண்டிய சுமார் ஒரு மாதச் சம்பளத்தை எனக்குக் கொடுக்க மறுத்து விட்டாள்.

இதைப்பற்றி நான் அவளுடன் வாதம் செய்யத் தொடங்கிய வேளையில், யாரும் எதிர்பாராதபடி போர் முனையிலிருந்து தளபதி துபஸாவே வந்துவிட்டார். அவர் தாடியும் மீசையுமாய்ப் பொதியான உருவம் படைத்து, பயங்கரச் சடை நாய் மாதிரி இருப்பார் என்றே நான் எண்ணிக்கொண் டிருந்தேன். ஆனால், உண்மையிலே தளபதி எலும்பும் தோலுமாய் இளைத்த சின்ன மனிதரா யிருந்தார். அறைக்குள்ளே தமக்குத் தாமே அவர் என்னவோ முணு முணுத்து உறுமிக் கொண்டே யிருந்தார்.

கோபமாய், யரோச்கா புனகாவை அவர் என்னவோ திட்டிக்கொண் டிருந்தார். தம் மனைவி சம்பந்தமாக யுரோச்காவிடம் அவருக்குச் சந்தேகம் உண்டாகியிருக்கிறது. ஆனால், நினாவோ அசாதாரணத் துணிச்சலுடன் நடந்து கொண்டாள். என்னதான் நடந்தாலும் சரி, யுரோச்காவை வீட்டுக்குள் வராதே என்று தடுப்பதில்லை என்று அவள் உறுதி பூண்டிருந்தாளாம்; இதைச் சேவகர்கள் எனக்குச் சொன்னார்கள். தளபதிக்கு நினா

விடம் அளவற்ற மோகம். ஆகவே, இதை அவர் சகித்துக்கொள்ள வேண்டிய தாயிற்று. பின்பு, உத்தியோகஸ்தர்கள் வந்து சேர்ந்தார்கள். புரட்சியைப் பற்றிப் பேச ஆரம்பித்தார்கள். அவர்களுக்குள்ளே உக்கிரமான ஒரு விவாதம் எழுந்தது.

“சரிதான், இனி என் பணத்தைப்பற்றிக் கவலைப் பட்டுப் பயனில்லை” என்று நான் நினைத்துக்கொண்டேன். நேரே சங்க அமைப்பு இலாக்காவுக்குப் போனேன். என் நியமனத்தையும் பெற்றேன். எனக்கு அவர்கள் சிறிது பணம் கொடுத்தார்கள். ஓர் அறையும் தந்தார்கள், இந்த வேலையை நான் மிக்க உற்சாகத்துடன் செய்யத் தொடங்கினேன். இது முழுவதும் எனக்கு மிகவும் இனிப்பா யிருந்தது. இதிலே என் மனம் லயித்தது. ஒரு புதிய உலகமே என் முன்னே திறந்ததுபோ லிருந்தது. நான் எப்படி வாழ்ந்தேன், மக்களெல்லாம் எப்படி வாழ்ந் தார்கள் என்பதுபற்றி அப்போதுதான் எனக்குப் புரிந் தது. நாம் அனைவரும் அடிமைகள் போல் வாழ்ந்து கொண் டிருந்தோம். நம் குருட்டுத்தனத்தால், அதை நாம் புரிந்துகொள்ள வில்லை !

இப்போதுதான், நான் முன்னே சொன்னேனே அந்த விதமாக, ஆத்திரம் என்னைத் தூண்ட, கிராமத் தில் மிராசுதார் டியேவிடம் சண்டைபோடப் போனேன். இந்தப் பிரயாணம், பல விஷயங்கள் சம்பந்தமாக என் கண்ணைத் திறந்துவிட்டது. இந்தப் புரட்சிக்குப் பிறகு, நடுத்தர வகுப்பாரையும் பிரபுக்களையும் எதிர்த்து மற் றொரு புரட்சி நடக்கலாம் என்று அதிலிருந்து நான் தெரிந்து கொண்டேன்.

நான் திரும்பி வந்ததும், முன்னிலும் அதிக மும்முர மாகப் புரட்சிக்கு உழைத்தேன்.

ஒரு பிரசாரகி என்ற முறையில், வீட்டுக்கு வீடு சென்றேன். அங்கே குடும்ப வேலைக்காரர்கள், தாதிகள், மருத்துவச்சிகள், ஆஸ்பத்திரிப் பெண்கள் எல்லாரையும் கூட்டிக் கூட்டங்கள் நடத்தினேன். தீக்கும் பிரசங்கங்கள் புரிந்தேன். "சில காசுகளுக்காகப் பாட்டாளி மக்கள் ரத்தத்தைக் கொடுக்கிறார்கள். இதற்குக் காரணம் பலவிதச் சுரண்டல்களே. அந்தச் சுரண்டல்களை ஒழிக்க, நாம் முறையான போராட்டம் நடத்த வேண்டும். அதற்காக, நீங்கள் எல்லாரும் தொழிலாளர் சங்கத்தில் சேரவேண்டும்" என்று அவர்களை வற்புறுத்தினேன்.

நான் போன இடமெல்லாம் எனக்கு நல்ல வரவேற்புக் கிடைத்தது. சில இடங்களில், நான் அதிதீவிரமாய்ப் பேசுகிறேன் என்று சிலர் என்னை அடிக்கக் கூட வந்துவிட்டார்கள்.

தொழிலாளர் மாவட்டங்களில் தேர்தல் நடந்தபோது, நகர ஸோவியத்தில் குடும்ப வேலைக்காரர்களின் பிரதிநிதியாக என்னைத் தேர்ந்தெடுத்தார்கள்.

அங்கே நான் போய்ச் சேர்ந்தபோது, "நீ ஏதாவது ஒரு கட்சியில் சேரவேண்டும். எந்தக் கட்சியில் சேர்கிறாய்?" என்று என்னை அவர்கள் கேட்டார்கள்.

தொழிலாளர் சங்கத்தில் இருந்த தோழர்களில் சிலர், "அனுஷ்கா, உன்னைப்பற்றி நாங்கள் அறிந்தவரையில், போல்ஷிவிக் கட்சிதான் உனக்கு ஏற்றது. அதில் சேர்ந்துகொள்" என்றார்கள்.

நானும் அப்படியே அதில் சேர்ந்துகொண்டேன்.

15. அக்டோபர் நாட்கள்

பனிக்காலத்தில் பீட்ரோக்ராட் நகரில் கூட வேண்டிய காங்கிரஸுக்கு எங்கள் கீயெப் நகரில் தேர்தல்கள் ஆரம்பமாயின.

தீவிர உழைப்பாளியான என்னையும் இந்தக் காங்கிரஸுக்கு ஒரு பிரதிநிதியாகத் தேர்ந்தெடுத்தார்கள். கீயெப் நகரின் பிற பிரதிநிதிகளோடு, நானும் லெனின்கிராடுக்கு (இதற்குத்தான் அப்போது பீட்ரோக்ராட் என்று பெயர்) புறப்பட்டுப் போனேன்.

இதில் எனக்குப் பெருமை பூரித்தது. எந்த நேரமும் இந்தக் காங்கிரஸைப் பற்றியே பேசுவேன். வேறே யார் எதைப் பற்றிச் சொன்னாலும் கேட்க மாட்டேன்.

கீயெப் நகரை விட்டு நான் புறப்படு முன்பு, பொரொவ்ஸ்கீ என்னை மணந்து கொள்வதாகச் சொன்னான். நான் மறுத்து விட்டேன். என்னைத் தன் மனைவியாய்ப் பெற, அவன் ஆசை கொண்டான். என் மீது அவனுக்குக் காதல் உதித்து விட்டது.

ஆனால், என் சிந்தனையோ வேறு பல விஷயங்களில் ஈடுபட்டிருந்தது. தவிர, அவனிடம் எனக்கென்னவோ விசேஷ மோகம் விழவில்லை. ஆகவே, மாசுமறு வில்லாத மனத்தோடு, லெனின்கிராட் நகருக்குச் சென்றேன். பொராவ்ஸ்கீ என்ன ஆனானோ, அது எனக்குத் தெரியாது. இதற்கப்புறம் அவன் என் கண்ணிலேயே படவில்லை.

எங்கள் பிரதிநிதிக் கோஷ்டி, லெனின்கிராட் நகரில் உத்தியோகஸ்தர் பயிற்சிக் கலாசாலையில் தங்கியது.

மிக முக்கியமான சமயத்தில் நாங்கள் லெனின் கிராட் நகருக்குப் போய்ச் சேர்ந்தோம். காங்கிரஸ் தொடங்க அப்போது இரண்டு நாட்கள் தான் இருந்தன.

அந்த நாட்களில் வெயில் தாங்கவில்லை. அந்தக் கடும் வெப்பத்துக்கு நடுவேதான், புரட்சியின் தலைவிதி நிர்ணயமாயிற்று. மக்களுக்கு மிகப் பரபரப்பும் போராட்டமும் நிறைந்தவை அந்த நாட்கள். அப்போதுதான்

முதல் முதலாக நான் லெனினைப் பற்றிக் கேள்விப் பட்டேன். அபூர்வமான பல புரட்சிக்காரர்களையும் கண்டேன். இதெல்லாம் எனக்குப் பெரும் மகிழ்ச்சி அளித்தது. அது ஒரு திருவிழா. அதிலே கலந்துகொண்ட பாக்கியவதி நான்.

அதைப் பற்றி இப்போது நான் பேசுவது எனக்கே விசித்திரமா யிருக்கிறது. உண்மையைச் சொல்லுவதானால், அப்போது நிகழ்ந்த நிகழ்ச்சிகளின் உண்மைப் பொருளை அந்த நாட்களில் நான் பூர்ணமாய்ப் புரிந்து கொள்ளவில்லை.

புரட்சி என்ற உலைக்கொப்பரையில், நான் உருகிக் கொண்டிருந்தேன். இருந்தும், அந்தச் சம்பவங்களின் உட்கருத்தை நான் பூர்ணமாய்ப் புரிந்து கொள்ளவில்லை. இது என் குறை.

இந்தக் குறையைச் சகித்துக்கொண் டிருக்க, என்னால் முடியவில்லை. தாங்கள் செய்வது என்ன என்று பூர்ணமாய்த் தெரிந்து கொண்டு பலர் போராட்டத்தில் கலந்துகொண் டிருந்தார்கள். அவர்களைப் பார்த்து எனக்கு எப்போதுமே பொறுமை உண்டாயிற்று. அவர்களெல்லாருமே எனக்குப் பெரிய மனிதர்களாய்த் தோன்றினார்கள். என் சம்பந்தப்பட்ட மட்டும், ஏதோ புகைப் படலத்துக்குள்ளே வாழ்வது போலவே வாழ்ந்தேன். இதை நான் ஒப்புக் கொள்ளத்தான் வேண்டும். அக்டோபர்ப் புரட்சி ஒரு மகத்தான புரட்சி. அது வரப் போவதை எண்ணி நான் மகிழ்ச்சியும் குதூகல வெறியுமே அடைந்தேன். என்றாலும், மெய்மறந்து உழைக்கும் பாட்டாளி மக்களின் வாழ்க்கையில் அது எவ்வளவு மகத்தான சம்பவம் என்பதை நான் உணர்ந்து கொள்ளவில்லை.

கடைசிப் போராட்டம் ஆரம்பித்துக்கொண் டிருந்த அந்த வேளையிலே, நான் ஒரு சிநேகிதப் பெண் ணுடன் நகரத்தைச் சுற்றிப்பார்க்கக் கிளம்பி விட்டேன். இதைச் சொல்லவும் எனக்கு வெட்கமா யிருக்கிறது.

அவளும் நானும் ஸடோவாயா தெருவில் சுற்றிக் கொண் டிருந்தோம். இந்தச் சமயத்தில் திடீரென்று துப்பாக்கி சுடும் சத்தம் கேட்டது. அந்த நாட்களில் நாங்கள் இருவரும் கபடு சூது தெரியாத அப்பாவியான நாட்டுப்புறப் பெண்கள். போர்முனையில் கிளம்பும் துப் பாக்கிக் குண்டுகளின் வாசனையே எங்களுக்குத் தெரி யாது.

"துப்பாக்கி சுடுகிறார்களே; இதைப் போய்ப் பார்ப் போம், வா" என்று நாங்கள் ஒருவரை ஒருவர் அழைத் தோம்.

நெவ்ஸ்கீ பிராஸ்பெக்ட் என்ற இடத்துக்கு நாங்கள் போய்ச் சேர்ந்தோம். அங்கே ஒரு ஜனக்கூட்டம் ஆர்ப் பாட்டம்செய்து கொண்டு, டூமா சபா மண்டபத்தி லிருந்து விண்டர் அரண்மனைக்குப் போய்க்கொண் டிருப்பதைக் கண்டோம். அவர்கள் மென்ஷிவிக் கட்சியைச் சேர்ந்த வர்கள். 'தற்காலிக சர்க்காருக்கே சகல அதிகாரமும்!' என்ற வசனம் பொறித்த கொடியைத் தாங்கிக் கொண்டு அவர்கள் சென்றார்கள்.

ஆனால், எங்கள் சுலோகமோ 'சகல அதிகாரமும் ஸோவியத்துக்கே!' என்பது. ஆகவே, இந்த மென்ஷி விக்குகளோடு, என் சிநேகிதியும் நானும் சேர்ந்து கொள்ள வில்லை. ஆனால் ஜனக்கும்பலை இடித்து நெருக் கிக் கொண்டு, விண்டர் அரண்மனைக்குப் போனோம். ஏனென்றால், விண்டர் அரண்மனைக்குள்ளேதான் போல்ஷிவிக் கட்சிக்காரர்கள் இருக்கிறார்கள் என்று நாங் கள் கேள்விப்பட்டோம்.

அப்போது சில ஜனங்கள் ஓட்டமாய் ஓடிவந்து, மென்ஷிவிக் ஆர்ப்பாட்டக்காரர்களைப் பார்த்து, "இனி முன்னே போகாதீர்கள், கனவான்களே ! போல்ஷிவிக்கர்கள் உங்களைத் துப்பாக்கியால் சுடுவார்கள்போ லிருக்கிறது. அநாவசியமாக ரத்தம் சிந்தவேண்டாம்" என்று கூச்சலிட்டதைக் கண்டோம்.

ஆர்ப்பாட்டக்காரர்கள் அத்தனை பேரும் மனம் குழம்பிப்போய் என்ன செய்வதென்று தெரியாமல் அப்படியே நின்றுவிட்டார்கள். அப்போது சதுக்கத்தில் மீண்டும் துப்பாக்கிச் சத்தம் கேட்டது.

இந்தச் சமயம் மென்ஷிவிக்கர்களில் சிலர், தாங்கள் என்ன செய்வது என்று கண்டு பிடிப்பதற்காகக் கூட்டத்தை விட்டு வெளியே போனார்கள்.

நானும் என் சிநேகிதியும் எங்கள் கட்சிக்காரர்களிடம் போய்ச்சேர முடியவில்லை. வேறு பக்கமாகச் சதுக்கத்துக்குள் போய்ச்சேர, நாங்கள் முயன்றோம். ஏதுமே விசேஷம் நடக்காததுபோல அந்தப் பக்கத்தில் டிராம்கள் ஓடிக்கொண் டிருந்தன.

சதுக்கத்தின் நடுமத்திக்கு நாங்கள் போய்ச் சேர்ந்தோம். அங்கே யாரையும் காணவில்லை. எங்களுக்கு ஆச்சரியமாய்ப் போயிற்று.

எங்கள் தோழர்கள் அனைவரும் மில்லியனையா தெருவுக்குப் போய், தலைமைக் காரியாலய நுழைவாயிலில் புகுந்து விட்டார்கள்.

நாங்கள் கண்டிப்பாய் அவர்களிடம் போய்ச் சேர்வது என்று உறுதி கொண்டோம். ஏதோ விசேஷம் நடக்கப் போகிறது என்று எங்களுக்குத் தோன்றியது. இந்தச் சமயத்தில் பிரமாதமான துப்பாக்கிச் சத்தம் கேட்டது. நாங்கள் நடுவிலே அகப்பட்டுக் கொண்டிருந்த கூட்டம் இடித்துத் தள்ளிக்கொண்டு பின்னே ஓடியது.

இந்த அவந்தரையிலே என் சிநேகிதி கீழே விழுந்து கால் சுளுக்கிக்கொண்டாள். கைலாகு கொடுத்து நான் அவளை வீட்டுக்கு அழைத்துச் செல்ல வேண்டிய தாயிற்று.

வீட்டுக்குப் போய்ச் சேரும் வரையில், எங்கள் காதிலே வழியெல்லாம் துப்பாக்கிச் சத்தம் வரவர உரத்துக் கேட்டுக்கொண்டே யிருந்தது.

அன்று மாலையே நாங்கள் காங்கிரஸுக்குச் சென்றோம். விண்டர் அரண்மனை பிடிபட்டது என்று அங்கே கேள்விப்பட்டோம்.

16. மீண்டும் கீயெப் நகரில்

எங்கள் பிரதிநிதிக் கோஷ்டியில் ரோஸென் புளுமும் ஒருவன். அடுத்த நாள் எங்கள் ஜாகைக்கு அவன் வந்தான். அப்போது மகா பரபரப்பா யிருந்தான். நாங்கள் உடனே கீயெப் நகருக்குத் திரும்பிப் போக வேண்டும் என்று அவன் சொன்னான். ஏனென்றால், அங்கே விசேஷ சம்பவங்கள் நடக்கும்போ திருப்பதாக வும், அதிகாரத்தைப் போல்ஷிவிக்குகள் கைப்பற்றிவிடப் போவதாகவும் சொன்னான்.

அன்று தினமே நாங்கள் பீட்ரோக்ராட் நகரை விட்டுப் புறப்பட்டோம். கீயெப் நகர ரெயில்வே ஸ்டேஷனுக்குப் போய்ச் சேர்ந்தோம். இதற்குள்ளேயே நகரில் சண்டை தொடங்கிவிட்டதாக ஸ்டேஷனிலே கேள்விப் பட்டோம். நகரின் சில தொகுதிகளையும் போல்ஷிவிக்கர்கள் கைப்பற்றிவிட்டார்களாம். பொடோல் தொகுதியை நோக்கி அவர்கள் முன்னேறிக்கொண் டிருந்தார்களாம்.

ரோஸென் புளும் எங்களிடம் சொன்னான்: " என் மனைவியும் மகனும் வீட்டிலே என் வருகைக்காகக்

காத்துக்கொண் டிருப்பார்கள். அவர்களை உடனே போய்ப் பார்க்கவேண்டும் என்று என் உள்ளம் துடிக்கிறது. இப்படியும் என் உள்ளம் துடிக்கு மென்று நான் நினைத்ததே யில்லை. என்றாலும், வீட்டுக்குப் போகாமல், சண்டை முகத்துக்கே போகவேண்டும். அங்கே சண்டை யிடும் நம் வீரர்களோடு கலந்துகொள்ள வேண்டும். இதுவே நம் கடமை. போல்ஷிவிஸத்துக்காக இடைக் கால சர்க்காரை எதிர்த்துப் போரிட விரும்புகிறவர்க ளெல்லாம் என்னோடு வாருங்கள்" என்றான்.

எங்கள் மூட்டை முடிச்சையெல்லாம் அப்படியே ரெயில்வே ஸ்டேஷனில் போட்டோம். பொடோல் தொகுதிக்குப் புறப்பட்டுவிட்டோம்.

உண்மைதான்; அங்கே மிக உக்கிரமான போராட் டந்தான் நடந்துகொண் டிருந்தது. பணக்கார மிராசுதார் களும் உத்தியோகஸ்தர்களும் பொதுமக்களில் ஒரு பகுதியாரும், பாட்டாளி மக்களை எதிர்த்துக் கடுமையாய்த் துப்பாக்கியால் சுட்டுக்கொண் டிருந்தார்கள். இந்தச் சண்டையில் இடைக்கால சர்க்காருக்கு எதிரே உக்ரேனியப் போல்ஷிவிக்குகள் வெற்றி பெற்றதுதான் பிரசித்தி யாயிற்றே. கீயெப் நகரம் முழுவதையும் பாட் டாளி மக்கள் வசப்படுத்திக் கொண்டார்கள். ஆனால், அந்த நகரில் ஸோவியத் அதிகாரம் ஜனவரி மாதந்தான் உறுதிப்பட்டது. அதுவும் நெடுநாள் நிலைக்க வில்லை. ஏனென்றால், பின்னால் அந்த நகரத்தை ஜெர்மன் துருப்புக்கள் ஆக்கிரமித்துக்கொண்டன.

இதெல்லாம் இருக்கட்டும். நாங்கள் ஸ்டேஷனுக்கு வந்தோமா; அங்கே யிருந்தே நேராகச் சண்டையில் போய்க் கலந்து கொண்டோம். அப்போது நான் துப்பாக்கி சுடவில்லை. ஏனென்றால், அதற்கு முன் ஒரு

போதும் துப்பாக்கியை என் கையாலும் தொட்டது கிடையாது.

ஆனால், சண்டை போடுபவர்களுக்கு நான் ஒத்தாசை செய்தேன். துப்பாக்கித் தோட்டாக்களைச் சுமந்தேன். காயம் பட்டவர்களுக்குக் கட்டுக் கட்டினேன்.

சண்டை முடிந்தது. நகரம் முழுவதும் எங்கள் வசம் ஆயிற்று. அப்போது ரோஸென் புளூம் என்னிடம் சொன்னான்: "இப்போது நீ மிகக் கடுமையான பரீட்சையில் தேறிவிட்டாய். ஆகவே, கட்சியின் அங்கத்தினளாக நீ பதிந்து கொள்ளவேண்டும்."

அந்த இடத்திலேயே அவன் எனக்கு ஒரு சீட்டு எழுதிக் கொடுத்தான். அந்தச் சீட்டுடன், என்னைக் கட்சியின் கமிட்டிக்கு அனுப்பினான்.

அங்கே ஒரு மேஜையடியில் ஒரு பெண் உட்கார்ந்து கொண்டிருந்தாள். கட்சியின் புதிய அங்கத்தினர்களை அவள் ஒரு ரெஜிஸ்டரில் பதிவு செய்துகொண்டிருந்தாள்.

போர் முனையிலிருந்து திரும்பிய தொழிலாளர்களும் கடல் படை, கப்பல் படை வீரர்களும் வெகுதூரம் நீண்ட ஒரு வரிசையாக நின்றுகொண்டிருந்தார்கள். அவர்களெல்லாம், கட்சியிலே அங்கத்தினர்களாய்ச் சேர விரும்பினார்கள்.

வரிசையிலே நானும் போய் நின்றுகொண்டேன். விரைவில் எனக்குச் சிவப்பு நிறச் சிறு புத்தகம் ஒன்று கிடைத்தது.

அன்று முதல் இன்று வரையில் நான் கட்சியிலே ஓர் அங்கத்தினளாக இருந்து வருகிறேன்.

மேலே கண்ட நிகழ்ச்சிகளுக்குப் பின்னுல், கீயெப் நகருக்கு மகா கஷ்ட காலம் தொடங்கியது.

ஒன்றுக்குப் பின் ஒன்ருக, ஜெர்மன் துருப்புக்களும், ஹேட்மான் ஸ்கொராபாட்ஸ்கீ, பெட்லுரா, டெனிகின் ஆகியவர்களின் படைகளும் அந்த நகரில் புகுந்து, தங்கள் தங்கள் அதிகாரத்தை ஸ்தாபித்துக் கொண்டன.

ஆனுல், போல்ஷிவிக்கராகிய நாங்கள் கையைக் கட்டிக்கொண்டு சும்மா உட்கார்ந்திருக்க முடியவில்லை.

ஜெர்மானியர் வந்து சேருமுன்பு ஒன்றிரண்டு மாதங்கள்மட்டுமே நான் ஓரளவு அமைதியாய் வாழ்ந்துகொண்டிருந்தேன். படைகளின் படையெடுப்புகளிலோ, சண்டைகளிலோ கலந்து கொள்ளாமல் வாழ்ந்தேன். அந்தக் காலத்தில் ஒரு மனிதனுடன் வாழத் தொடங்கினேன். அவனுக்கும் எனக்கும் மணமும் நடந்தேறியது.

17. படையெடுப்பில்

அது எப்படி நடந்ததென்ருல், சொல்லுகிறேன்: புரட்சியில் ஈடுபட்ட ஒரு மாணவன் எனக்கு அங்கே அறிமுகமானுன். அர்க்காடி டாமிலின் என்று அவனுக்குப் பெயர். அவன் சர்க்கார் அதிகாரி ஒருவரின் மகன். ஆனுலும், கீயெப் நகரைக் கைப்பற்ற நாங்கள் போரிட்டுக்கொண்டிருந்தபோது, முற்றும் பாட்டாளி மக்களின் கட்சியையே அவன் ஆதரித்தான். அவனிடம் எனக்கு அபாரமான மதிப்பு விழுந்தது. அவனும் என்னிடம் காதல் கொண்டான். ஒரே வார்த்தையில் சொன்னுல், பரஸ்பரம் எங்களுக்கிடையிலே அளவற்ற பிரேமை உண்டாகிவிட்டது.

கட்சியில் அவன் அங்கத்தினன் அல்ல. என்ருலும், மக்களின் நன்மை பற்றிய விஷயங்கள் வரும்போது

அவன் ஒரே வெறி கொண்டுவிடுவான். பிரபுக்களை யும் வியாபாரிகளையும் அடியோடு வெறுத்தான். "பாடுபட்டு உழைப்பவர்களுக்காகப் போராடுவது நாணயமுள்ள சகல மனிதர்களுக்கும் கடமை" என்று அவன் சொன்னான். மேலும், "தங்கள் தோள் மேல் ஏறி நின்றுகொண்டு தங்களைச் சுரண்டும் சகல மான மனிதர்களையும், பாட்டாளி மக்கள் கீழே தள்ளி விடவேண்டும். இதற்கேற்ற காலம் கடைசியாக இப் போது வந்துவிட்டது. அவர்கள் இனித் தங்களுக் காகவே தாங்கள் உழைக்க வேண்டும்; பிறரைச் சுரண்டி வாழும் மிகச் சில பேருக்காக இனி அவர்கள் உழைக்கத் தேவையில்லை. பின்னால் அதற்குக் கம்யூனிஸம் என்று பெயர் வைப்பார்களோ; வேறே என்ன பெயர் வைப்பார் களோ - அதைப்பற்றி யெல்லாம் நமக்கு இப்போது கவலையில்லை. அந்த விவரமெல்லாம் பின்னால் விரிவாக ஏற்பாடு செய்துகொள்ளுவார்கள். அது எப்படியானா லும், பாட்டாளி மக்களுக்கு நன்மையான ஏற்பாடாகவே யிருக்கும். இன்று இந்த உடனடியான நோக்கத்துக் காக நாம் போராட வேண்டும். நம் உயிரே போவ தானாலும் அதற்கும் துணிந்து நாம் போராட வேண்டும். இதுவே இப்போது நாம் புரிய வேண்டிய கடமை" என்று சொன்னான்.

அவன் மகா ஆவேசமான மனிதன்; நாணயஸ்தன். இயந்திர நுட்பக் கல்லூரியில் ஒரு மாணவனாக அவன் படித்துக்கொண் டிருந்தான். ஆனால், படிப்பை முடித்துப் பட்டம் பெறவில்லை. கீயெப் நகரம் ஜெர்மானியர் கைகளிலும் ஸ்கொரபாட்ஸ்கியின் கைகளிலும் விழுந்த போது, அந்த மாணவனும் நானும் சேர்ந்தே கொரில்லாப் படையில் புகுந்தோம். ஜெர்மனியில் புரட்சி ஏற்பட்ட பின்பு, கீயெப் நகரிலிருந்து ஜெர்மன்

படைகள் வாபஸாயின. அப்போதும் நாங்கள் இருவரும் சேர்ந்தே செம்படையில் புகுந்தோம். செர்னிகாவ்ஸ்க் முனையில் போரிட்ட பிளாஸ்டுனுவ் சேனையிலும் நாங்கள் இருவரும் சேர்ந்தே சேவை செய்தோம்.

அதில் நான் ஒரு சாரணியாகவும் அவன் மெஷின் பீரங்கிப் படையிலும் உழைத்தோம்.

செர்னிகாவ் நகரை நாங்கள் பிடித்துவிட்டோம். அந்தச் சமயத்தில் வெண்படைத் துப்பாக்கிக் குண்டு ஒன்று அவன் மீது பாய்ந்து அவனைக் கொன்று விட்டது.

என் உயிருக்கு உயிரான நேசர்களை இழந்து இழந்து எனக்கு வழக்கமாகிவிட்டது. என் ஆயுள் முழுவதும் இந்த மாதிரி மகத்தான நஷ்டங்களை நான் அநுபவித்திருக்கிறேன். ஆனால், இந்தத் துக்கம் என்னை எவ்வளவு தூரம் வாட்டிவிட்டது என்பதை என்னால் வர்ணித்துச் சொல்ல இயலாது. நான் பதறிப்போனேன். துக்கம் என் நெஞ்சை வந்து அடைத்தது. நான் கதறினேன். அந்த மாதிரி அதற்கு முன்பு ஒருபோதும் நான் கதறியதில்லை; இனியும் கதறப் போவதில்லை.

நான் துக்க சாகரத்தில் மூழ்கிவிட்டேன். அவனிடம் எனக்கு அவ்வளவு பிரேமை.

என் தோழர்கள் என்னிடம் சொன்னார்கள்: “அன்னா காஸ்யனுவா, இந்தப் பிரேதத்தின் முன்னிலையில், நீ ஒரு சபதம் செய்துகொள். ‘இந்தச் சாவுக்குப் பழிக்குப்பழி வாங்குகிறேன்’ என்று சபதம் செய். அப்போது நீ மிகுந்த ஆறுதல் பெறுவாய்” என்றார்கள்.

நானும் அப்படியே சபதம் செய்தேன்.

உண்மையிலே அது எனக்கு மிகுந்த ஆறுதல் அளித்தது. நம் நம்பிக்கைகள் நிறைவேறும் வரையில்

நான் கைப்பிடித்த சிறு துப்பாக்கியைக் கீழே வைப்ப தில்லை என்று பிரமாணமிட்டுச் சபதம் செய்தேன்.

அந்தச் சபதத்தால் நான் வெறி பிடித்தவள் போல் ஆனேன். சகல சமயத்திலும் போரின் முன்னணி யிலேயே நான் போய் நின்றேன். எந்த இடத்திலும் அக்கம் பக்கம் பாராமல் நேரே முன்னே பாய்ந்தேன். சத்துருவின் அணிக்குப் பின்னே புகுந்து அவனுக்குப் பலத்த சேதம் விளைவித்தேன். சத்துரு அணிக்குப் பின் புகுந்து அவனுடைய தலைமைக் காரியாலயத்தில் குண்டு வீசுவதென்றால், அது எனக்கு மிக அநாயாசமான காரியம்; அசாதாரணமான துணிச்சலும் மனத்திடமும் எனக்கு இருந்தன. அந்த நாட்களில், என் சாகசங் களுக்கு எல்லையே கிடையாது.

அந்தக் காலத்தில், நம் சேனைத் தலைமைக் காரியாலயத்தார் இரண்டு தடவை என் வீரச்செயல்களை மெச்சிப் பரிசளித்தார்கள். முதல் தடவை என் பெயர் செதுக்கிய ஒரு பிரௌனிங் துப்பாக்கியும், இரண் டாவது தடவை ஒரு தங்கக் கைக்கடிகாரமும் எனக்குப் பரிசு கிடைத்தன. செங்கொடி ராணுவ ஆர்டர் பதக்கம் பின்னால் எனக்குக் கிடைத்தது. போர் வாழ்க்கையில் நடந்த சம்பவங்களை யெல்லாம் எழுதுவதென்றால், அதுவே ஒரு தனிப் புத்தகமாய் முடியும். அவ்வளவு அபூர்வமான சம்பவங்கள் அந்த இரண்டு வருஷங்களி லும் நிகழ்ந்தன.

உள்நாட்டு யுத்த சரித்திரத்தை எழுதும்போது, அந்த நாட்களில் நிகழ்ந்த தீரச் செயல்களைக் கட்டாயம் அதில் எழுதத்தான் எழுதுவார்கள்.

வெற்றிகளும் கிடைத்தன; தோல்விகளும் கிடைத் தன. மகா கஷ்டமான காலமும் வந்தது. உக்ரேன்

பிரதேசம் முழுவதுமே வெண் படைகளின் கையில் சிக்கியது. பீட்ரோக்ராட் நகரை நோக்கி, யுடெனிச் முன்னேறி வந்து விட்டான்.

அப்போது தலைமைக் காரியாலயத்துக்குப் போய், அங்கே செய்தி அறிக்கைகள் ஒட்டியிருக்கும் விளம்பரப் பலகையை நாம் நிமிர்ந்து பார்த்தோமானால், துயரம் தாளாமல் நம் நெஞ்சம் சோர்ந்து போகும். ஆனால், இதற்கெல்லாம் மாறாக, நாம் ஒரே மாதத்தில் வெண் சேனையை, கிரிமியா வரைக்கும் ஓட ஓடத் துரத்தியடித்தோம்,

ருஷியப் பிரபுக்களின் கைக் கருவியான இந்த வெண் சேனையை, பெரெகாப் பூசந்தி வரைக்கும் நாம் துரத்திக்கொண்டு போகையில், காப்டென் ஸ்வெதயேவின் வார்த்தைகள் எனக்கு ஞாபகம் வந்தன. "வினைப் பயனை அநுபவிக்கும் காலம் வந்துவிட்டது; நடந்த நடப்புக்கெல்லாம் பழி வாங்கும் நேரம் வந்துவிட்டது" என்று அவன் அன்றொரு நாள் சொன்னான். அது உண்மை யாயிற்று.

இந்த நாட்களில் காப்டன் கிளப் ஸ்வெதயேவ் எங்கே இருந்தானோ! அவனுடைய நண்பன் யுரோச்கா புனகாவ், சீமாட்டி நினா விக்டராவ்னா, அவள் புருஷன் தளபதி இவர்களெல்லாம் எங்கே இருந்தார்களோ! அதெல்லாம் எனக்குத் தெரியாது.

பின்னால் யால்டாவில் கிரிமியா நகரில் அவர்களைச் சந்தித்தபோதுதான், நான் அவர்களைப்பற்றி அறிய வந்தேன். அவர்கள் நாடு விட்டு நாடு ஓடிய சிறிதுகாலத்துக்கு முன்பே, இப்படி அவர்களை நான் சந்தித்தேன். அந்த நேரத்தை நான் ஒருநாளும் மறக்க முடியாது.

18. ஜிடாமிர் நகருக்குப் பயணம்

அது போகட்டும். நாம் ஜிடாமிரைப் பிடித்துவிட்டோம். அதன் பின்பு, மிக மும்முரமாக முன்னேறினோம். வெண் சேனையைக் கிரிமியாவை நோக்கித் துரத்திக் கொண்டிருந்தோம். அந்த நாட்களில் சில சம்பவங்கள் நடந்தன. அவற்றால் நான் எதிர்பாராத விதமாய்ப் பல மாத காலம் ஒரு வேலையும் செய்ய முடியாதவளாய்ப் போய்விட்டேன். சாகக் கிடந்தேன் என்றே சொல்லலாம்.

நடந்த விஷயம் இதுதான்: எங்கள் சேனையின் தலைவர் எனக்கு ஓர் உத்தரவிட்டார். பல ரெயில் வண்டிகள் நிறைய நோயாளிகளை வேறிடத்துக்குக் கொண்டு போகும்படி எனக்கு அவர் உத்தரவிட்டார். அந்த ரெயில் வண்டிகளின் காவல் படைக்கு என்னைத் தலைவியாக நியமித்தார். இதனால் சண்டையிலிருந்து ஒதுங்கிக் களைப்பாற எனக்குச் சிறிது ஓய்வு கிடைத்தது. சண்டை முகத்திலே நான் ஒரே ஆவேசத்தோடிருந்தேன்; ஆபத்து வருமே என்று துளியும் லட்சியம் செய்வதில்லை. இதை என் தோழர்களெல்லாம் கண்ணால் கண்டிருக்கிறார்கள். தவிர, என் புருஷனை இழந்த துக்கத்தை இன்னமும் நான் மறக்கவில்லை.

ஆகவே, என் மனத்தை வேறு வழியில் செலுத்த முயலவேண்டுமென்று அவர்கள் தீர்மானித்தார்கள்.

எங்கள் சேனைத் தலைவர் என்னிடம் சொன்னார்: "போக்குவரத்திலே இப்போது மிகவும் அபாயமான ஒரு நிலைமை ஏற்பட்டிருக்கிறது. ஐந்து ரெயில் வண்டிகள் நிறைய நோயாளிகள் இருக்கிறார்கள். அவர்களை எப்பாடு பட்டாவது, போர் முனைக்கு மிகவும் பின்னாலே கொண்டுபோய்ச் சேர்க்கவேண்டும். அன்னா காஸ்யனுவா, அவர்களை ஜிடாமிர் நகரில் கொண்டுபோய்ச்

சேர்க்கும் கடமையை உன்னிடம் நான் ஒப்படைக்கிறேன். அந்த ரெயில் வண்டிகளின் காவல் படைக்கு உன்னேயே தலைவியாக நியமிக்கிறேன். காயம் பட்டவர்களைப் பத்திரமாய் வேறிடத்துக்குக் கொண்டுபோய்ச் சேர்ப்பது பெரிய பொறுப்பும் பெருமையும் ஆகும் என்பது உனக்கு நினைவிருக்கட்டும்" என்றார்.

உண்மையிலே காயம் பட்டவர்கள் மூன்று ரெயில் வண்டிகளில்தான் இருந்தார்கள். இரண்டு ரெயில் வண்டிகளில் இருந்தவர்கள் அஸ்தி ஜுரம் வந்த நோயாளிகள். இந்த நோயாளிகளால் எனக்கே என்ன கதி நேரப் போகிறது என்பதைச் சேனைத் தலைவர் அறியவில்லை.

என் வேலையின் கஷ்டங்களை யெல்லாம் மிகச் சில தினங்களுக்குள்ளே நான் பரிபூர்ணமாய் உணர்ந்து கொண்டேன்.

இந்தக் கஷ்டங்களை யெல்லாம் கண்டு என் மனம் பிரமித்துப் போய்விட்டது. சகல நர்ஸுகளும் கொடிய நோயில் விழுந்து நரக வேதனைப்பட்டார்கள். தோட்டிகளின் கதியைப்பற்றிக் கேட்கவும் வேண்டுமா ?

பிரேக் சிப்பந்திகளுங்கூட அஸ்திஜுரத்தில் விழுந்தார்கள். காயம் பட்டவர்களே சிரமம் பாராமல் பிரேக் போட நேர்ந்தது. பிரயாணம் மிகவும் கஷ்டமாய்ப் போயிற்று. எல்லாவற்றிலும் மகா மோசம் என்னவென்றால், காயம் பட்டவர்களைக் கவனிக்க யாருமே இல்லை. அவர்களை நானே என் முதுகில் சுமந்து சென்றேன். செத்தவர்களைச் சாமான் வண்டிகளி லிருந்து வெளியே இழுத்துப் போட்டேன்.

பிரயாணத்தை நிறுத்தாமல் நடத்த, ஒவ்வொரு ஸ்டேஷனிலும் எஞ்சினும் அநுமதிச் சீட்டும் பெற வேண்டி யிருந்தது.

இப்போதுதான் எனக்குத் தெரிந்தது, இங்கே இருப்பதைவிடச் சண்டை முகத்திலே நான் எவ்வளவோ அதிக மகிழ்ச்சியா யிருந்தேன் என் ப து. இங்கே எனக்கு இருதயத்திலே நரம்புக் கோளாறு ஏற்பட்டது. தூக்கத்திலே எழுந்து நடக்கும் தூங்குமூஞ்சி வியாதியும் எனக்கு வந்தது.

ஒரு சமயம் ஒரு ஸ்டேஷன் மாஸ்டரைத் துப்பாக்கியால் சுடவும் சுட்டுவிட்டேன். நல்ல வேளையாய் ஏதோ கொஞ்சம் குறி தப்பியது.

நான் அவருடைய ஆபீசுக்குள் நுழைந்தேன். அவர் எனக்கு எஞ்சின் கொடுக்க மறுத்து விட்டார்.

நாங்கள் நாள் முழுவதும் நின்றுகொண்டே யிருந்தோம். என் நோயாளிகள் செத்து விழுந்துகொண்டே யிருந்தார்கள். மேலே பிரயாணம் செய்தாகவேண்டும்.

நான் பெற்றிருக்கும் விசேஷக் கட்டளையை ஸ்டேஷன்மாஸ்டரிடம் நீட்டினேன். அதை அவர் அலட்சியமாய் ஒருபுறம் தள்ளிவிட்டார்.

அப்போது அவரைக் கொஞ்சம் மிரட்ட எண்ணினேன். என் கைத்துப்பாக்கியை வெளியே இழுத்தேன்: "இப்போது என்ன சொல்லுகிறீர்? எஞ்சின் கிடைக்குமா, கிடைக்காதா?" என்று கேட்டேன்.

ஆனால், அவர் துளிக்கூடச் சலசலக்கவில்லை. வெகு அமைதியாகவே, "இங்கே பார்த்தீர்களா! என்ன பதற்றம் இவளுக்கு? என்னையே மிரட்ட வருகிருள்! ஏ பெண்ணே, உன் துப்பாக்கியைக் கீழே போடு. இல்லையானல், நானும் என் தோழரும் உன்னைப் பிடித்து ஜன்னல் வழியாக வெளியே தூக்கி எறிவோம். ஒவ்வொரு பெண்பிள்ளையும் இப்படித் தன் துப்பாக்கியை என் மூஞ்சிக்கு நேரே நீட்டுவாளானல், நம் கதிதான்

என்ன ? நீ இப்படிச் செய்ததால், இதற்காகவே உனக்கு ஒரு பாடம் கற்பிக்கப் போகிறேன். உனக்கு நான் எஞ்சினை தரப்போவதில்லை '' என்றார்.

எனக்கு அடங்கா ஆத்திரம் வந்தது. ஸ்டேஷன் மாஸ்டரை நேரே குறிபார்த்துச் சுட்டுவிட்டேன். குண்டு கணக்காய் அவருடைய தலைக்கு ஓர் அங்குலத்துக்கும் குறைவாக மிகவும் கிட்டச்சென்று சுவரிலே பாய்ந்தது.

அவர் ஒரு வார்த்தையும் சொல்லாமல், ஒரு கூச்சலும் போடாமல், குதித்தெழுந்து ஆபீஸுக்கு வெளியே ஓடினார்.

'' நான் உங்கள் அத்தனை பேரையும் பன்றிகள் மாதிரி சுட்டுத் தள்ளப்போகிறேன் '' என்று நான் உரக்கக் கத்தினேன்.

அவர்கள் அத்தனை பேரும் ஆரவாரம் செய்து கொண்டு ஓடத் தொடங்கினார்கள்.

உதவி ஸ்டேஷன் மாஸ்டர் '' கொஞ்சம் அமைதியாயிரு, அம்மா. எப்பாடுபட்டாவது உனக்கு நான் ஓர் எஞ்சின் வாங்கித் தருகிறேன் '' என்றார்.

இருபதே நிமிஷத்தில் அவர்கள் எனக்கு ஓர் எஞ்சின் தந்தார்கள்.

என் வண்டியில் எஞ்சினைப் பிணைப்பதைப் பார்க்க, ஸ்டேஷன் மாஸ்டரே வெளியில் வந்தார். ஆனால், நான் இருக்கும் பக்கம் திரும்பியே பார்க்கவில்லை. இதைக் கண்டபோது, நான் மிக வெட்கம் அடைந்தேன்; எவ்வளவு மோசமாய் நிதானமிழந்து போனேன் என்று எனக்கு வெட்கம் வந்தது.

ஆகவே, வண்டி புறப்படச் சிறிதுநேரம் இருக்கும் போது, ஒரு பெரிய ரொட்டியின் பாதியைத் துண்டாக வெட்டி, ஸ்டேஷன் மாஸ்டருக்கு அனுப்பினேன். அது

தமக்குத் தேவையில்லை என்று அவர் சிறிது பூதஞ்சி செய்தார். பின்பு ரொட்டியை நன்றியுடன் ஏற்றுக் கொண்டார். வண்டி புறப்பட்டபோது, அவர் கையை ஆட்டி எனக்கு விடையும் கொடுத்தார்.

இப்படியெல்லாம் ஒரு வண்டியைப் பிரயாணப்படுத்திக்கொண்டு போவதைவிட, சண்டை முனைக்கே போய் விடலாமா என்று எனக்கு ஆவலா யிருந்தது. என்றாலும் எனக்கிட்ட கடமையை நான் செய்து முடிக்கத் தானே வேண்டும் ?

இந்தக் கடமையைக் கௌரவத்துக்குரிய விதமாகவே நான் செய்து முடித்தேன்.

போகும் வழியிலே, என் வண்டியின் பிரயாணிகளில் கால்வாசிப் பேர் இறந்துபோனார்கள் என்பதென்னவோ உண்மைதான். என்றாலும், அது இன்னும் மோசமாய்ப் போகாததே அதிருஷ்டம்.

எப்படியோ, என் பாதுகாப்பில் விட்ட வண்டியை ஜிடாமிர் நகரில் கொண்டுபோய்ச் சேர்த்துவிட்டேன்.

ஜிடாமிர் நகரில், ஸ்நான விடுதிக்குச் சென்றேன். ஸ்நானம் செய்தேன். வெளியே வந்தேன். அப்படியே நடு வீதியிலே மூர்ச்சைபோட்டு விழுந்துவிட்டேன். பின்பு ஜன்னி பிடித்ததுபோல் ஒரேயடியாய்ப் பிதற்றத் தொடங்கினேன்.

அக்கம் பக்கத்தில் இருந்தவர்கள் என்னை ஆஸ்பத்திரிக்குத் தூக்கிச் சென்றார்கள். எனக்கு மிகக் கொடிய அஸ்தி ஜுரம் வந்துவிட்டதாக டாக்டர்கள் கண்டார்கள். என் படுக்கையிலிருந்து பொதீர் என்று கீழே குதிப்பேன் ; ஜன்னல் கண்ணாடிகளையெல்லாம் குத்தி உடைப்பேன் ; இன்னும் இப்படி என்ன என்னவோ செய்வேன்.

சுமார் ஆறு வார காலம் நான் வியாதியாய்ப் படுத் திருந்தேன். அப்புறம் குணமடைந்தேன். அதாவது தெம்பாக இரண்டடி நடக்கக்கூடிய அளவு குணமடைந் தேன். அதற்கு மேலே நடக்க முயன்ருல், குப்புற விழ வேண்டியதுதான்.

லெல்யா என்பவள் என் கீயெப் நகரச் சிநேகிதி களில் ஒருத்தி. அவளைத் தற்செயலாக இந்த ஆஸ்பத் திரியில் நான் சந்தித்தேன். ஜிடாமிர் நகருக்கு நாற்பது மைல் தூரத்தில் லெல்யாவின் மாமன் வசித்தார்.

தன்னேடு நானும் தங்கள் கிராமத்துக்கு வந்து அந்த மாமன் வீட்டில் இளைப்பாறலாம் என்று என்னை லெல்யா அழைத்தாள். நானும் அப்படியே சென்றேன்.

தலைமைக் காரியாலயத்தினர் எனக்கு ரஜாவும், கொஞ்சம் பணமும் கொடுத்தார்கள். நானும் லெல்யாவும் கிராமத்துக்குப் போனேம். அவளுடைய மாமன் வீட்டை அடைந்தோம். அவர் எங்களை அன்போடு வரவேற்ருர்.

அங்கே வெகு விரைவாக மூன்று வார காலத்துக்குள் நான் பூர்ண குணமடைந்தேன். இழந்த பலத்தைத் திரும்பவும் பெற்றேன். பழையபடி ஆரோக்கியத்தோடு உடல் பூரித்தேன். மறுபடியும் சண்டையில் போய்க் கலந்துகொள்வதென்று முடிவுசெய்தேன். ஏனென்ருல், உள்நாட்டு யுத்தம் இன்னும் முடிந்தபாடில்லை.

19. ஆபத்தான உத்தியோகம்

மீண்டும் ஜிடாமிர் நகருக்குச் சென்றேன். அங்கே யிருந்த தலைமைக் காரியாலயத்தார் எனக்கு ஒரு சேதி சொன்னுர்கள். எகா டெரினுஸ்லாவ் நகரில் உள்ள அதிகாரிகள் என்னைப்பற்றி விசாரித் திருக்கிருர்கள். அங்கே யிருந்து ஒரு டெலிபோன் கட்டளை வந்திருக்

கிறது. அதன்படி நான் உடனே அங்கே போகவேண்டும். இதுதான் ஜிடாமிர் நகரத் தலைமைக் காரியாலயத்தார் எனக்குச் சொன்ன சேதி.

எகா டெரினுஸ்லாவ் நகரத்துக்கு நான் போனேன். கட்சிக் காரியாலயத்தின் முன்பு ஆஜரானேன்.

மாகாணக் கமிட்டியில் உள்ள ஒரு தொண்டன் என் பெயரையே கொண்டிருந்தான். பியோடிர் காஸ்யனுவ் என்பது அவன் பெயர். அவன் என்னை வெகு மரியாதை யாக வரவேற்ருன். மிகவும் கடுமையான ஓர் உத்தியோ கத்தை நிர்வாகிகள் எனக்குக் கொடுக்க விரும்புவதாக, அவன் என்னிடம் சொன்னுன். பெரெகாப் சண்டை முனையிலிருந்து திரும்பி வந்திருந்த இரண்டு ராணுவ வீரர்களை அவன் எனக்கு அறிமுகம் செய்து வைத்தான். பாட்டாளி மக்கள் நடத்தும் போராட்டத்தின் தலை விதியை நிர்ணயிக்கக் கூடிய நெருக்கடியான கட்டம் இப்போது வந்திருப்பதாகவும் அவன் சொன்னுன். ஸோவியத் ருஷியாவில் பிரபுக்களின் படைகளும் நடுத்தர வகுப்பாரின் படைகளும் அடியோடு ஒழிந்து விட்டனவாம். நாடு முழுவதும் மக்களின் கைக்கு வந்து விட்டதாம். கூடிய சீக்கிரத்திலே தேசம் பூத்துச் செழிக்குமாம். என்ருலும், கிரிமியா பிரதேசம் மட்டும் இன்னமும் எதிரியின் கையிலே - தளபதி விராங்கலின் கையிலே - அதிகாரிகள், பிரபுக்கள், மிராசுதார்களின் கையிலேயே-இருக்கிறதாம். இந்த நிலைமை எதுவரை யில் நீடிக்கிறதோ அதுவரையிலும் நாம் ஆயுதத்தைக் கீழே வைக்க முடியாதாம். இவற்றையெல்லாம் அவன் சொன்னுன்.

“இந்தப் போர் முனையை, எப்பாடு பட்டும் மாரிக் காலத்துக்கு முன்னே ஒழித்துக் கட்டவேண்டும். இந்தக் கிரிமியா, நம் கௌரவத்துக்கே இழுக்கு. ருஷியப்

பிரபுக்களைச் சகல போர் முனைகளிலிருந்தும் நாம் துரத்தி யடித்தோம். இந்தக் கிரிமியாவில் நாம் தடைப்பட்டு நிற்பதா? இதை நாம் சகிக்க முடியாது. இந்தத் தீப கல்பத்தி லிருந்து, வெண் படையை நேரே சமுத்திரத் திலே கொண்டுபோய் நாம் தள்ளிவிடவேண்டும். இனிப் பொறுக்க முடியாது" என்று ஒரு ராணுவ வீரன் சொன்னான்.

இதைத் தொடர்ந்து காஸ்யனுவ் சொன்னான்: "இது சம்பந்தமாக நாங்கள் உனக்கு மிகவும் பொறுப் பான ஒரு வேலையை வைத்திருக்கிறோம். ஏற்கனவே நீ செய்துள்ள புகழுக்குரிய செயல்களை நாங்கள் அறிவோம். உன் தீரமும் மக்களின் புரட்சியில் உனக் குள்ள பக்தியும் எங்களுக்கு மிக நன்றாகத் தெரியும். ஸிம்பெரபோல் நகரில், நம் தொண்டர் சங்கங்களைத் தளபதி குடெபாவ் குரூரமாய் அடக்கி ஒடுக்கிவிட்டான். சங்க அங்கத்தினர்களில் பலரை அங்கங்கே லாந்தர்க் கம்பங்களில் தூக்குப் போட்டு விட்டான். ஸிம்பெர போல், யால்டா இந்த இரண்டு நகரங்களிலும் ரகசிய மாய் வேலை செய்யும் நம் சங்கங்களோடு தற்போது நமக்குத் தொடர்பு அறுந்து போயிருக்கிறது. நம்மில் யாராவது, எப்படியாவது அங்கே போய்ச் சேரவேண்டும். நம் தோழர்களுக்குப் பணம் கொண்டுபோய்க் கொடுக்க வேண்டும். வருங்காலத்தில் அவர்கள் எப்படி வேலை செய்ய வேண்டும் என்ற யோசனைகளையும் அவர்களுக் குத் தெரிவிக்க வேண்டும். நீ இதைச் செய்வாயா? இந்த வேலைக்கு உன்னைத்தான் நாங்கள் நியமித்திருக் கிறோம். வேறே யாரையும் நியமிக்கவில்லை. ஏனென் றால், இப்போது கிரிமியாவுக்குப் போக ஒரே ஒரு வழி தான் இருக்கிறது. போர் முனையிலே நுழைந்து போவதுதான் அந்த வழி. அவசியமானல் நீ ஓர்

அதிகாரியின் மனைவி என்றோ, அந்த மாதிரி வேறே ஏதாவதோ வேஷம் போடலாம். ஒரே வார்த்தையில் சொன்னால், இந்த வேலைக்கு எந்த ஆண் பிள்ளையும் பயனில்லை. ஒரு பெண் பிள்ளைதான்......"

இங்கே அவன் என்னை நிமிர்ந்து ஒரு முறை ஏற இறங்கப் பார்த்தான். அந்தப் பார்வையில் திருப்தி யடைந்தவனாக மேலும் சொன்னான்: "உன் மாதிரி தோற்றமுள்ள ஒரு பெண் பிள்ளைதான் தேவை. அது வும் உன் மாதிரி தீரமுள்ள ஒரு பெண் பிள்ளையே தேவை. உன் தீரம் எங்கள் எல்லாருக்கும் தெரியும்!"

இதை ஒப்புக்கொள்ளுவதா, வேண்டாமா என்றெல் லாம் நான் யோசிக்கவில்லை. "சரிதான், வெண் படை யினரிடம் நான் போகிறேன். தேவையான வேலைகளை யெல்லாம் செய்கிறேன்" என்று தட்சணமே சொன்னேன்.

அவன் "ஆனால், அவர்கள் உன்னைக் கண்டு பிடித்துவிட்டால், உன்னை என்ன செய்வார்களோ தெரியவில்லையே! ஒரு வேளை அவர்கள் உன்னை......" என்று இழுத்தான்.

இங்கே அவன் மீண்டும் ஒரு முறை என்னை நிமிர்ந்து பார்த்தான். அப்போது திடீரென்று அவன் மெய் நடுங்கியதைக் கண்டேன். இப்போதுதான் அவன் என் ரூபத்தைக் கவனித்திருக்கிறான் என்று தோன்றியது. அவன் என்னைப் பார்த்த பார்வையிலே பற்றற்ற அலட்சியத்தைக் காணவில்லை. ஆழ்ந்த உணர்ச் சியே நிறைந் திருந்தது. அது எனக்குச் சங்கடமா யிருந்தது.

இந்த ரகஸ்யம் ஒரு பெண்ணுக்குத் தெரியாதா? நான் தெரிந்து கொண்டேன். அவனுக்கு என்னிடம்

பலமான ஆசை விழுந்து விட்டது. இப்படிப்பட்ட ஆசை அபூர்வமாகத்தான் விழும். ஒரே கணத்தில் அவன் இருதயத்திலே இந்தத் தீ மூண்டு விட்டது. அதை நான் நன்ருகக் கண்டு கொண்டேன். அனல் போல் கொதித்த தன் கையை, அவன் என் தோள் மீது வைத்தான். பின்பு அவனுக்கு வெட்கம் வந்துவிட்டது. என்ன சொல்வது என்று புரியாமல் அவன் திணறினன். ஏதோ விபரீதம் கிளம்பப் போகிறது என்று எல்லாருமே தெரிந்து கொண்டார்கள். அவர்கள் தங்கள் தொண்டையைக் கனைத்துக் கொண்டார்கள். அவனும் தன் தொண்டையைக் கனைத்துக் கொண்டான். பின்பு எழுந்திருந்தான். அறையிலே குறுக்கும் நெடுக்குமாய் நடந்தான்.

மேலே என்ன சொல்லுகிருன் பார்க்கலாம் என்று நாங்கள் அனைவரும் காத்திருந்தோம். 'அவன் ஏதாவது அசட்டுத்தனமாய் உளருதிருக்க வேண்டுமே' என்று நான் எண்ணினேன்.

அவன் சொன்ஞன்: "தோழி அன்ஞ காஸ்யஞுவா, உன் தேகம் இருக்கிற நிலை அதைத் தாங்காதென்ருல், நீ எக்காரணம் பற்றியும் அங்கே போகக் கூடாது. அப்போது இந்த வேலைக்கு நாங்கள் வேறே ஆள் பிடித்துக் கொள்கிருேம்."

"என் தேகம் இப்போது பூர்ண சௌக்கியமா யிருக்கிறது. உங்கள் கட்டளைகளை முழு மனத்தோடும் மிக மகிழ்ச்சியோடும் நான் நிறைவேற்றுவேன்" என்று சொன்னேன்.

ராஞுவ வீரரில் ஒருவன் சொன்ஞன்: "இப்படி ஏற்பாடு செய்வோம்: சண்டை முகத்தில் மிகவும் முன்னே யிருக்கும் ஒரு முனைக்கு உன்னை நாங்கள்

நாளைக்கு அழைத்துச் செல்லுகிறோம். எப்படி வேலை செய்வது என்ற ஒரு திட்டத்தை நாங்களும் நீயும் கலந்தாலோசித்து வகுப்போம். பின்பு நீ புறப்பட்டுப் போகலாம்.''

காஸ்யனுவ் என்னை மாடிப்படி வரையில் கொண்டு வந்து விட்டான். அப்போது அவன் சொன்னான்: "நீ கிரிமியாவிலிருந்து திரும்பி வந்ததும், நீ சம்மதித்தால், உன்னை நான் சந்திக்க விரும்புகிறேன்...நான்...நான்... ...அதை உன்னிடம் எப்படிச் சொல்லுவது என்று எனக்குத் தெரியவில்லை. இதோ பார்! உனக்கு முன்னே நிற்கிற இந்த மனிதன் உன் மீது கண்டதும் காதல் கொண்டுவிட்டான்! என்னைக் கண்டு எனக்கே ஆச்சரியமாயிருக்கிறது! ஆனால், நான் கனவு கண்டு கொண்டிருந்த பெண் நீதான்! உன்னை நான் காணக் கிடைக்காமல் இழந்து விட்டால், அது என் வாழ்க்கையிலே ஈடு செய்ய முடியாத நஷ்டமாகும்.''

ஒளிக்காமல் சொல்லுவதானால், அவன் வார்த்தைகள் என் மனத்தை இளக்கிவிட்டன. இந்த நாற்பத்தைந்து வயதுக் கிழவனிடம் நான் மோகம் கொண்டு விட்டதாகச் சொல்ல முடியாது. என்றாலும், நான் திரும்பி வந்ததும் அவனைச் சந்திக்கச் சம்மதித்தேன். ஏன் சம்மதித்தேன் என்று கேட்டால், அது எனக்கே தெரியாது. ஆனால், இப்படி ஒப்புக்கொள்ளுவது என் கொள்கைகளுக்கே விரோதம். ஒரு மனிதனை எனக்குப் பிடிக்காவிட்டால், அவனுக்கு எந்தவிதமாகவும் வாக்குக் கொடுப்பது என் சுபாவம் அல்ல.

அது எப்படியானாலும் சரி; இந்த நாளை நாங்கள் ஒருபோதும் மறப்பதில்லை என்று ஒருவருக்கொருவர் வாக்களித்து விடைபெற்றுப் பிரிந்தோம்.

20. இரவுப் பயணம்

அதே நாள் மாலையில் அவர்கள் என்னிடம் ஒரு வார்க் கச்சையைக் கொடுத்தார்கள். அந்தக் கச்சைக் குள்ளே பணம் வைத்திருந்தார்கள். ஸிம்பெரபோல் நகரில் வேலை செய்துகொண் டிருந்த ரகசியச் சங்கத் தாரிடம் அந்த வார்க் கச்சையை நான் கொடுக்க வேண் டும். இன்ன இன்ன மாதிரி நான் நடந்து கொள்ள வேண்டு மென்று எனக்குத் திட்டமான அலுவல்களையும் அவர்கள் சொன்னார்கள். இரண்டு விலாசங்களைக் கூறி, அவற்றை நான் மனப் பாடம் செய்து கொள்ளச் சொன் னார்கள். ஒன்று, யால்டா நகரில் உள்ள விலாசம்; மற் றது, ஸிம்பெரபோல் நகரில் உள்ள விலாசம். கிரிமியா பிரதேசத்தில் வேலை நிறுத்தங்கள் நிகழக்கூடும் என்ப தையும், அப்போது ரகசிய ஊழியர்கள் இன்ன இன்ன மாதிரி நடந்துகொள்ள வேண்டும் என்ற யோசனைகளை யும் அந்த இரண்டு விலாசதார்களிடமும் நான் தெரி விக்க வேண்டும்.

பின்பு, விலையுயர்ந்த பட்டு உள்ளுறைகளும் நல்ல ஆடையும் மிகச் சிறந்த சில தளவாடங்களும் எனக்கு வேண்டுமென்று அவர்களை நான் கேட்டேன். ஒரு சின்ன அம்சம் கூடப் பிசகாமல் பூர்ணமாய் வேஷம் போட நான் விரும்பினேன். ஒரு வேளை வெண் படை யினர் என்னைக் கைது செய்வார்களானால், ஸோவியத் ருஷியாவிலிருந்து தப்பி ஓடிவரும் ஒரு பெண்ணைப் போல் நடிக்க நான் தீர்மானித்தேன். ஓர் அதிகாரியின் மனைவி என்றோ அந்தமாதிரி வேறு ஏதாவதோ சொல் லிக் கொள்ளலாம் என்று முடிவு செய்தேன்.

பணக்காரர்க ளி ட மி ரு ந் து பறிமுதல் செய்த ஆடையாபரண தளவாடங்களிலே மிகவும் ஜோரான

சிலவற்றைப் பொறுக்கி யெடுத்து, எனக்கு அவர்கள் தந்தார்கள். அந்த மாதிரி ஆடையாபரணதிகளை நிலு வின் வீட்டிலே அன்றி வேறெங்கும் நான் கண்டதில்லை.

இவற்றை யெல்லாம் தவிர, நான் மிகவும் சிறப் பாய்க் காட்சி தருவதற்காக ரத்தினம் இழைத்த ஒரு மோதிரமும் ஒரு தங்கக் கொலுசும் அவர்கள் எனக்குத் தந்தார்கள்.

ஆனல், சமையல் செய்து சமையல் செய்து காய்த் துப் போன என் முரட்டுக் கைகளிலே இந்த ஆபரணங் களை நான் அணிந்துகொண்ட உடனே, எனக்கு ஒரே ஒரு சந்தேகம் வந்துவிட்டது. அதிகாரியின் மனைவி என்று நான் வேஷம் போடுவது சரிப்படாது என்று எண்ணி னேன்.

பின்னே யாராக வேஷம் போடுவது என்று அப் போது நான் முடிவு செய்யவில்லை. எல்லாம் சரியாய்ப் போய்விடும் என்று என்னவோ ஒரு தைரியம் எனக்கு ஏற்பட்டது. எனக்கோ சாரண வேலை செய்து செய்து நல்ல அநுபவம் உண்டு. ஆகவே, வெண் படையின் வசம் இருக்கும் பிரதேசத்துக்கு, நான் எந்தவிதத் தடங்கலும் இல்லாமலே போய்ச் சேர்ந்து விடலாம் என்று எனக்கென்னவோ நிச்சயமாய்த் தோன்றிற்று.

அவர்கள் சொன்ன இரண்டு விலாசங்களையும் பொட்டைப் பாடமாக மனத்திலே உருப் போட்டுக் கொண்டேன். பணம் அடங்கிய வார்க் கச்சையைத் தளுக்காக மார்பிலே கட்டிக் கொண்டேன். நினைத்த கணத்திலே கழற்றி எறியக் கூடிய விதமாகவே, அதைக் கட்டிக் கொண்டேன். மிக உயர்ந்த பிரபுக்கள் மாதிரி பெரிய தூர தர்சினிக் கண்ணுடி ஒன்றைத் தங்கச் சங்கிலி யிலே கோத்துக் கழுத்தில் மாட்டிக்கொள்ள, நான்

விரும்பினேன். ஆனால், அது அவர்களுக்குக் கிடைக்க வில்லை. முத்துச் சிப்பிபோல் சித்திரித்த மிக அழகிய ஒரு சிறு தூர தர்சினிக் கண்ணாடிதான் அவர்களுக்கு அகப் பட்டது. அதை அவர்கள் எனக்குக் கொடுத்தார்கள்.

மறுநாள் அவர்கள் என்னைப் பெரெகாப் பூசந்தி எல்லை வரையில் அழைத்துக்கொண்டு போய்விட்டார்கள்.

ரெயில்வே பாலத்துக்கு அருகே உள்ள மாவட்டம் வழியாக வெண்படைப் பிரதேசத்தில் நுழையலாம் என்று முதலில் நான் உத்தேசித்தேன். ஆனால், பட்டாளத் தலைவரான தோழர் கிரியாஸ்னாவ், அந்த வழி வேண் டாம் என்று எனக்கு யோசனை சொன்னார். "ரெயில்வே பாதைகளைச் சுற்றிலும் வெண்படையினர் விசேஷக் காவல் போட்டிருக்கிறார்கள். யாரும் காணாமல் இந்த வழியிலே நீ நுழைவது துளியும் சாத்தியமில்லை. எனவே, வேறு ஏதாவது வழிதான் கண்டு பிடிக்க வேண்டும்" என்று அவர் சொன்னார்.

ஆகவே, போர்முனை முழுவதும் அடங்கிய ஒரு படத்தை நாங்கள் ஆராய்ந்து பார்த்தோம். கோட்டைக ளுக்கு மிகவும் தூரம் அல்லாத மற்றோர் இடந்தான் சரி என்று தெரிந்தெடுத்துக் கொண்டோம். என் ஞாப கம் சரியானால், யஸ்சுங் கோட்டைகள் என்று அவற்றுக் குப் பெயரிட்டிருந்தார்கள் என்று நினைக்கிறேன்.

இந்த இடம் ஒரே திறப்பா யிருந்தது. விசாலமான கரம்பை வெளி என்றே இதைச் சொல்லலாம். இந்த வழியாக உள்ளே நுழைவது மிகவும் கஷ்டம் ஆயிற்றே என்று நீங்கள் எண்ணலாம். ஆனால், இங்கே ஒரே சகதியா யிருந்தது. தவிர, சில இடங்கள் கண்ணுக்கே தெரியாமலும் இருந்தன. நானே நல்ல சாரணி அல் லவா? இந்த இடம் மிகவும் சௌகரியம் என்பதை

உடனே உணர்ந்துகொண்டேன். வேறு எந்த இடங்களையும் விட மிகவும் குறைவாகவே இங்கே காவலாளிகள் இருப்பார்கள். இங்கே நுழைந்து மறுபக்கம் போய்ச் சேர்வது சுலபமா யிருக்கலாம். அது எப்படியானாலும் சரி, மற்ற இடங்களெல்லாம் இதைவிட மகா மோசமாக இருந்தன.

இங்கே ஒரு விஷயத்தைக் குறிப்பிடுவது ரசமா யிருக்கும். இது நடந்து பதினான்கு வருஷங்கள் கழித்து, அதாவது 1935-ஆம் வருஷத்தில், இந்தக் கரம்பை வெளிச் சகதியிலே செம்படை வீரன் ஒருவனுடைய எலும்புக் கூடு அகப்பட்டது. அதை உயர்ந்த ராணுவ மரியாதைகளோடு அடக்கம் செய்தார்கள். இந்த இடம் ஒரே மட்டமாகத் தென்பட்டாலும் கண்ணுக்குப் புலப்படாத சில மறைவிடங்களும் இதில் உண்டு என்பதற்கு இந்த நிகழ்ச்சியே போதிய அத்தாட்சி.

ஸவாஷ் தேக்க ஏரிக்கரை வழியாகச் செல்வது இன்னொரு மார்க்கம். ஆனால், அது எனக்குச் சரிப்படாது. அந்த மார்க்கத்திலே போனால், சுமார் ஒரு மைல் தூரம் உப்புத் தண்ணீரிலே காலை இழுத்து இழுத்து நடக்க வேண்டும்.

ஆகவே,'சகதிதான் நமக்குச் சரி' என்று நான் வெகு அமைதியாகத் தீர்மானம் செய்து விட்டேன். எதிரியின் அணிவகுப்பு ஸ்தானங்களை விளக்கும் படத்தை இரண்டு நாள் வரையில் துருவித் துருவி நன்றாய்ப் பார்த்துக் கொண்டேன். இரவின் இருளில் யாரும் காணாமல் எதிரியின் கோட்டை அணிவகுப்புகளைக் கடந்து செல்வதே என் வேலை. இதற்கு முள் கம்பி வேலிகளைக் கத்தரித்து வழி செய்து கொள்ளவேண்டும். மிக அசட்டையாக எதிரிகள் காவல் செய்யும் அந்தச் சகதி நிலப்

பிரதேசம் இருக்கிறதே, அங்கே போய்ச் சேரவேண்டும்; அப்படிப் போய்ச் சேர்ந்ததும், என் கதையைக் கிளப்ப வேண்டும். ஸோவியத் ஆட்சிக்குப் பயந்து ஓடி வந்த தாகக் கதை திரிக்க வேண்டும். இந்த ஆரம்பம் கொஞ் சம் மோசந்தான். ஏனென்ருல், இந்தக் காரணத்துக் காக ஸோவியத் படை அணிகளைக் கடந்து நான் ஓடி வர முடிந்த தென்ருல், எந்த முட்டாள் நம்புவான்? ஆனல், வெண் படையினரைக் கடந்து செல்ல வேறே ஒரு மார்க்கமும் இல்லை.

எப்படியாவது அவர்கள் கண்ணில் அகப்படாமல் அவர்களுக்குப் பின்னலே போய்ச் சேர்ந்துவிட்டே ஞல், பிறகு எந்தவிதக் கஷ்டமும் இல்லை. ஏனென்ருல், என் வார்க் கச்சையில் சில தஸ்தாவேஜுகள் வைத் திருந்தேன். அவற்றைக் கண்டால், பேரன் விராங்கல் பிரபுவே வாயைப் பிளந்து விடுவான்.

என் உடை விஷயமும் எனக்குப் பெருந் தொல்லை கொடுத்துவிட்டது. ஒவ்வொன்ருகப் பல உடைகளை உடுத்துப் பார்த்தேன். எவ்வளவு சாத்தியமோ அவ் வளவு தூரம் இயற்கையாய்த் தோன்ற நான் விரும் பினேன். நான் எதை உடுத்துக்கொண்டாலும் அது எனக்கு இயற்கையாய்த் தோன்ற வில்லை. ஆகையால், பாதி நைந்து போன சாதாரண ஆடை ஒன்றையே அணிந்து கொள்ள நான் தீர்மானித்தேன். ஆனலும் பட்டு உள்ளுறைகளையும் அணிந்து கொண்டேன். இப் படி உடுப்பணிந்து கொண்டதால், காதலால் மெலிந்து ஸோவியத் ராஜ்யத்தை விட்டு ஓடிவந்த ஒரு சீமாட் டியைப்போல் தத்ரூபமாய்க் காட்சி அளித்தேன்.

கடைசியாக, எல்லாம் தயாராகி விட்டது. செப்டம்பர் மாதம் 28-ஆம் தேதி எங்கள் அரண்களை விட்டு நான் வெளிக் கிளம்பினேன்.

எங்கள் காவல் வீரன் இருநூறு அடி தூரம் எனக்குத் துணை வந்து என்னைக் கரம்பை வெளியில் விட்டு வழியனுப்பினுன். இந்தப் பிரதேசத்தை மிக நன்ருக அறிந்த ஒரு சாரணனையும் என்னேடு அவன் விட்டுச் சென்ருன்.

இரவு நேரம். காரிருட்டு. வானத்தில் சந்திரன் இல்லை. எதிரிகளின் வாண வரிசைகளால், சற்று நேரத்துக்கொரு தடவை பளீர் பளீர் என்று வெளிச்சம் வந்தது. என் இருதயம் படபட என்று அடித்துக் கொண்டது. என்ருலும், எனக்குத் துளியும் பயம் உண்டாகவில்லை. அதற்கு மாருக, திடீரென்று என்னிடம் ஏதோ ஒரு பலம் வந்து மண்டியது. எவ்வளவு முடியுமோ அவ்வளவு சீக்கிரமாகவும் சிறப்பாகவும் சகல காரியத்தையும் செய்து முடிக்க வேண்டுமென்ற ஆவலும் என்னிடம் நிறைந்தது.

எனக்குத் துணை வந்த சாரணன் என் தோளைத் தொட்டான். நாங்கள் பையப் பைய ஜாக்கிரதையாக முன்னேக்கி நடந்தோம்.

கடைசியில் முள் கம்பி வேலியின் அருகில் போய்ச் சேர்ந்தோம். வெட்டிரும்புக் கத்தரியால் கம்பிகளைச் சாரணனும் நானும் நறுக்கி வழிசெய்து கொண்டோம். வேலியைக் கடந்தோம். வெடிச் சத்தம் கேட்டது. வாண வரிசைகள் மீண்டும் வானத்தில் ஜன்னல் பின்னலாய்ப் பாய்ந்தன.

இன்னெரு நூறடி நடந்தாயிற்று. மேலே இனி நான் எப்படிப் போக வேண்டும் என்ற யோசனைகளைச் சாரணன் எனக்குச் சொன்னுன். சொல்லிவிட்டு, என்னிடம் விடைபெற்று மறைந்தான்.

நான் தன்னந் தனியளானேன். என்னைச் சுற்றிலும் ஒரே சகதி. நான் மிக மெதுவாய் நடந்தேன். நடப்பது

மகா கஷ்டமா யிருந்தது. என் பலம் சிதறுவதுபோல் தோன்றியது.

சாரணன் காட்டிய நட்சத்திரங்கள் இருந்த திசை யிலே தொடர்ந்து நடந்தேன்.

புல்பற்றையா யிருந்த ஓர் இடத்தில், அப்படியே ஓய்ந்து விழுந்து படுத்துக் கொண்டு விட்டேன். இருபது நிமிஷ நேரம் படுத்திருப்பேன்; எனக்கு மிகக் களைப்பா யிருந்தது; மிக அசதியா யிருந்தது. அங்கேயே தூங்கி விடலாமா என்று கூடத் திடீரென்று எனக்கோர் ஆசை உண்டாயிற்று. ஆனால், அந்தத் தூக்க ஆசையை மிக வும் பிரயாசைப்பட்டு விரட்டினேன்; மேலே நடந் தேன். இப்போது வாண வரிசைகள் எனக்குப் பின் னாலே ஜன்னல் பின்னலாய்ப் பாய்வதைச் சட்டென்று கண்டேன். சரிதான்; எதிரியின் முன்னணிகளை இதற் குள்ளாகவே கடந்துவிட்டேன் என்று இதனால் எனக் குத் தெரிந்தது. இது நம்ப முடியாத சங்கதி என்றாலும், இதை நான் சாதித்ததற்குரிய பெருமை, அநுபவம் மிகுந்த அந்தச் சாரணனைச் சேர்ந்ததாகும்.

21. கைதியானேன்

சம தளமான ஒரு புலத்திலே இப்போது நான் முன் னேக்கி நடந்தேன். கொஞ்ச தூரம் போயிருப்பேன். ஒரு மைல்கூட இராது. அங்கே ஒரு காவல் வீரனின் மரப் பெட்டி நிற்பதைத் திடீரென்று கண்டேன்.

இதை நான் துளிக்கூட எதிர்பார்க்க வில்லை. ஆகவே, என்னையறியாமலே என் வாய் கூச்சலிட்டு விடும்போல் தோன்றியது.

நான் ஒரு பக்கமாய்த் தள்ளி நகர்ந்தேன். ஆனால், இந்தச் சமயத்திலே ஒரு குரல் கேட்டது.

" நில் ! யார் அங்கே போவது ?" என்றது குரல்.

மௌனம் சாதிப்பதில் பயனில்லை என்று எனக்குத் தெரியும். " நான் வெண் படையினரிடம் போகவேண்டும் " என்று சொன்னேன்.

உடனே தடதடவென்று காலடிச் சத்தம் கேட்டது. இரண்டு மனிதர்கள் என்னை நோக்கி ஓடிவந்தார்கள்.

அவர்கள் இருவரும் அதிகாரிகளா யிருக்கக் கண்டு நான் ஆச்சரிய மடைந்தேன். கைதாக நான் தயாரா யிருந்தேன். ஆனால், சாதாரண சோல்ஜர்களே என்னைக் கைது செய்வார்கள் என்று நான் எண்ணிக்கொண் டிருந்தேன். சோல்ஜர்களோடு பேசுவது எனக்குச் சுலபமா யிருந்திருக்கும். தங்கச் சரிகை அங்கியும் வாளும் தரித்த அதிரிகாரிகள் அல்லவா இவர்கள் ! இது கொஞ் சம் சங்கடமா யிருந்தது.

இந்தச் சமயம் பார்த்துச் சந்திரனும் உதயமானான். கொஞ்சம் வெளிச்சம் உண்டாயிற்று.

அதிகாரிகளில் ஒருவன் என் தோளைப் பிடித்துக் கிறு கிறு என்று குலுக்கத் தொடங்கினான். அவனுக்கு அவ்வளவு பீதி-பீதியிலே பிறந்த கோபம் !

" நீ யார் ? இங்கே எப்படி வந்தாய் ?" என்று அவன் கத்தினான்.

" இவள் யாரோ செம்படையைச் சேர்ந்த ஒரு சிறுக்கிதான். வேறு யார் இங்கே இப்படி மோப்பம் பிடிக்க வருகிறார்கள் ?" என்றான் மற்றவன்.

நான் வெகு அமைதியாகவே பதில் சொன்னேன் : "கனவான்களே, என்னை உங்கள் படைத் தலைவரின் காரியாலயத்துக்கு அழைத்துச் செல்லுங்கள். அங்கே நான் எல்லா விஷயமும் சொல்லுகிறேன்."

இப்படிப் பேச்சுக் கொடுத்துக் கொடுத்துச் சிறிது நேரத்தைக் கழிக்க நான் விரும்பினேன். அதனுல் என்ன லாபம் என்று எனக்கே தெரிய வில்லே.

“சொந்தக் காரணங்களால், நான் ஸிம்பெரபோல் நகருக்குப் போக முயல்கிறேன். செம்படையினரிடம் தப்பி ஓடி வந்திருக்கிறேன்” என்று மறுபடியும் அந்த அதிகாரிகளிடம் நான் சொன்னேன்.

அவர்கள் சிரித்துக் கொண்டே “இது உண்மையா யிருக்க முடியாது! என்ருலும், படைத்தலேவர் காரியா லயத்துக்கு வா, போவோம்” என்ருர்கள்.

அவர்கள் மிக்க மரியாதையாகவே நடந்து கொண் டார்கள்.

நாங்கள் எல்லாரும் படைத்தலேவரின் காரியாலயத் துக்குப் போனேம்.

என் களேப்பெல்லாம் எங்கேயோ பறந்து விட்டது. நான் எப்படி வேலே செய்வது என்பதை அவசரம் அவசர மாகச் சிந்தித்துத் திட்டம் செய்துகொண்டேன். தப்பித் துக் கொள்ள வழியில்லே. ரிவால்வர்களேக் கையிலே நீட்டியபடி எனக்கு இருபுறமும் தோளோடுதோள் பொருந்தப் பாராக் கொடுத்துக் கொண்டு அதிகாரிகள் நடந்தார்கள்.

நான் செய்ய வேண்டிய முதல் காரியம் என்ன என்ருல், என் வார்க் கச்சையைக் கழற்றி எறிவது தான்.

வார்க்கச்சை என் ஆடைக்கு உட்புறத்திலே இருந் தது. சுலபமாய் அவிழ்த்து விடக்கூடியவாறே அதைக் கட்டியிருந்தேன். யாரும் கவனியாதபடி என் கையை வயிற்றிலே தடவினேன். வார்க்கச்சை அவிழ்ந்து நழுவி, என் பட்டு உள்ளுறையைக் கடந்து, கால்வழியாய் மெத்

தென்று புல்லிலே விழுந்தது. அதிகாரிகள் இதைக் கவனிக்கவே யில்லை.

ஆனல், பணமும் தஸ்தாவேஜிகளும் போய்விட்டனவே என்று எனக்குத் திடீரென்று கடும் வருத்தம் வந்தது. 'ஹோ' என்று கதற வேண்டும்போல் இருந்தது. ஆனல், வேறு வழியில்லை. என் கழுத்திலே தூக்குக் கயிறு விழாமல் காப்பாற்றிக் கொண்டால்தானே, வருங் காலத்தில் வேலை செய்யலாம்?

மறுபடியும் ஒரு சந்தர்ப்பம் கிடைத்தால், வார்க் கச்சையைத் தேடி எடுக்கலாமே; அதற்காக வார்க் கச்சை விழுந்த இடத்தை ஞாபகத்தில் வைத்துக்கொள்ள வேண்டும் என்று எண்ணினேன். ஆனல், அந்த இழவை எப்படி ஞாபகம் வைத்துக்கொள்வது?

என் கால் அடிகளை எண்ணத் தொடங்கினேன். சுலபமாய் ஞாபகத்தில் வைக்கக்கூடிய ஏதாவதோர் இடம் வருகிறவரையில், இப்படிக் கால் அடிகளை எண்ணிக்கொண்டு போவது என்று தீர்மானித்தேன்.

எழுநூற்று ஐம்பது அடிகள் நான் எண்ணியபோது ரெயில் தண்டவாளம் வந்தது. மேலும், நூறு அடிகள் எண்ணிக்கொண்டு போனேன். நூருவது அடியில் ஒரு தந்திக் கம்பம் வந்தது. அதன்மீது எழுபத்தாறு என்று நம்பர் போட்டிருந்தது.

இந்த வேலை முடிந்தபின்பு, நான் சொல்ல வேண்டிய கதையைக் கட்டத் தொடங்கினேன்.

சமீப யுத்த அநுபவத்தில் நிகழ்ந்த ஒரு சங்கதி திடீரென்று எனக்கு ஞாபகம் வந்தது.

எவனே ஒரு வெண்படை அதிகாரியை நாங்கள் சிறைப் பிடித்தோம். கர்னல் கலூகின் என்று அவனுக்குப் பெயர். செர்னிகாவ் போர் முனைக்கு அருகே அவ

னைப் பிடித்தோம். அவன் வாலிபன். வயது சுமார் முப்பது இருக்கும். அவன் நடந்து கொண்ட நடப்பு எங்களுக் கெல்லாம் ஆச்சரியமா யிருந்தது.

அவனை எங்கள் படைத் தலைவரின் காரியாலயத் துக்கு நாங்கள் அழைத்துச் சென்றபோது, அவன் மிக்க தீரமாகவும் இயல்பாகவும் நடந்துகொண்டான்.

அவன் எதற்காக வந்தான் என்று கேட்டோம். கண்ட கண்ட பொய்யெல்லாம் சொல்லுவான் என்று நாங்கள் எதிர்பார்த்தோம். ஆனால், அவன் சொன்னது இதுதான்: "ஆமாம். நான் வெண்படை அதிகாரியே. என் கொள்கையே அவர்களின் கொள்கைதான். எனக் குப் புரட்சியில் அநுதாபம் கிடையாது. அதை நான் உங்களிடம் ஒளிக்க விரும்பவில்லை. ஆனால், என் கௌரவத்தின் மீது ஆணையிட்டுச் சொல்லுகிறேன். என் வார்த்தையை நம்புங்கள். ராணுவ நோக்கமோ அரசியல் நோக்கமோ கொண்டு நான் உங்களிடம் வர வில்லை. வெண்படை பின்வாங்கிய பின்பு ஒரு பெண் இங்கே ஒரியால் நகரில் பின்தங்கிவிட்டாள். அவள் என் காதலி. அவளிடம் எனக்கு உண்டான ஆசை கட்டுக் கடங்காதது. அவளை வந்து பார்க்கத் தீர்மானித் தேன். அவளை அழைத்துக்கொண்டு நான் திரும்பிப் போக என்னை நீங்கள் அநுமதித்தீர்களானால், மனிதனுக்கு மனிதன் என்ற முறையில், உங்களிடம் பரம நன்றி பாராட்டுவேன். இனிமேல் உங்களை எதிர்த்துப் போரிடவே மாட்டேன். அப்படியில்லை யென் ருல், நான் இங்கேயே அவளுடன் தங்கி விடுகிறேன். அதாவது, நீங்கள் என்னிடம் கருணை காட்டுவீர்க ளானால் - என்னைச் சுட்டுக்கொல்லா திருப்பீர்களானால்- அப்படித் தங்குவேன். நான் செய்வது என்ன என்பது தெரிந்தே இங்கே வந்தேன்."

இந்த வார்த்தைகள் எங்கள் எல்லாருக்கும் ஆச்சரிய மூட்டின. என்ன நினைப்பது என்றே எங்களுக்குத் தெரியவில்லை.

ராணுவக் கோர்ட் ஜட்ஜி கேட்ட கேள்விகளுக்கெல் லாம், மின்கிரெல் பட்டாளத்தின் அந்தக் கர்னல் கலூகின் கம்பீரமாகவே பதில் சொன்னான். தன் காதல் கதையை மட்டும் கடைசி வரையில் அவன் விடவில்லை.

என்றாலும், கருணை காட்ட எந்தவித முகாந்திரமும் இல்லை என்று ராணுவக் கோர்ட் ஜட்ஜி முடிவு செய் தார். கர்னலுக்கு மரணதண்டனை விதித்தார்.

பின்பு, அவனிடம் ஜட்ஜி சொன்னார்: "கர்னல் அவர்களே, உமக்கு ஏதாவது கடைசி ஆசை உண்டா னால் சொல்லும்; அதைக் கௌரவிக்கிறோம். உமது போட்டோ படத்தையோ, வேறு ஏதாவது உமது பொருளையோ, உமது கடைசிச் செய்தியையோ, நீர் காதலிக்கும் பெண்ணுக்கு அனுப்ப உமக்கு விருப்ப மானால், அப்படியே அனுப்புகிறோம். நீர் இவ்வளவு உறுதியாய்க் காதல்கொண் டிருப்பது உமக்குப் பெரும் கௌரவம். ஆனாலும் நீர் எங்கள் எதிரி. நாங்கள் வேறு விதமாய் நடக்க எங்களுக்கு உரிமை இல்லை."

இதைக் கேட்ட கர்னல் கொல் என்று சிரித்துக் கொண்டே, "ருஷியாவின் தலைவிதி அந்தரத்தில் தொங்குகிறது. இந்த நேரத்திலே, ஒரு பெண்ணின் முன்றானையைப் பிடித்துக்கொண்டு நிற்பானா ஒரு ருஷிய அதிகாரி? இந்தக் கதையையும் நீங்கள் நம்புகிறீர் களா? பெண்ணு மில்லை, மண்ணு மில்லை. இதெல்லாம் உங்கள் கண்ணில் மண்ணைத் தூவ நான் இட்டுக் கட்டிய வெறும் கதை. அது பலிக்கவில்லை. என் துரதிர்ஷ்டம். நான் சாகத் தயாரா யிருக்கிறேன்" என்றான்.

இதைக் கேட்டதும் நாங்களெல்லாம் வியந்து திடுக்கிட்டுப் போனோம். செர்னிகாவ் பிரதேசத்தில் வெண் படையை முறியடித்து விட்டோம் என்பதால், அவர்களை நாம் அற்ப சொற்பமாய் மதிப்பது தவறு என்று இப்போதுதான் நாங்கள் அறிந்து கொண்டோம். எதிரிகள் உளுத்துப்போய் விட்டார்கள் என்றாலும், அவர்களுக்கிடையிலே வலிமையும் மகா தீரமும் படைத்த மனிதர்களும் இருக்கிறார்கள். அவர்களை ஏதோ வெறும் குப்பை என்று நினைப்பது பெரிய அரசியல் பிழை.

இது போகட்டும். என்னைப் படைத் தலைவர் காரியாலயத்துக்கு அதிகாரிகள் அழைத்துக் கொண்டு போகையில், இந்தக் கதை எனக்கு ஞாபகம் வந்தது. நானும் ஏதாவது ஒரு விதமான காதல் கதையைக் கட்டி, எதிரிப் படைத் தலைவரின் காரியாலயத்தில் சொல்லுவதுதான் சரியான யோசனை என்று எண்ணினேன். கர்னலின் கதையை நாங்கள் நம்பினோம் அல்லவா; அதேமாதிரி, இவர்களும் என் கதையை நம்பக் கூடும் என்று நினைத்தேன்.

"நாம் ஏதாவது காதல் கதை கட்டுவோம். அதைப் படைத் தலைவரின் காரியாலயத்தார் கேட்டு அநுபவிக்கட்டும்" என்று நான் தீர்மானம் செய்து கொண்டதும், என் மனத்தி லிருந்த பாரம் குறைந்தது. என் வெற்றியைப் பற்றி எனக்குச் சந்தேகமே ஏற்படவில்லை.

இந்தச் சமயத்தில் ஓர் அதிகாரி முரட்டுத் தனமாக என் தோளைப் பிடித்துக் குலுக்கி, "இங்கேயே நில்" என்றான். ஒரு சிறிய வீட்டின் வாசலில் நாங்கள் இப்போது போய் நின்றோம். ஒரு வேளை இதுவே படைத் தலைவரின் காரியாலயமா யிருக்கலாம் என்று நான் நினைத்தேன்.

இன்னமும் இருள் பிரியவில்லை. என்றாலும், வானம் சற்று வெளுத்தது. விடியற்காலையில் சுமார் ஐந்து மணியாகி இருக்கலாம்.

22. முதல் விசாரணை

என்ன காரணமோ, என்னை யாரும் இங்கே கேள்விகள் கேட்டு விசாரணை செய்யவில்லை. என்னைச் சோதனை மட்டுமே போட்டார்கள். மிக முரட்டுத்தனமாகவும் மானங்கெட்ட முறையிலும் சோதித்தார்கள். என்னிடம் எந்தப் பொருளும் இல்லையென்று கண்டார்கள்.

சோதனை முடிந்த பிறகு, படியிலேயே அரை மணி நேரம் நான் உட்கார்ந் திருந்தேன். அதிகாரிகளில் ஒருவன், கையிலே ரிவால்வருடன் என்னையே உறுத்துப் பார்த்து நின்றுகொண் டிருந்தான். மற்றவன் எங்கேயோ போனான்.

கடைசியாக, அவன் திரும்பி வந்தான். "இவனை ஜான்காய் நகருக்குக் கொண்டுபோகும்படி தளபதி உத்திரவிட் டிருக்கிறார். நம் இருவரில் ஒருவர் போகவேண்டும். லெப்டினண்ட் துரையே, உமக்கு இஷ்டமானால் நீரே போகலாம்" என்றான்.

இந்த லெப்டினண்ட் துரையும் நானும் பல மைல் தூரம் சென்றோம். பின்பு, ஒரு சாமான் ரெயில் வண்டியில் ஏறி, ஜான்காய் நகருக்குப் போனோம்.

ஒரு சாமான் வண்டியில் என்னை ஏற்றிவிட்டார்கள். இராத்திரி நேர்ந்த தொல்லைகளால் நான் மிகவும் களைத்துப் போயிருந்தேன். ஆகவே, சாமான் வண்டியில் ஏறிய உடனே, ஒரு மரக்கட்டைபோல் படுத்துச் சுரணையற்றுத் தூங்கினேன். எனக்கு விழிப்புக் கொடுத்த

போது, நாங்கள் ஜான்காய் நகருக்குப் போய்ச் சேர்ந்து விட்டோம்.

பத்து நிமிஷத்துக் கெல்லாம் என் விசாரணை தொடங்கிவிட்டது. கர்னல் பிரமிடாவ் என்பவன் என்னைக் கேள்விகள் கேட்டான். என்னை அழைத்து வந்த அதிகாரி, அந்தக் கர்னலுக்கு முன்னே விறைப்பாய் நின்றுகொண் டிருந்தான்.

அந்தக் கர்னல் துரை, வெண் படைகளின் உளவு இலாகா அதிகாரியா யிருக்கலாம்; அல்லது அந்த மாதிரி வேறே ஏதாவது உத்தியோகஸ்தனா யிருக்கலாம்.

லெப்டினண்ட் துரை சொன்ன தகவல்களை யெல் லாம் கேட்டுக் கொண்டு, அவனை வெளியே அனுப்பிவிட்டான். பின்பு, கர்னலும் நானுந்தான் அறையிலே தனியாக இருந்தோம். கர்னல் துரை மிக்க மரியாதையாகவே என்னோடு பேசத் தொடங் கினான். ஆனால், அவனது மரியாதை எனக்கு ஆறுதல் தந்துவிடவில்லை. அவன் என் முகத்தை விசேஷமாய்க் கூர்ந்து கவனிக்கவில்லை. அதுதான் எனக்குப் பயமா யிருந்தது. எக்காரணத்தாலோ தெரியவில்லை. கையிலே துருப்பில்லாமல் சீட்டு விளையாடினால் எப்படியிருக்குமோ அப்படிப் போலிருந்தது இது. இராத்திரி பட்ட அவஸ் தைகளினால், என்னைப் பார்க்க விகாரமாய்த் தோன்றி யிருக்கவேண்டும். அழுக்கு நாற்றமும் பரட்டைத் தலை யுமாய், நான் ஒரு குறத்தியைப்போல் இருந்தேன்.

கர்னல் என்ன என்னவோ கேள்விகள் கேட்டான். ஒவ்வொரு கேள்விக்கும் எனக்குத் தோன்றிய சிறந்த பதிலைச் சொன்னேன்.

நம்பத் தகுந்ததும் சந்தர்ப்பத்துக்குப் பொருத்தமு மான ஒரு விஷயத்தை அவனிடம் சொல்ல, நான் ஆயத்

தம் செய்துகொண் டிருந்தேன். உயிருக்கும் உயிராய்க் காதலித்த ஓர் அதிகாரியை நான் தேடிக்கொண் டிருப்பதாகவும் அதனாலேயே இங்கே வந்து சேர்ந்ததாகவும் சொல்ல விரும்பினேன். ஆனால், கடைசி நேரத்தில் என் மனம் குழம்பிவிட்டது, நான் கிரிமியாவில் உள்ள ஓர் அதிகாரியின் மனைவி என்று சொல்லிவிட்டேன்.

“அவர் பெயர் என்ன ?” என்று கேட்டான் அதிகாரி.

“அவருக்குப் புனகாவ் யூரி அனடால்யெவிச் என்று பெயர்” என்று நான் பதில் சொன்னேன்.

“எந்தப் பட்டாளத்தில் ? பெயர் எனக்குத் தெரிந்த பெயரா யிருக்கிறதே !” என்றான் கர்னல்.

“உயிர்க்காவலர் என்ற குதிரைப் பீரங்கிப் பட்டாளத் ளத்தில் அவர் ஒரு லெப்டினண்ட் பதவி வகிக்கிறார்” என்று நான் சொன்னேன்.

கர்னல் பிரமிடாவ் சிரித்துக்கொண்டே “நீ சாமர்த்தியமாய்த்தான் பேசுகிறாய். ஆனால், நீ அவருக்கு மனைவியாய் இருக்க முடியாது” என்றான்.

பின்பு, மரத்துப்போன என் கைகளை அவன் பார்த்தான்.

“உண்மைதான். ஆனால், நான் அவருடைய காதலி. அவர் என்னைக் கைவிட்டுவிட்டார். எனக்கோ அவரிடம் மிகுந்த பிரேமை. அவரைக் கண்டு பிடிக்காமல் விடுவதில்லை என்று நான் உறுதி பூண்டிருக்கிறேன். நான் அவருடன் இரண்டு வருஷ காலம் வாழ்ந்தேன். இப்போது அவரைக் காண எனக்கு அடங்கா ஆசை உண்டாகி யிருக்கிறது. அவரில்லாமல் உயிர் வாழவே எனக்கு இஷ்டமில்லை” என்று நான் பதில் சொன்னேன்.

கர்னல் பிரமிடாவ் என்னை நம்பவில்லை என்று கண்டுகொண்டேன். அவன் என்னைக் கேலி செய்யத் தொடங்கினான். பரிகாசக் கேள்விகளைக் கேட்டான். என் பூர்வோத்தரங்களைப்பற்றி யெல்லாம் விசாரித்தான்.

பிறகு, முரட்டுத்தனமாகச் சொன்னான்: "உன்னைப் பூமிக்குள் இருக்கும் ஒரு தனியறையிலே சிறையிடப் போகிறேன். இங்கே என்னதான் சொல்வது என்பதை நீ நிச்சயம் செய்து கொள்வது நலம். ஏ கழுதை, இன்னமும் நீ பொய்யே சொல்லிக்கொண்டிருந்தாயானால், உன்னைப் பரலோகத்துக்கு அனுப்பி விடுவேன். காவல் படை அதிகாரி ஒருவரின் மனைவி என்று உன்னை நீ சொல்லிக் கொள்கிறாயே! இதற்கே உன் தோலை உரித்துவிடலாம்போல் தோன்றுகிறது."

ஒரு சேவகனைக் கூப்பிட்டான். சேவகன் என்னை அடுத்த வீட்டுக்கு அழைத்துச் சென்றான். அங்கே பூமிக்குள் இருந்த ஓர் அறையில் என்னைத் தள்ளிப் பூட்டி விட்டான்.

சேவகன் என்னை அந்த அறைக்கு அழைத்துச் செல்கையில், ஓர் அதிகாரி என்னைக் குறு குறு என்று நோக்கினான். அவன் தலையிலே சொற்ப மயிர்தான் இருந்தது. அவன் என் அருகே வரக்கூட விரும்பியதைக் கண்டேன். ஆனால், என்னைக் காவல் செய்து கொண்டு சென்ற சேவகன், அந்த அதிகாரியைத் தடுத்துவிட்டான். அப்போது என் சிந்தனை வேறு விஷயங்களில் ஈடுபட்டிருந்தது. ஆகவே, இந்த அதிகாரியை விசேஷச் சிரத்தையுடன் நான் கவனிக்கவில்லை.

நான் சிறைப்பட்ட அறையில் ஒரே ஒரு சின்ன ஜன்னல் இருந்தது. ஒரு பூனையும் அதற்குள்ளே நுழைய முடியாது.

நான் கலவரமடைந்தேன் ; ஏக்கமுற்றேன். என் கதி அதோ கதி என்று தோன்றியது. அநேகமாய் முடிவிலே என்னைச் சுட்டு விடுவார்கள் என்று எண்ணினேன். ஒரு நிச்சயமில்லாமல் அசட்டுத்தனமான பதிலை ஏன் சொன்னேன் ? அதை விட அதிக நம்பகமான காதல் கதையை இட்டுக் கட்ட இயலாமையால் தான் அந்த அசட்டுப் பதிலைச் சொன்னேன். இந்த என் அசட்டுத் தனத்தைக் கண்டு, என்மீதே எனக்கு அசாத்தியமான கோபம் உண்டாயிற்று. என்றாலும், இனி இந்தச் சிக்கலி லிருந்து நான் மீளும் வழியைப் பார்க்கவேண்டும். எந்த விஷயத்தையும் நான் ஒப்புக் கொண்டு விடக் கூடாது. ஒப்புக் கொண்டால், எனக்கு மீட்சியே கிடைக்காது. சொன்ன காதல் கதையையே மீண்டும் விடாப் பிடியாய்ச் சாதிப்பது என்று நான் தீர்மானித்தேன்.

அறைக்குள்ளே கல்லும் மண்ணும் நிறைந்த ஒரு குப்பை மேட்டிலே உட்கார்ந்து கொண்டேன். அடுத்த விசாரணையில் நான் எப்படி நடந்து கொள்ளுவது என்பதை, அப்படி உட்கார்ந்தபடியே திட்டம் போட்டுக் கொண்டேன்.

திடீரென்று ஏதோ சங்கீதம் கேட்டது. குழந்தைகளின் மவுத் ஆர்கன் வாத்தியத்தை வைத்துக்கொண்டு யாரோ வாசித்தார்கள்.

நான் ஜன்னல் அருகே போனேன். முற்றத்தில் கர்னல் துரையே அங்கும் இங்கும் உலாவிக்கொண்டிருப்பதைக் கண்டேன். அவன் முகத்தில் ஆழ்ந்த சிந்தனையும் ஏதோ துக்கமும் நிறைந்திருந்தன.

அவனைத் தொடர்ந்து ஒரு சோல்ஜர் நடந்து கொண் டிருந்தான். அவன்தான் அந்த வாத்தியத்தை வாசித்துக்கொண் டிருந்தான்.

சோல்ஜர் மகா அருமையாய் வாசித்தான். ருஷியாவின் நாட்டுப் பாடல்களையே அவன் வாசித்தான்.

பின்பு, நான் சிறிதும் எதிர்பாராத ஒரு பாட்டை அவன் வாசித்தான். அதைக் கேட்டதும், எனக்கு அழுகை வந்துவிட்டது. அந்தப் பாட்டு எனக்கு ஞாபகமில்லை. அதை நான் அதற்கு முன்பு கேட்டதே யில்லை. அது இந்த வார்த்தைகளுடன் தொடங்கியது:

மூளை இருக்குதென் மண்டைக்குள்ளே
உள்ளங் கொதிக்குதென் ரத்தத்திலே!

இந்த மாதிரியே போகிறது அந்தப் பாட்டு.

சாதாரணமாய் அழக் கூடியவள் அல்ல நான். ஆனால், விசாரணையால் என் நாடி நரம்புகள் விலவிலத்துப் போயிருந்தன. அதனால்தான் அந்தப் பாட்டு என்னை அழச் செய்துவிட்டது. அது மிக மிக விசேஷமான ஒரு பாட்டு. சோல்ஜர் அதை மிகவும் உருக்கமான ராகத்திலே வாசித்தான். அதனால் என் இருதயமே தலைகீழாய்ப் புரண்டுவிட்டது போல் தோன்றியது.

என்றாலும், சிறிதுதான் அழுதேன். அதற்குள்ளே என்னை நானே அடக்கிக் கொண்டேன். ஆனால், எனது இந்தக் கணநேர மனோ பலவீனமே எனக்கு மிக்க உதவியாயிற்று. என்னதான் இடுக்கண் நேர்ந்தாலும் சரி; இனி ஒருபோதும் மனச் சோர்வுக்கு இடமளிப்பதேயில்லை என்று எனக்குள் நானே பிரதிக்கினை செய்து கொண்டேன். அழுதால் பயன் என்ன? அரற்றினால் பயன் என்ன? 'வரப்போகும் போராட்டத்திலே ஈடு கொடுக்கப் போதிய பலத்தை நான் சேகரித்துக் கொள்வதே மேல்; கடைசி வரையில் போராடித் தீர்ப்பதே மேல்; என் அருமை உயிரை, ஒரு நோக்கம் ஈடேறு

வதற்காகப் பணயம் வைப்பதே சிறப்பு' என்று நான் துணிவு கொண்டேன். ஏனென்றால், என் உயிர் எனக்குச் சொந்தம் அல்ல; ருஷியப் புரட்சிக்கே சொந்தம்.

இந்த எண்ணங்கள் என் மனத்துக்கு ஆறுதல் அளித்தன. மீண்டும் மனச் சுமை தீர்ந்தது; அமைதி பெற்றேன்.

அன்று மாலை நெடு நேரமான பின்பு, ஓர் அதிகாரி என்னை அழைத்துச் செல்ல வந்தான். அவன் காட்டிய மிதமிஞ்சிய மரியாதை எனக்கு அருவருப்பா யிருந்தது. "அம்மா, உங்களைக் கர்னல் பிரமிடாவ் அழைக்கிறார். என்னுடன் வாருங்கள்" என்று அவன் சொன்னான்.

23. இரண்டாவது விசாரணை

கர்னல் பிரமிடாவ் என்னுடன் மிக்க மரியாதை யாகப் பேசத் தொடங்கினான். என்னை உட்காரச் சொன்னான். நான் குடிக்க ஒரு கப் டீ கொண்டுவரச் சொன்னான்.

நான் டீயைக் குடித்தபடியே, கர்னல் துரை சொல்வதைக் கேட்டுக்கொண் டிருந்தேன். ருஷியா முழுவதுமே மகத்தான ஆபத்தில் சிக்கியிருப்ப தாகவும், கிரிமியாவை விட்டு வெண்படைகள் மட்டும் வெளியேறி விடுமானால் அந்நிய ராஜ்யங்கள் உள்ளே புகுந்து ருஷியா முழுவதையுமே சின்னபின்னம் செய்துவிடும் என்றும், கர்னல் துரை என்னிடம் சொன்னான்.

அவன் சொன்னதை மறுத்துச் சொல்லவேண்டும் போல் எனக்குத் தோன்றியது. என்றாலும், என்னை நானே அடக்கிக் கொண்டேன். அவன் சொன்னதை நான் மறுத்தால், அது என்னைக் காட்டிக்கொடுத்துவிடும் அல்லவா?

நான் டீயைக் குடித்து முடித்தேன். கர்னல் துரை மேஜையை ஒரு குத்துக் குத்தினன். "நீ ஒரு பொய்யள்! கேடுகெட்ட நாய்! நீ எங்களை உளவறியத்தான் வந்திருக்கிருய் என்று இப்போது எனக்குத் தெளிவாய்த் தெரிந்துவிட்டது. உன்னை இன்று நான் கட்டாயம் சுட்டுவிடப் போகிறேன்!" என்று உரக்கக் கத்தினன்.

"கர்னல் துரையே, யோசிக்காமல் நீங்கள் முடிவு செய்கிறீர்கள்" என்று நான் சொன்னேன்.

கர்னல் துரை மீண்டும் கத்தினன்: "உன்னைச் சோதிக்கவே உனக்கு நான் டீ கொடுத்தேன். காவல் படை உத்தியோகஸ்தன் ஒருவனுக்கு நீ காதலியாக இருந்திருக்க முடியாது. அது சுத்தப் பொய். நாட்டுப் புறத்தவளைப் போல் அல்லவா நீ டீ குடிக்கிருய்? கட்டிச் சர்க்கரையைக் கொடுக்காமல் பொடிச் சர்க்கரையையே உனக்குக் கொடுக்கும்படி சிப்பந்திகளிடம் நான் சொல்லியிருந்தேன். அதை நீ டீயிலே போடாமல் வாயிலே போட்டுத் தின்றுவிட்டாய். உணவுண்ணும் மேஜையருகே கண்ணியமான ஒரு புருஷனுடன் நீ ஒருகாலும் உட்கார்ந்திருக்க முடியாது. லெப்டினன்ட் புனகாவ் உன்னேடு கூட இரண்டு மாதகாலம் வாழ்ந்திருக்க முடியாது. அதை நான் நம்பமாட்டேன். இனியும் உன் வெட்கங்கெட்ட பொய்யைச் சொல்லிக்கொண்டிராதே. உண்மையைச் சொல். நீ ஏன் எங்கள் அணிவகுப்பைக் கடந்து வந்தாய்?" என்ருன்.

நான் குலைநடுங்கிப் போனேன். ஏனென்ருல், கர்னல் துரையின் ஊகங்கள் அடியோடு பொய். சர்க்கரையை நான் டீயிலே போடவில்லை என்பது உண்மைதான். ஆனுல், அது ஏன் என்ருல், கனவான்களின் வழக்கங்களை நான் நிறைய நிறையக் கண்டிருக்கிறேன்.

அதனால், சர்க்கரையைச் சிக்கனமாய் உபயோகிக்க நான் பழகி யிருந்தேன். ஏனென்றால், அப்போது பஞ்சம் வந்திருந்தது. யாரும் சர்க்கரையை டீயிலே போட்டுக் குடிப்பதில்லை. சர்க்கரையை நான் ஸ்பூனிலே எடுத்து நாக்கில் தடவிக்கொண்டு, அதோடு டீயைக் குடித்தேன். இந்த அல்ப விஷயத்தை ஆதாரமாய் வைத்துக்கொண்டு தன் முடிவுகளைக் கர்னல் துரை ஊகம் செய்துவிட்டது கண்டு, எனக்கு ஆத்திரம் வந்தது. நான் திணறிப் போனேன். எனக்கு ஒன்றுமே சொல்லத் தோன்ற வில்லை.

என் மௌனமே எனக்குக் கேடாய் முடிந்தது.

கர்னல் பிரமிடாவ் மறுபடியும் கத்தலானான்: "ஏ கேடுகெட்ட நாயே, நான் கேட்பதற்குப் பதில் சொல். நீ ஏன் எங்கள் அணிவகுப்பைக் கடந்து வந்தாய்?"

நான் என்னதான் ஆத்திரம் கொண்டிருந்தாலும், மிக்க உறுதியாகவே பதில் சொன்னேன்: "என் உயிருக்கும் உயிராய் நான் ஆசை வைத்த ஒருவரைப் பார்ப்பதற்காகவே, உங்கள் அணிவகுப்பை நான் கடந்து வந்தேன்."

கர்னல் துரை மகா கோரமான குரலிலே மீண்டும் கூச்சலிட்டான்: "ஏ நாயே, நீ பொய் சொல்லுகிறாய். உன் குடியானவக் கைகளைப் பார்த்தாலே தெரிகிறதே! இந்த நாற்றக் கைகளால் எங்கள் மென்னியைப் பிடிக்கவே நீ வந்திருக்கிறாய். சமய தீட்சை பெறாத உன் மாதிரி கழுதையை இதுவரையில் உலகமே கண்டிராது. உன்னிடம் இந்த மாதிரி நான் பேச இடங்கொடுக்கிறாயே; இதுவே என் சந்தேகங்களை ஊர்ஜிதம் செய்கிறது. நீ ஒரு போல்ஷிவிச்சிதான். உன் உடம்பிலே ஒரு சிலுவையைக் கூட நீ அணிந்திருக்க மாட்டாய் என்று நான் பந்தயம் வைக்கத் தயாரா யிருக்கிறேன்" என்றான்.

இப்படிச் சொல்லிய அவன், மகா மூர்க்கமாய் என் ஆடையைப் பிடித்துப் பர்ர் என்று இழுத்து மார்புவரை யில் அதைக் கிழித்து விட்டான். அவன் மகா பயங்கரமா யிருந்தான். என்னை அங்கேயே கொன்று விடப் போகிறான் என்றே நான் நினைத்தேன்.

ஆனாலும், 'சமய தீட்சை பெறாத கழுதை' என்று என்னை அவன் திட்டியதை என்னால் என்னவோ பொறுக்க முடியவில்லை. நான் மகா கோபம் கொண் டேன். சமய தீட்சையாவது மண்ணாங்கட்டியாவது! அதைப்பற்றி எனக்குத் துளியும் லட்சியமில்லை. சமய தீட்சை பெறாதவள் என்ற பழிப்பைக் கேட்டுக் கோபம் கொள்வது முட்டாள் தனமே. என்றாலும், என் கோபத்தை வெளியே கொட்ட ஏதாவது ஒரு காரணம் வேண்டுமல்லவா ?

" நான் சமய தீட்சை பெற்றவளே ! ஞான ஸ்நானம் பெற்றவள் ! நீதான் குப்பை மேட்டிலே வளர்ந்த நாய்க் குட்டி" என்று நான் கத்தினேன்.

அவன் என் தோளை ஒருகையால் முரட்டுப்பிடியாய்ப் பிடித்துக்கொண்டான். மறு கையால் தன் முழுப் பலத் துடனும் என் முகத்திலே ஓர் அறை விட்டான். என் மூக்காலும் வாயாலும் ரத்தம் பெருகியது. நான் துப்பி னேன். என் பற்களில் இரண்டு உதிர்ந்தன.

" அட ஆண்டவனே !" என்று கர்னல் துரை கத்தி னான்.

தன் சாய்மான நாற்காலியில் சாய்ந்தான். தலையை இரு கைகளாலும் கெட்டியாய்ப் பிடித்துக் கொண்டான்.

" அட ஆண்டவனே !" என்று அவன் மீண்டும் கத்தினான்; "அட ஆண்டவனே ! நான் ஒரு பெண்ணை

என் கையால் தொட்டு அடிப்பேன் என்று ஐந்து வருஷங்களுக்கு முன்னே எவனாவது என்னைச் சொல்லத் துணிந்தால்,ஒரு நாயை அடிப்பது போல் அவனை நான் அங்கேயே சுட்டு வீழ்த்தியிருப்பேன். ஏ பெண்ணே, இதைக் கேள்: உன் முரட்டுப் பிடிவாதத்தால், என்னைப் பித்தனாக்கி விட்டாய். ஒரு மனிதனை அடிப்பது போல் உன்னை நான் அடித்திருக்கக் கூடாது. இப்படி என்னைப் பித்தனாக்கிய உன்னை நான் ஒரு நாளும் மன்னிக்க மாட்டேன்'' என்றான்.

நான் ஒன்றும் சொல்லவில்லை.

அவன் தன் கைவிரல் மோதிரத்தைக் கழற்றினான். வேகமாக அதைச் சுழற்றி ஒரு மூலையிலே விட்டெறிந்தான்.

'' கேடு கெட்ட நாயே, அந்த மோதிரத்திலே நான் ஒரு சங்கல்பத்தைச் செதுக்கி யிருக்கிறேன். எந்தப் பெண்ணையும் என் கையால் தொட்டு அடிப்பதில்லை என்பதே அந்தச் சங்கல்பம். நான் பாவ்லாவ் ராணுவக் கலாசாலையிலே பயிற்சி பெற்றவன். நீ என் மோதிரத்தில் உள்ள சங்கல்பத்தை நான் மீறும்படி செய்து விட்டாய். உன்னை இப்படியே சுட்டுக் கொல்ல நான் தீர்மானித்து விட்டேன்'' என்றான்.

இந்தச் சமயத்தில் யாரோ வந்து கதவைத் தட்டினார்கள்.

''யாரா யிருந்தாலும் சரி; இப்போது உள்ளே வர முடியாது'' என்று மிக மூர்க்கமான குரலில் சொன்னான் கர்னல் துரை.

'' இதைக் கேளும், பிரமிடாவ்! ஒரே ஒரு நிமிஷம். மகா முக்கியமான ஒரு விஷயத்தை உமக்கு நான்

சொல்ல வந்திருக்கிறேன்" என்றது வெளியிலிருந்து வந்த குரல்.

கதவு திறந்தது. ஓர் அதிகாரி அறைக்குள்ளே வந்தான். இந்த அதிகாரி காப்டன் கிளெப் ஸ்வெதயேவ் தான் என்று நான் கண்டு கொண்டேன்.

முன் எப்போதும் போலவே இப்போதும் அவன் தோன்றினான். நல்ல அழகு. அருமையாய் உடுத்திருந்தான். அவனது கன்னங்கரிய மீசை அவன் முகத்தை எடுப்பாய்க் காட்டியது. புருவத்தைச் சுளித்துக்கொண்டே அவன் என்னைப் பார்த்தான். ஆனால், என்னை அடையாளம் கண்டுகொள்ள வில்லை. என் முகத்திலே காயம் பட்டு, ரத்தம் வழிந்துகொண்டிருந்தது. என் ஆடை கிழிந்து குலைந்திருந்தது. நான் அழுக்கும் தூசியுமாய்ப் பிசாசு போல் இருந்தேன்.

அவன் புன்சிரிப்புச் சிரித்துக் கொண்டே, "ஏ கர்னல் துரையே, இதென்ன வேலை?" என்றான்.

நான் என் முகத்தைத் துடைத்துக் கொள்வதற்காக, தன் ஜேபியிலிருந்து துல்லியமான ஒரு கைக்குட்டையை எடுத்து, காப்டன் என் முன்பு வீசியெறிந்தான். ஆனால், அதைக் கொண்டு நான் என் முகத்தைத் துடைத்துக் கொள்ள வில்லை. துடைத்துக் கொண்டால் அவன் என்னை அடையாளம் கண்டு கொள்வானே என்று நான் பயந்தேன். அப்படி அவன் அடையாளம் கண்டு கொண்டால், புனகாவைப்பற்றி நான் கட்டிய கதையெல்லாம் நிச்சயமாய் அம்பல மாகிவிடும். நான் பெஞ்சியிலே உட்கார்ந்து, என் முகத்தைக் கைகளால் மூடிக் கொண்டேன்.

கர்னல் துரை சொன்னான்: "இவள் செம்படையைச் சேர்ந்தவள். இது எனக்கு இப்போது நிச்சயப்பட்டுவிட்

டது. நம் நிலைமை மகா நெருக்கடியும் அபாயமுமா யிருக்கிறது. ஆகவே, நான் கொஞ்சம் நிதானம் இழந்து போனேன்.''

ஸ்வெதேயவ் சொன்னான்: ''யால்டா நகரில் உளவி லாகாத் தலைவனாக என்னை நியமித் திருக்கிறார்கள். இது உமக்குத் தெரியுமா? நான் இதோ புறப்பட்டுப் போகி றேன். நம் நிலைமை பற்றிச் சொன்னீரே; அது நீர் நினைப்பதைவிட இன்னும் அதிக மோசமா யிருக்கிறது. நான் குடபாவ் அவர்களைக் கண்டுவந்தேன். அவர் ஜன்னி பிடித்ததுபோல் ஒரே யடியாய்க் கூச்சலிட்டுக் கொண் டிருக்கிறார்; மகா மோசமா யிருக்கிறார். இதெல் லாம் என்ன பயங்கரமா யிருக்கிறது, பார்த்தீரா? சரித்தி ரத்திலேயே என்ன கோரமான காலம் வந்திருக்கிறது! நாகரிகம் வாய்ந்த என்னவோ ஒரு சில மக்கள் நாம் தான் இருக்கிறோம். படை திரண்டு கிளம்பிவிட்ட இந்தக் குடியானவக் கும்பல் முன்னேறி வருவதைத் தடுக்க முடியாமல், நாமும் பின்வாங்கி ஓட நேர்ந்திருக்கிறதே! இதுவரையில் ஒரு சின்னஞ்சிறிய தீபகற்பத்தை மட் டுமே நாம் விடாமல் வைத்துக்கொண் டிருக்கிறோம். ஆனால் இது இன்னும் எவ்வளவு நாள் தாங்கும்?''

''நாம் அழிந்துவிட்டோம் என்றே நானும் எண்ணு கிறேன். ஆமாம். நாகரிக மக்களிலே நாம்தான் கடைசி யாய் இருப்பவர்கள். நாகரிகத்தைக் காப்பாற்றக் கடைசியாய் மிஞ்சியுள்ள கோட்டை நாம்தான். நாமும் போய்விட்டால், ஒரே அந்தகாரந்தான் உலகத்தைச் சூழும். என்ன விநாசகாலம் வந்திருக்கிறது! உலகத்தைச் சைத்தான் பிடித்திருக்கிறது'' என்றான் கர்னல் துரை.

''பழிவாங்கும் நேரம் வந்துவிட்டது என்றே தோன்றுகிறது'' என்றான் காப்டன் ஸ்வெதயேவ்.

மேலும் அடிக்கடி அவனிடம் நான் கேட்டுள்ள பழமொழியை அவன் மீண்டும் சொன்னான் : "அப்பன் புளி தின்ன, மகனுக்குப் பல் கூசிற்றாம்!"

இந்த மடையர்களுக்குப் புத்திசொல்ல வேண்டுமென்று என் மனம் புல்லரித்தது. உலகத்தின் பாட்டாளி மக்கள் உன்னதமாய்த் தாங்கி நிற்கப்போகிற அற்புதமான புதிய நாகரிகம் ஒன்றைப்பற்றி இவர்களுக்கு நான் சொல்ல விரும்பினேன். "ஆமாம், கனவான்களே! பழிக்குப் பழிவாங்கும் நேரம் வந்துவிட்டது. மக்களைச் சுரண்டுவோரால், அவர்களின் முதலாளிகளால், மிராசுதார்களால், மக்களுக்கு நேர்ந்த சகல துன்பங்களுக்கும் தொல்லைகளுக்கு மெல்லாம் பழிவாங்கும் நேரம் வந்து விட்டது" என்று அவர்களுக்கு நான் சொல்ல விரும்பினேன்.

இந்தப் பிரச்னைகள் குறித்து எனக்கே அப்போது அவ்வளவு பலமான அபிப்பிராயங்கள் இல்லை. என்றாலும், அவர்களுடைய அபிப்பிராயம் தவறு என்று அவர்களிடம் சொல்லவே நான் விரும்பினேன்.

ஆனால், அப்படிச் சொன்னால், என் நிலைமை மேலும் மோசமாகி விடும். அதற்கு நான் துணிய வில்லை. என் உயிர் எனக்குச் சொந்தம் அல்ல. ஆகவே, நான் மௌனம் பூண்டேன். வார்த்தைகள் என் நாவிலேயிருந்து வெளிவரத் துடித்தன. என்றாலும், என்னை நானே கஷ்டப்பட்டு அடக்கிக் கொண்டேன்.

கர்னல் பிரமிடாவ் ஒரு சேவகனைக் கூப்பிட்டான். பின்பு, வேறோர் அதிகாரிக்கு ஒரு நீண்ட உத்தரவைக் கர்னல் துரை முணுமுணுத்தான். அந்த அதிகாரி உள்ளே வந்தான்.

"என்னைத் தொடர்ந்து வா" என்று அதிகாரி என்னிடம் சொன்னான்.

நாங்கள் அந்தக் கட்டிடத்தை விட்டு வெளியே வந்தோம்.

அரை மணி நேரம் கழித்து, அவர்கள் என்னிடம் விகாரமான தமாஷ் நாடகம் ஒன்று நடத்தினுர்கள். என்னைச் சுடப்போவது போல் நடித்தார்கள். நான் அவர்களுக்குச் சொல்லாமல் ஒளித்திருந்த விஷயங்களை என்னிடமிருந்து வெளிப்படுத்த அவர்கள் விரும்பினுர்கள். துப்பாக்கியைக் கண்டதும் நான் மனம் சோர்ந்து போய் உண்மையைக் கக்கிவிடுவேன் என்று அவர்கள் நினைத்தார்கள்.

என்னை அவர்கள் ஒரு தோட்டத்துக்கு அழைத்துச் சென்ருர்கள். ஒரு கதவுக்குப் பக்கத்திலே நிறுத்தி வைத்தார்கள். "சுடு" என்று உத்தரவு போட்டார்கள்.

இதற்குச் சற்று முன்பு, அவர்கள் என்னிடம், "நீ உண்மையைச் சொன்னுல் உன்னை விட்டு விடுகிருேம்" என்று சொன்னுர்கள். உண்மையை என்னிடமிருந்து கிரகிப்பதற்காக, என்னை அவர்கள் சாட்டையாலும் இரும்புக் கம்பியாலும் அடித்தார்கள்; என் தோளிலும் முதுகிலும் அடித்தார்கள். இத்தனை அடிகளையும் தாங்கிக்கொண்டு நான் மௌனமா யிருந்தேன்.

இப்போது உண்மையை ஒப்புக்கொண்டே னுைல் இதோடு தொலைந்தேன் என்று நான் மதித்தேன். ஆகவே, அவர்கள் கேட்ட கேள்விக் கெல்லாம் என் பழைய கதையையே விடாமல் சொல்லிக்கொண் டிருந்தேன். என்ருலும், கடைசியில் என் பலமும் பிரக்ஞையும் தளரத் தொடங்கின. எனக்கு உண்டான வலி, ஆத்திரம், மரணபயம் இவற்றை என்னுல் தாங்க முடியவில்லை.

அவர்கள் தங்கள் துப்பாக்கிகளை என்னைக் குறி பார்த்து நீட்டியபடி "இப்போது சொல், இதுவே உன்

கடைசி வார்த்தை! இனி நீ எப்படியும் சாகப் போகிருய்'' என்ருர்கள்.

"என் கடைசி வார்த்தையை நான் எற்கனவே சொல்லியாயிற்று. அப்படிச் சொல்லியும் நீங்கள் என்னைச் சுடத் தீர்மானித்தால், நீங்கள் அயோக்கியப் பதர்களே யாவீர்கள். இதுவே இந்த உலகத்தில் நான் சொல்லும் கடைசி வார்த்தை!'' என்று நான் பதில் சொன்னேன்.

என் தளரா உறுதியைக் கண்டு அவர்கள் பெரிதும் வியப்படைந்து விட்டார்கள். தங்கள் தோள்களைக் குலுக்கிஞர்கள்; திகில் அடைந்தவர்களாய்த் தோன்றிஞர்கள். இதை நான் கண்டேன். ஆனுல் அவர்கள் மனத்தில் என்ன நினைத்தார்களோ! அதை நான் அறியேன். அவர்கள் என்னைச் சுடுவதுபோல் என் தலைக்கு மேல் சுட்டார்கள். நான் கீழே விழுந்துவிட்டேன். செத்தேன் அல்லது காயமடைந்தேன் என்றே நினைத்தேன். ஆனுல், நான் சாகவுமில்லை, காய மடையவுமில்லை என்று தோன்றியது. என்னை அவர்கள் திரும்ப அழைத்துச் சென்று, மீண்டும் தனி யறைக்குள்ளே தள்ளிஞர்கள்.

முதல் இரண்டு நாள் வரையில் நான் அசையாமல் கிடந்தேன்; இதை ஒளிப்பானேன். என் உணவைக்கூட நான் தொடவில்லை. தண்ணீர் மட்டுமே குடித்தேன்.

இரண்டு நாளைக்குப் பிறகு, நான் சிறிது தேறினேன். என்னுல் முடிந்தமட்டும் மனத்தைத் திடம் செய்து கொண்டேன். என்னிடம் ஒரு புதிய பலம் பெருக்கெடுத்தது. நான் தப்பியோட விரும்பினேன்.

சிறை அறையின் ஜன்னல் ஓரத்தில் சுவரில் இருந்த ஒரு கல்லை அசைத்துப் பிடுங்க நான் முயன்றேன். கல்

அசைய வில்லை. என்றாலும், நான் நம்பிக்கை இழக்க வில்லை.

இந்தச் சமயத்தில் யாரோ திடீரென்று ஜன்னல் கதவடியில் ஒரு கொத்துத் திராட்சைப் பழங்களை வைக்கக் கண்டேன். இது எனக்கு ஆச்சரியமா யிருந்தது. இந்த் மூர்க்கப் புலிகளுக்கு நடுவிலே ஒரு காருண்ய ஜீவனும் இருக்கக் கூடுமோ என்று நான் எண்ணினேன்.

அது எப்படியானாலும் சரி என்று அந்தப் பழங்களைத் தின்றேன். பின்பு, நான் எப்படித் தப்பி யோடுவது என்பது பற்றி மறுபடியும் யோசிக்க லானேன்.

ஒரு நாள் உத்தியோகஸ்தர்களில் ஒருவன் என் சிறை அறைக்கு வந்தான். " இப்படி எழுந்து வா. உன்னிடம் நான் ஒரு விஷயம் பேசவேண்டும். நீ மிகவும் துர்ப்பலமா யிருப்பதால், உனக்கு நான் கைலாகு கொடுக்கிறேன் " என்றான்.

இந்த வார்த்தைகள் எனக்கு வேடிக்கையா யிருந்தன. நான் இருந்த நிலைமையை அடியோடு மறந்தவனாய்ப் பேசத் தொடங்கினேன். " வேண்டாம் ஐயா, எனக்கு யார் கைலாகும் தேவையில்லை. நீங்கள் உத்தியோகஸ்தர்கள் இருக்கிறீர்களே, உங்கள் லேடிகளுக்குத் தான் கைலாகு கொடுப்போர் இல்லாமல் சரிப்படாது. நான் இன்னமும் தெம்பற்றுப் போகவில்லை" என்றேன்.

ஆனால், என் தேக பலத்தை நான் அளவுக்கு மிஞ்சி மதித்து விட்டேன். என் சிறை அறையை விட்டு வெளியே தோட்டத்தில் வந்தபோது, என் தலை கிறுகிறுத்தது. நான் தள்ளாடி விழுந்து விடுவேன் போல் இருந்தது. என்றாலும், ஓர் எதிரியின் முன்னே நான் என் பலவீனத்தைக் காட்ட விரும்பவில்லை. அது என் வழக்க மல்ல. ஆகவே, என் தலைக் கிறுகிறுப்பை மறைப்

பதற்காக, கீழே குனிந்து இரண்டு சிறிய பூக்களைப் பறித்தேன்.

அதிகாரி சொன்னான்: "உன்னைப் பார்க்க மகிழ்ச்சியாயிருக்கிறது. என்ன ஆரோக்கியமான, ஊக்கமுள்ள, வலிமை மிக்க பெண் நீ! நீ அநுபவித்த பாட்டையெல்லாம் இன்னொருத்தி அநுபவித்திருந்தால், அப்படியே ஒடிந்து போயிருப்பாள்! நீயோ ஒன்றுமே நடவாதது போல் அறைக்கு வெளியே வந்து பூப்பறிக்கத் தொடங்கி விட்டாய்! உனக்கிருக்கும் இந்தத் தேக பலத்தைக் கண்டு, உன்னிடம் எனக்குப் பிரமாதமான வியப்பு உண்டாகிறது!"

"அதிகாரியே, என்னை நீர் பாராட்டிப் புகழ இதுதானா நேரம்! இது எனக்கு ஆச்சரியமாயிருக்கிறது. என் மனத்திலே இப்போது என்ன என்னவோ கவலைகள் ஊடாடிக்கொண்டிருக்கின்றன" என்று நான் சொன்னேன்.

அதிகாரி சிரித்துக்கொண்டே "உன் முரட்டு வார்த்தைகள் எனக்கு உவப்பாயிருக்கின்றன. அவை என் உள்ளத்திலே ஒரு கிளர்ச்சியை எழுப்புகின்றன. உனக்கிருக்கும் மகத்தான மனோபலத்தையும் அவை காட்டுகின்றன" என்றான்.

அப்போது அவனை நான் ஆச்சரியத்துடன் பார்த்தேன்.

அதிகாரிக்குச் சுமார் முப்பது வயது இருக்கும். சேவகன் என்னைச் சிறைக்கு அழைத்துச் சென்றபோது என்னிடம் வர முயன்ற அதே அதிகாரிதான் இவன்.

கோர உருவம். தலையிலே செம்பட்டை மயிர். சின்னஞ்சிறு பன்றிக் கண்கள். நோய் பிடித்து உப்பிய முகம். ஒரு கன்னத்திலே வெட்டுக்காயத் தழும்பு.

அவன் சொன்னான் : "உன்னிடம் மனம் விட்டுப் பேசுகிறேன். இத்தனை நாளும் உன்னை நான் கவனித்து வந்திருக்கிறேன். முதலி லிருந்தே உன்மீது எனக்கு மிகுந்த பிரியம் உண்டாகி விட்டது. இதை நான் உன் னிடம் ஒளிக்க இஷ்டமில்லை. உன்னைக் கண்டதும், எனக்கு என் மனைவியை ஞாபகம் வருகிறது. கீயெப் நகரில் என்னை விட்டுப் பிரிந்து விட்டாள். அவள் உன் னைப்போலவே இருந்தாள். உன் மாதிரியே பலமுள்ள வள். எது வந்தாலும் தளர மாட்டாள். பலம், தேகா ரோக்கியம் இந்த இரண்டுந்தான் வாழ்க்கையிலே முக்கி யம் என்று மதிப்பவன் நான். நானே ஒரு குடியானவ னின் மகன்தான். பயிர்ப் புலங்கள், இயற்கை இவற்றின் குழந்தை நான். ஆனால், இப்போது எப்படி ஆகியிருக் கிறேன், பார்த்தாயா ? கஞ்சா மருந்தில்லாமல் என்னால் ஒரே ஒரு நாளைக்கூட இப்போது கழிக்க முடியவில்லை. இந்தக் கஞ்சா இல்லாது போனால், நான் வெறும் நரம்புப் பிண்டமா யிருப்பேன். என்னை நீ முன்னே பார்த்திருந் தால், வியந்து போயிருப்பாய். ஆமாம், என்னவோ எப்படியோ என் பலத்தையெல்லாம் நான் இழந்து விட்டேன். ஆனால், பிறரிடம் அதைக் காணும்போது, அவர்களை வியந்து பாராட்ட மட்டும் இன்னமும் என் னால் முடியும்."

இவன் என்னவாவது வேவுகாரனா யிருப்பான், நம்மை உளவறிய வந்தவனா யிருப்பான் என்று முதலில் நான் நினைத்தேன். ஆனால், இவன் பேசப் பேச, இவன் ஒரு வகைப் பித்தன் எனக் கண்டேன். அப்படி ஒன்றும் இவனிடம் விபரீத குணங்களைக் காணவில்லை. கஞ்சா மயக்கத்தால் ஏற்பட்ட பிரமைகளுக்கு ஆட்பட்டு, தன மனத்தில் தோன்றும் கருத்தையே குருட்டுத்தனமாய்ப் பிடித்துக்கொண் டிருந்தான்.

அவன் சொன்ஞன் : "பெண்ணே, நான் சொல்லப் போகும் விஷயத்தைக் கேட்டு வியப்படையாதே. நீ மாத்திரம் ஒரு விஷயத்துக்கு இசைந்தால், கர்னல் பிரமிடாவ் உன்னை விடுதலை செய்வதாக வாக்களித் திருக்கிருர்."

இங்கே மனக் குழப்பம் கொண்டவஞக, "நீ மாத்திரம்" என்று சொல்லி, சற்று நின்ருன் ; " ஒரே வார்த்தையில் சொன்ஞல், நீ மாத்திரம் அதிகாரிகளில் ஒருவனோடு வாழச் சம்மதித்தால், கர்னல் துரை உன்னை விடுதலை செய்துவிடுவார். அவர் உன்னைச் சந்தேகிக்கிருர். யாராவது ஒருவனுடைய மேல்பார்வையில் உன்னை வைத்திருக்க அவர் விரும்புகிருர். நீ என்னோடு வாழச் சம்மதித்தா யாஞல், எல்லாம் சரியாய்ப் போய்விடும்" என்ருன்.

இந்த ஏற்பாட்டைக் கேட்டு, முதலில் நான் மிகவும் வியப்படைந்துபோனேன். அவன் என்ன சொல்லுகிருன் என்பதைக் கூடச் சரியாய்க் கவனிக்க வில்லை.

தான் சொன்ன விஷயத்தை அவன் திரும்பவும் சொன்ஞன். என்னை எந்த விதமாகவும் நிர்ப்பந்தம் செய்யத் தனக்கு இஷ்டமில்லை என்றும் அவன் சொன்ஞன். இஷ்டப்பட்டால், அவன் என்னை நிர்ப்பந்தம் செய்திருக்க முடியுமாம். ஆஞல், தனக்கு உண்மையான அன்பே தேவை, நிர்ப்பந்தத்துக்காக இணங்குவதல்ல என்றெல்லாம் அவன் சொன்ஞன்.

என் நிலைமையில் ஒரு வேளை இதற்கு நான் இணங்கிப் போவதே சரியா யிருந்திருக்கலாம். ஆஞல், என்ஞல் அது முடியவில்லை. என் பெண்ணுள்ளம் கொதித்தது. ஆத்திரமும் அருவருப்பும் பொங்கின. நான் அவனுடைய வைப்பாட்டியா யிருக்கவேண்டும் என்ற

இந்த விசித்திர ஏற்பாட்டை நான் மறுத்துத் தள்ளினேன்.

அவன் சொன்னான்: "நீ யாரென்று நான் அறியேன்; அறிய விரும்பவுமில்லை. நான் சண்டையில் கலக்கும் உத்தியோகஸ்தன் அல்ல. எனக்கு ஒரு காயம் பட்டு விட்டது. எனவே, ராணுவ சப்ளைகளைக் கவனிக்கும் உத்தியோகஸ்தனா யிருக்கிறேன். நான் ஒரு லெப்டினண்ட். சென்ற நான்கு வருஷங்களாக இப்படி ஒரு லெப்டினண்டாகவே இருந்து வருகிறேன். ஒரு தளபதியாய் உயரவேண்டுமென்று எனக்குத் துளிக்கூட ஆசை கிடையாது."

"கர்னல் துரையிடம் நீரே போனீரா? அல்லது அவராகவே என்னை உமக்குப் பரிசளிக்க முன்வந்தாரா?" என்று அவனை நான் கேட்டேன்.

"நீ என்னைக் கேவலமாய் நினைத்துக்கொண்டாலும் சரிதான். உண்மையைச் சொல்கிறேன். உன்னை எனக்குத் தரும்படி நானே அவரைக் கேட்டுக்கொண்டேன். 'அவளை நீ வைத்துக்கொள். ஆனால், அவள் எந்த விஷமமும் செய்யாமல் மாத்திரம் பார்த்துக்கொள். அவள் ஏதாவது விஷமம் செய்தால், அதற்கு நீதான் ஜவாப் சொல்ல வேண்டும்' என்று அவர் சொன்னார்" என்று லெப்டினண்ட் சொன்னான்.

"நீர் ஒப்புக்கொண்டீ ராக்கும்?"

"ஆமாம், ஒப்புக்கொண்டேன்."

"சரிதான். ஆனால், நான் ஒப்புக்கொள்ள வில்லை! தெருவிலே பெண்களை விலைக்கு வாங்குவது, நீங்கள் உத்தியோகஸ்தர்கள் இருக்கிறீர்களே, உங்கள் கும்பலுக்கு வழக்கமா யிருக்கலாம். அப்படி என்னை வாங்க முடியாது. உம்முடைய கர்னல் துரையிடம் போய்ச்

சொல்லும்: அவன் ஓர் அற்பன்! தன்னுடைய கீழ் உத்தியோகஸ்தர்களின் கேளிக்கைகளுக்கு அவனை வேறிடத்தில் ஆள் பார்க்கச் சொல்லும்" என்று நான் சொன்னேன்.

அதிகாரிக்கு மகா சங்கடமாய்ப் போய்விட்டது. "சரி தான்! அப்படியானால், நாங்கள் ஒத்துப்போய் விட்டோம் என்று கர்னல் துரையிடம் சொல்லி விடுகிறேன். நீ உன்னிஷ்டப்படி எங்கே வேண்டுமானாலும் போ" என்றான்.

இது போலிச் சூரத்தனம் என்று எனக்குத் தோன்றியது. என்றாலும், "உமது வார்த்தையை நான் நம்பலாமா?" என்று அவனைக் கேட்டேன்.

"நன்றாய் நம்பலாம்! நம்பு! ஆனால், ஒன்று: ஸிம்பெரபோல் நகரில் உன் காதலனை நீ கண்டு பிடிக்கா விட்டால், என்னை எங்கே காணலாம் என்பதை மட்டும் நினைவில் வைத்துக் கொள். நீ கேட்பதானால், நான் யார் என்று தெரிவித்துக் கொள்கிறேன். வாஸிலி கொமராவ் என்று என் பெயர். ஸிம்பெரபோல் நகரின் ராணுவ சப்ளை இலாகாவுக்கு நான்தான் தலைவன். அங்கே என்னை நீ சுலபமாய்க் கண்டு பிடிக்கலாம். என்னைக் கண்டு பிடிக்க வேண்டிய அவசியம் உனக்கு ஏற்படத்தான் போகிறது. உனக்கோ பணம் கிடையாது; பிரயாண அநுமதிச் சீட்டுக் கிடையாது; தங்குமிடம் கிடையாது. நாம் மறுபடியும் ஒருவரையொருவர் சந்திப்போம் என்ற நம்பிக்கையினால், உன்னை நான் விட்டு விடுகிறேன். நான் விதியில் நம்பிக்கை உள்ளவன். விதிதான் உன்னை என் மனைவிக்குப் பதிலாக என்னிடம் கொண்டு வந்து விட்டிருக்கிறது. அவள் என்னைக் கைவிட்டு எவனோ ஒரு காலிப் பயலோடு போய்விட்டாள்

என்னையோ, என் இருதயத்தையோ அவள் அறிந்து கொள்ள வில்லை. அதெல்லாம் போகட்டும். நீ சுதந்தர மடைந்தாய்! எங்கே வேண்டுமானாலும் போ!'' என்றான்.

இப்படிச் சொல்லிய கொமராவ், நாடக நடிகனைப் போல் கையை ஆட்டிச் சமிக்கினை செய்தான்.

என்ன நினைப்பதென்றே எனக்குத் தெரியவில்லை. இத்தனையும் நம்மைச் சிக்க வைக்கச் செய்யும் சூழ்ச்சி யாகவே யிருக்குமோ என்று மீண்டும் நான் சந்தேகித் தேன். அது எப்படியானாலும் சரி; விஷயம் நன்மை யாகவே முடியும் என்ற நம்பிக்கை எனக்கு ஏற்படாவிட் டால் கூட, இந்தச் சந்தர்ப்பம் கிடைத்ததற்கு நான் மகிழ்ச்சியே அடைந்தேன்.

“ உமது வார்த்தையிலிருந்து, நான் விடுதலையடைந் தேன் என்று நம்பலாம் என்றா சொல்கிறீர் ?'' என்று கேட்டேன்.

“ ஆமாம். நீ விடுதலையடைந்து விட்டாய். ஆனால், ஒன்று மட்டும் கவனத்தில் வைத்துக்கொள். உன்னை யார் கேட்டாலும், நீ என்னோடு ஒத்துப்போனதாகச் சொல்'' என்று அவன் சொன்னான்.

விடுதலையடைந்த ஆனந்தமும் மகிழ்ச்சியும் பொங் கியவளாய், நான் துள்ளி எழுந்து நின்றேன். மகத்தான இன்பம் உண்டாகும் நாளில் ஒருத்திக்கு ஏற்படக் கூடிய பெருந் தெம்பு என்னிடம் பெருக்கெடுத்தது.

25. ஸிம்பெரபோல் நகரில்

உடனே என் உடம்பைச் சுத்தம் செய்து கொண் டேன். குளித்து, என் கந்தலைக் கிழிசல் தெரியாமல் மறைத்துக் கட்டிக் கொண்டேன். ஆனால், நிலைக் கண்ணாடியிலே என்னைப் பார்த்துக் கொண்டபோது, நான் பெரிதும் கலவரமடைந்தேன். என் முகம் காயம்

பட்டு வீங்கியிருந்தது. என் நீலக்கண்கள் மட்டும் முன்போலவே பிரகாசித்தன. அவை போக, முகத்தின் பிற பகுதி முழுவதும் மாறிப்போ யிருந்தது.

என்ருலும், ஸிம்பேரபோல் நகருக்குச் செல்வதென்றே இன்னமும் நான் தீர்மானித்தேன்.

லெப்டினண்ட் கொமராவிடம் நான் விடை பெற்றேன். அவன் முகத்தை வியப்புடன் பார்த்தேன். எங்கே வேண்டுமாஞலும் போ என்று அவன் ஏன் என்னை விட்டு விட்டான் என்றே வியப்படைந்தேன்.

இதை அவனிடமே சொன்னேன். அவன் சிரித்துக் கொண்டே, "என் தீரத்தைப் பார்த்தாயா! இதை நீ உணர்ந்ததற்கு நான் மகிழ்கிறேன். எல்லாப் பெண்களுக்கும் இவ்வளவு நுணுக்கமான உணர்ச்சி கிடையாது. எல்லாப் பெண்களும் இப்படி ஒரு மனிதனின் இருதயத்தை அறிந்து கொள்ள முடியாது" என்ருன்.

மேலும் தொடர்ந்து, "இதல்லாமல், நீ எங்கே போஞலும் உன்னை நான் கண்டுபிடித்து விடுவேன். என் உதவி யில்லாமல், நீ ஸிம்பெரபோல் நகரைத் தாண்டிப் போக முடியாது. நீ அப்படிப் போஞல், என் விதி வேறென்றே நினைக்கவேண்டும். நான் இழந்த மனைவியின் இடத்தைப் பெறுவது உன் விதி அல்ல என்றும் எண்ணவேண்டியதுதான்" என்ருன்.

தான் என்னைக் கலியாணமே செய்து கொண்டு விடுவதாக அவன் சொல்லுவாஞனல், அதஞல் எனக்கு இன்னும் அதிகச் சௌகரியம் கிடைக்கும் என்று எனக்குத் தோன்றியது. ஆஞல், நான் சீக்கிரம் ஸிம்பெரபோல் நகருக்குப் போக வேண்டும். அங்கே எனக்கு வேலை காத்துக்கொண் டிருக்கிறது. தவிர, ஓர் எதிரியை மணந்துகொள்வது எனக்குச் சரிப்படாது. இந்தச்

செம்பட்டைத் தலையனே வெண்படையைச் சேர்ந்த ஒரு லெப்டினண்ட். உன்னத உணர்ச்சிகளைப்பற்றியெல்லாம் ஜன்னி பிடித்ததுபோல் உளறிக்கொண் டிருப்பவன். புரட்சிக்கு விரோதமாய் அமைந்துள்ள உணவு இலாகாக் காரியாலயம் ஒன்றின் நாலு சுவர்களுக்குள்ளே, என் தோழர்களைத்தான் எங்கேயாவது நான் காணமுடியுமா ?

அடுத்த நாளே நான் ஸிம்பெரபோல் நகருக்குப் போய்ச் சேர்ந்துவிட்டேன்.

அது முற்றுகையிட்ட நகர்போல் இருந்தது. ரெயில்வே ஸ்டேஷன் லாந்தர்க் கம்பத்தில், எவனே தூக்கில் தொங்கிக்கொண் டிருந்தான். எங்கே பார்த் தாலும், துப்பாக்கி சகிதமாகத் துருப்புகள் நடமாடிக் கொண் டிருந்தன. நான் கண்டுபிடிக்க வேண்டிய மனிதர்களைக் காண முடியாவிட்டால், என் நிலைமை மகா மோசமாகும் என்பது எனக்குத் தெரியும். ஆனல், இங்கே எவரையும் கண்டுபிடிப்பது சாத்தியமே இல்லை என்று எனக்குத் தோன்றியது.

நான் பார்க்க விரும்பிய வீட்டுக்குப் போனபோது, அந்த வீட்டின் முன்பு குதிரைப்படைக் குதிரைகள் நிற்கக் கண்டேன். தோட்டத்திலே ராணுவக் கூடாரம் ஒன்று இருந்தது.

அந்த வீட்டுக்குள்ளே நுழைய நான் துணியவில்லை. நுழைந்தால், வெகு அழகாய்த்தான் இருக்கும் ! ரகசிய ஸ்தாபனத்துக்குத் தகவல் கொடுக்கும் சமயத்தில் நான் கையும் களவுமாய்ப் பிடிபட வேண்டியதுதான் !

இங்கே ரகசியமாய் வேலை செய்துகொண் டிருந்த காரியாலயத்தைச் சிதைத்து விட்டார்கள் என்றே சகல குறிகளும் காட்டின. என்ருலும், இதை நான் நிச்சயப் படுத்திக்கொள்ள விரும்பினேன்.

இந்த வீட்டுக்கு மிகவும் எட்டப் போகாமல், கொஞ்சம் சமீபமாகவே ஓரிடத்தில் நான் நின்று கொண்டிருந்தேன். இந்தச் சமயத்தில் ஒரு பசுமாட்டை ஓட்டிக்கொண்டு ஒரு பெண் என் பக்கம் வருவதைக் கண்டேன். அவளிடம் நான் பேச்சுக் கொடுத்தேன். அதனால் ஒரு பலன் விளைந்தது. நான் தன் வீட்டுக்கு வந்து, தன் வேலையில் தனக்கு உதவி செய்து கொண்டு, தன்னோடு வசிக்கலாம் என்று அவள் சொன்னாள்.

என் நிலைமையோ மகா மோசமா யிருந்தது. கையிலே காசு பணம் இல்லாமல் வாழ்வது எப்படி? சாக வேண்டியதுதான். தவிர, நாங்கள் திட்டம்போட்ட வேலையை இந்த மூளி முகத்தோடு நான் செய்யமுடியாது. ஆகவே, அந்தப் பெண் சொன்ன ஏற்பாட்டுக்கு நான் ஒப்புக் கொண்டேன். அவளோடு சென்றேன்.

நான் அக்கறை கொண்ட வீட்டுக்கு ஒரு வீடு தள்ளி அடுத்த வீட்டில்தான் அவள் வசிக்கிறாள்! இப்படியாக நான் அவளுடன் வசிக்கத் தொடங்கினேன். அங்கே ஒரு வாரம் தங்கினேன்.

இதற்குள் என் முகம் குணப்பட்டுப் பழைய நிலைமையை அடைந்தது. நான் மீண்டும் பழைய ரூபம் பெற்றேன். இப்போதுள்ள என் ரூபத்தைக் கொமராவ் கண்டிருந்தா னானால், அவ்வளவு சுலபமாக அவன் என்னைப் போகவிட் டிருக்கமாட்டான் என்று எனக்குள் நானே எண்ணிக்கொண்டேன்!

இது தவிர, அந்தப் பத்து நாட்களில், பல சங்கதிகளை நான் அறிந்துகொண்டேன். தளபதி குடபாவின் செயல்களால், ஸிம்பெரபோல் நகர மக்களெல்லாம் பெரும் பீதி யடைந்திருந்தார்கள். கொஞ்ச நாளைக்கு முன் வரையில், டஜன் கணக்கான பிணங்கள் லாந்தர்க் கம்பங்களில் தொங்கிக்கொண் டிருந்திருக்கின்றன. நான்

காண வந்த இடத்தில் துப்பாக்கிப் பிரயோகம் நடந்திருக்கிறது. பல பேரைக் கைது செய்தும், சுட்டுமிருக்கிருர்கள்.

சுருங்கச் சொன்ருல், இப்போது இங்கே ஏற்பட்டிருந்த நிலைமையில் ஸிம்பெரபோல் நகரில் நான் இனித் தங்குவதால் ஒரு பயனு மில்லை. இனி நான் யால்டா நகருக்குத்தான் போகவேண்டும். ஆனுல் எப்படிப் போவது என்பதே கேள்வி.

அங்கே போவது சுலபம் அல்ல. அதுவும் என் நிலைமையில் அது சாத்தியமே யில்லை. எனக்கு எந்த வித அந்தஸ்து மில்லை. அந்தச் சனியன் பிடித்த அற்ப ஆளடையாளச் சீட்டுக் கூட என்னிடம் இல்லை. என்ருலும், நான் வேலை செய்தே தீர வேண்டும் என்று எனக்குத் தோன்றியது. நான் யால்டா நகருக்குச் சென்று, தோழர்களுடன் தொடர்பு ஏற்படுத்திக்கொள்ள வேண்டும். கடற்கரை நகரம் ஒன்றில் சுகவாசம் செய்து கொண்டு உடம்பைத் தேற்றிக்கொள்வதற்காக நண்பர்கள் என்னை அனுப்பவில்லை. அப்படி யிருந்தும் இன்னும் நான் ஒரு காரியமும் செய்யவில்லை. எதிரியின் அணி வகுப்பைக் கடந்து உள்ளே வந்து மூன்று வார காலம் கழிந்துவிட்டது. எல்லாவற்றையும் விடப் பெரிய மோசம் என்னவென்ருல், கட்சி ஸ்தாபனத்தின் பணம் அடங்கிய வார்க்கச்சையை வேறே தொலைத்துவிட்டேன். இதையெல்லாம் நினைத்துப் பார்த்தபோது, எனக்குப் பெருந் துக்கமா யிருந்தது. எப்படி வேலைசெய்யத் தொடங்குவது என்று எனக்குத் துளியும் புரியவில்லை.

லெப்டினன்ட் கொமராவுக்கு வேண்டுகோள் செய்து கொள்ளலாமா என்றுகூட எண்ணினேன். அவன் மூலம் ஏதாவது காரியம் செய்யலாம் என்று எனக்குத் தோன்றி

யது. ஆனால், இந்த யோசனை தோன்றிய போதெல்லாம் இதை வேண்டாம் என்று தள்ளிவிட்டேன். இந்த லெப்டினண்டோடு எந்த வித சம்பந்தமும் வைத்துக் கொள்ள என்னால் முடியாது. அவனுடைய டம்பமும் போலிச் சூரத்தனமும் குடிகாரப் பிதற்றலும் எனக்கு எரிச்சல் மூட்டின.

அவனுடைய உதவியில்லாமலே செயல்புரிய நான் தீர்மானித்தேன்.

26. கையும் உள்ளமும்

ஒரு நிச்சயமு மில்லாமல் இப்படிச் சஞ்சலப்பட்டுக் கொண்டே, ஒரு நாள் ஸ்டேஷனிலிருந்து, நான் வசித்த வீட்டுக்குப் போய்க்கொண் டிருந்தேன். அப்போது எதிர் பாராத விதமாகத் திடீரென்று கொமராவ் எங்கிருந்தோ என்னெதிரே வந்து நின்றான்.

நான் ஆச்சரியத்தால் கூச்சலிட்டு விட்டேன். சட்டென்று ஓடிப்போக முயன்றேன். ஆனால், அவன் என்னைத் தடுத்து, என் தோளைப் பிடித்துக்கொண்டான். அவன் கஞ்சா மயக்கத்தில் இருக்கக் கண்டேன்.

அவன் சொன்னான்: "தனியாய் இருப்பது எனக்குக் கஷ்டமாய்ப் போய்விட்டது. அதனால் நான் மறுபடியும் கஞ்சா குடிக்கத் தொடங்கிவிட்டேன். எனக்கு ஓர் இருதய நோய் வந்திருக்கிறது. இது என்னைக் கொன்றுவிடும். பலமும் ஆரோக்கியமும் உள்ள ஒரு பெண் நீ. நான் அழிந்து நாசமாய்ப் போகாமல் நீதான் என்னைக் காப்பாற்ற முடியும். உன்னை இழந்தேனானால், எனக்கு விமோசனம் கிடையாது. ஏனென்றால், கொஞ்சமாவது உன்னைப்போல் உள்ள பெண்கள் இங்கே இல்லவே இல்லை. இங்கே உள்ள அத்தனை பெண்களும், தங்க ளுக்கே பிறர் உதவி தேவையானவர்களா யிருக்கிறார்கள்.

ஆனால், நீ பலமுள்ளவளா யிருக்கிறாய். உன் பக்கத்தில் நின்றாலே, எனக்கு நிம்மதியும் களிப்பும் உண்டா கின்றன. என் மனைவியைப் பிரிந்தது முதல், எனக்கு இந்த மாதிரி உணர்ச்சி உண்டானதே யில்லை. என்னைக் கை விட்டுப்போய் விடாதே. நீ இல்லா விட்டால், நான் தொலைந்தேன்.''

''சரிதான், தொலையேன். அதைப்பற்றி எனக்கு ஆக வேண்டிய தென்ன ?'' என்று சொல்ல வேண்டும் போல் எனக்குத் தோன்றியது.

ஆனால் சொல்ல வில்லை. என் மனத்தில் ஒரு தீர் மானம் செய்துகொள்ள, எனக்குக் கொஞ்சம் சாவகாசம் கொடுக்கும்படி, அவனை நான் கேட்டுக்கொண்டேன்.

நான் சொன்னேன் : '' இரண்டு நாளில் உம்மிடம் வந்து, உமக்கு என் முடிவைச் சொல்லுகிறேன். இந்தக் கணத்தில் என்னால் ஒன்றும் சொல்லமுடியாது. நான் தேடிவந்த மனிதரிடம் என் மனத்திலே இன்னமும் கொஞ்சம் ஆசை இருக்கிறது. இரண்டு நாளைக்குள் அவர் அகப்படாவிட்டால், நான் உம்மிடம் ஏதாவதோர் ஏற்பாட்டுக்கு வருகிறேன்.''

என்னைப் போகவிட அவனுக்கு மனமே யில்லை. ஆனால், நான் பிடிவாதம் செய்தேன். சிறிது நேரம் வேண்டுமானால், ஒரு ஹோட்டலில் அவன் பக்கத்திலே உட்கார்ந்திருக்க நான் சம்மதித்தேன். நாங்கள் அப்படியே ஒரு ஹோட்டலுக்குப் போய்க் கொஞ்சம் பழங்கள் தின்றோம். தன் இருதயத்திலே அவனுக்கு என்னிடம் பிரமாதமான காதல் உண்டாகி யிருப்பதாக, அவன் என்ன வெல்லாமோ பிதற்றினான்.

அவன் பேச்சு எனக்கு மகா ஆபாசமாய்ப் பட்டது. என்னையும் மீறி, அவனை என்னவோ திட்டிவிட்டேன்.

கடைசியிலே, நான் எழுந்திருந்து போய்விட்டேன். அவன் என்னேடுகூட வரக்கூடா தென்று தடுத்து விட்டேன்.

நான் அவனிடம் விடை பெற்றபோது, பின்னல் நானே அவன் இருக்கும் சப்ளை இலாக்காவுக்குப் போய் அவனைப் பார்ப்பதாகச் சொன்னேன்.

ஆனல், இரண்டு நாள் சென்றன; மேலும் இரண்டு நாள் சென்றன. இன்னமும் நான் போக வில்லை. அவனுடைய உதயில்லாமலே யால்டா நகருக்கு நான் ஒரு வேசைக்கோலத்தில் போவதென்று தீர்மானித்தேன். குஷியான ஆடை உடுத்துக் கொண்டேன். எதிர்ப்பட்ட எவளோ ஒரு பெண்ணிடம், சிவப்பு லிப்ஸ்டிக் வாங்கி உதட்டுக்குப் பூசிக் கொண்டேன். தலையை ஜோராய் வாரி முடித்தேன். இப்போது நான் உண்மையிலேயே நடு வீதி ரம்பையாகக் காட்சியளித்தேன். ஆனல், அப்படி ஒன்றும் மட்ட ரகம் அல்ல.

நான் கொஞ்ச நாள் யால்டா நகருக்குப் போய் வரவேண்டும் என்று என் வீட்டுக்காரியிடம் சொன்னேன். அவளும் சரி யென்ருள். நான் போவதில் அவளுக்கு மிகவும் சந்தோஷம். ஏனென்ருல், அவளுக்கு நான் ஒரு வேலையும் செய்யவில்லை ; துணி கூடத் தோய்த்துப் போடவில்லை.

ஆடை அலங்காரங்க ளெல்லாம் செய்துகொண்டாயிற்று. ஒரு சின்ன நிலைக் கண்ணுடியிலே முகம் பார்த்தபடி, யால்டா நகரில் நான் எப்படி நடந்து கொள்ள வேண்டும் என்பதை இப்போது யோசித்தேன். இந்தச் சமயத்தில் திடு திப்பென்று வீட்டுக்குள்ளே கொமராவ் வந்து தோன்றி விட்டான்.

அன்று தினம் அவன் என்னைப் பின்தொடர்ந்து வந்து, நான் வசிக்கு மிடத்தைக் கண்டுபிடித்துச் சென்

றிருக்கிறுன் என்று தோன்றுகிறது. எனக்காகக் காத்துக் காத்து அவன் சலித்துப் போயிருக்கிறுன். தானே என்னிடம் வந்து விட்டான்.

அவன் மிகவும் சோர்ந்து போய்ச் சஞ்சலமுற் றிருந்தான். ஆனுல், கஞ்சா மயக்கத்தில் இருந்தா ஞகையால் என் வேஷத்தை அவன் கவனிக்க வில்லே. அந்த மயக்கத்திலே, ஓர் ஆங்கிலச் சீமாட்டிபோல் நான் இருப்பதாகக் கூட அவன் எண்ணிவிட்டான்.

திடீரென்று அவன் என் காலிலே விழுந்து, தனக்கு நான் கிருபை பண்ண வேண்டும் என்று கெஞ்சினுன்.

நிலேமையைப் பளிச்சென்று நான் ஊகித்துக்கொண்டேன். இப்போது அவன் மனம் இளகியிருக்கிற நிலேயில், ஒரு நூல் கண்டை விரலில் சுற்றுவது மாதிரி அவனே நான் ஆட்டி வைக்கலாம் என்று எண்ணினேன். அவனேக் கொண்டு எத்தனேயோ காரியம் சாதித்துக் கொள்ளலாம் என்று நினேத்தேன்.

என் காரியத்தை நிறைவேற்றிக் கொள்வதற்காக, அவனுடன் நான் வாழ்வது சரியா? இது எனக்குப் புரியவில்லே. இந்தச் சந்தேகம் வெகு நாளாகவே என் மனத்தை வாட்டிக்கொண் டிருந்தது. ஓர் எதிரியோடு வாழ்ந்து, அவன் மூலம் நம் காரியத்தை நிறைவேற்றிக் கொள்வது நியாயமா என்பதைக் கேட்டறிய எந்த நண்பரும் பக்கத்தில் இல்லே. இதுதான் இன்னும் மோசம்.

பொதுவாகச் சொன்னுல், அவன் தான் அறிந்து நமக்குக் கேடு செய்யும் எதிரி அல்ல; கெட்டிக்காரன் அல்ல. சந்தர்ப்பங்களின் சூழ்ச்சிக்கு இரையானவன் போலவே தோன்றினுன். முற்றும் அகஸ்மாத்தாகவே வெண்படையில் சேர்ந்திருக்கிறுன்.

அது எப்படியானாலும் சரி; மின்னலைப்போல் பளிச் சென்று ஒரு வேலைத் திட்டம் என் மூளையிலே உரு வாயிற்று. பார்க்கப்போனால், ஒரு வேசையாய் வேஷம் போடுவது சரியோ? அதைவிட இவனுடன் வாழ்வது எந்த விதத்தில் மோசமாகும்? அதுவும் இந்த முட்டா ளோடு வாழ்வதானால், தேக சம்பந்தம் கொள்ளாமல் இவனை ஏமாற்றி விடுவது சாத்தியம். ஆகவே, ஒரு வேசையாய் நடிப்பதைவிட, இந்த யோசனை எனக்கு மிகவும் பிடித்தது. ஒரு வேசைக்கு என்ன கதி வேண்டு மானாலும் நேரக்கூடும். குடிகாரர்களிடம் மாட்டிக்கொண் டால் ஆபத்து.

இந்த நிலையில், கொமராவ் திரும்பவும் "நீ இல்லா விட்டால், வாழ்க்கையே எனக்கு வெறும் சூன்யமாகி விடும். நீ இல்லாவிட்டால், மறுபடியும் மறுபடியும் கஞ் சாவைக் குடித்து நான் நாசமாய்ப் போய்விடுவேன்" என்று புலம்பினான்.

"என்னிடம் நீர் என்னதான் வேண்டுகிறீர்?" என்று நான் கேட்டேன்.

அவன் என் தோள்களைப் பிடித்து, கட்டுக்கடங்கா உணர்ச்சியோடு என்னைக் கட்டித் தழுவிக்கொண்டான்.

"நான் உனக்குக் கைகொடுக்கிறேன்; என் உள் ளத்தையும் சமர்ப்பிக்கிறேன். உனக்கு இஷ்டமானால் நாளைக்கே நாம் மணம் புரிந்து கொள்ளலாம்" என்று சொன்னான்.

நாங்கள் மறுபடியும் ஒரு ஹோட்டலுக்குச் சென்று பழங்கள் தின்றோம்.

நான் அவனைத் திரும்பிப் பார்த்தால் போதும். அப் படியே அவன் உருகிப் போனான். கணநேரத்துக்கு ஒரு தடவை என் கைகளை முத்த மிட்டுக்கொண்டான்.

தான் முத்தமிடும் இந்த என் கைகள் ஒரு குடியானவப் பெண்ணின் முரட்டுக் கைகள் என்பதைக்கூடக் காண முடியாமல் அவ்வளவு தூரம் அவன் குருடாய்ப் போயிருந்தான். இது கண்டு நான் வியப்படைந்தேன்.

அது எப்படியாயினும் ஆகட்டும். நான் செய்த காரியமே சரி என்று உடனே கண்டுகொண்டேன். இவனை நான் எப்படி வேண்டுமானாலும் ஆட்டி வைக்கலாம். நான் போய் அந்த வார்க்கச்சையைத் தேட வேண்டும் என்ற யோசனையும் பளிச்சென்று இடையிலே என் மனத்தில் தோன்றியது. ஆனால், இப்போது யால்டா நகரப் பிரயாணம்பற்றியே கவனிக்கத் தீர்மானித்தேன்.

"அதற்கு ஒரே ஒரு நிபந்தனை: அதாவது நான் யால்டா நகரத்துக்குப் போவேன். பின்பு கொஞ்ச நாள் ஓய்வெடுத்துக் கொள்ள வேண்டும். அதற்குப் பிறகு கிரிமியாவைச் சுற்றி யாத்திரை செய்ய வேண்டும்" என்று சொன்னேன்.

இந்த நிபந்தனைக்கு அவன் சட்டென்று ஒப்புக் கொண்டான். ஒரே நிமிஷத்தில், யால்டா நகரத்துக்குத் தன் உத்தியோகத்தை மாற்றிக் கொள்ள முடியும் என்று சொன்னான். தனக்குப் பல சொந்தக்காரர்களும் சிநேகிதர்களும் தங்கள் சர்க்காரிலே இருப்பதால், இதைப்பற்றிக் கவலையே கிடையாது என்றும் கூறினான். தன் உத்தியோகத்தை மாற்றிக்கொண்டவுடனே, எங்களுக்கு முடிந்த மட்டில் கிரிமியா கடற்கரை முழுவதும் நாங்கள் சுற்றித் திரியலாம் என்று வேறே சொன்னான்.

கட்டாயமாய் இரண்டே நாளில் தன் உத்தியோகத்தை யால்டா நகருக்கு மாற்றிக்கொண்டு செல்வதாகக் கூறினான்.

"என் அருமை மணுட்டியே" என்று அவன் என்னைக் கூப்பிட்டபோது, என் இருதயம் பதைத்தது. அவன் சொன்ன யோசனைக்கு நான் இணங்கியது மகா மோசம் என்று எனக்குத் தோன்றியது. இரண்டே இரண்டு நாளைக்குக்கூட இவனோடு நான் வாழ முடியாது என்று அப்போது நினைத்தேன்.

ஆனால், செய்த முடிவு முடிவுதான். இனி, பின் வாங்குவது சரியல்ல.

27. உல்லாச வாழ்க்கை

இந்த வாஸிலி கொமராவ் மகா உல்லாச புருஷன் என்பது என் அபிப்பிராயம். பெரிய மனிதர்களெல்லாம் அவனுக்கு உறவினர்கள். அவனுக்கு எத்தனையோ நண்பர்கள் இருக்கவேண்டும். இதில் சந்தேகமேயில்லை. நம்ப முடியாத செல்வம் அவனிடம் இருந்தது. அவன் எத்தனையோ வகையிலே பணம் கொள்ளையடித்தான் என்பதிலும் சந்தேகமில்லை. பணம் அவனுக்கு ஒரு பொருட்டல்ல.

வெகு சீக்கிரத்திலே அவன் எனக்கு மூன்று உடைகளும் ஒரு தொப்பியும் வாங்கித் தந்தான். என் கையிலே கட்டிக்கொள்ள ஒரு சங்கிலியும் கடிகாரமும் கொடுத்தான். வனதேவதைபோல் நான் இன்பமாய் வாழ வசதி செய்வதாக, என்னிடம் சொன்னான்.

தன் ஆப்த நண்பர்களுக்கெல்லாம் என்னை அறிமுகம் செய்து வைத்தான். அவர்கள் அவனுடைய போக்குவரத்து வண்டிகளில் வேலை பார்ப்பவர்கள். நோயுற்று அசக்தர்களானதுபோல் பாசாங்கு செய்து, ராணுவத்தை விட்டு வெளியேறியவர்கள் என்று தோன்றியது. பெரிய குடிகாரர்கள். அவர்களில் இருவர், கொமராவுக்கு மிக நெருங்கிய நண்பர்கள்.

கொமராவ் என்னை அவர்களுக்கு மிகவும் பக்தி சிரத்தையாய் அறிமுகம் செய்து வைத்தான். தன் கல் நெஞ்சு மனைவியின் இடத்தை இப்போதிருந்து வகிக்கப் போகும் பெண் நான் என்று, அவர்களிடம் கொமராவ் சொன்னான். அதிகாரிகள் தங்கள் பிரபு குல வழக்கப்படி ஈட்டிகளைச் சலசல என்று ஆட்டிக் கொண்டு எங்களிடம் வந்து, எங்கள் புது வாழ்க்கையை மனப்பூர்வமாய் வாழ்த்தினார்கள்.

உடனே நாங்கள் நான்கு பேரும் வீட்டுக்குப் போனோம். என்னைத் தவிர மற்ற மூவரும் குடியில் மூழ்கினார்கள்.

பின்பு, அவர்கள் ஒரு பாட்டுப் பாடினார்கள். பாடிய படியே புலம்பி யழுதார்கள். "கடைசி நேரம் வந்து விட்டது. துப்பாக்கியைக் கையிலே தாங்கி அருகே வந்து விட்டான் எதிரி. நம் அனைவரையும் அவன் சுட்டுக் கொல்லப்போகிறான்" என்று கூறியது அந்தப் பாட்டு. அதன் சில வரிகள் மிக்க அற்புதமா யிருந்தன :

அந்தரத்தில் காயும் கதிர்
　　மங்கிப் போச்சுதே!
ஆலகாலம் போலப் பனி
　　வந்து சூழ்ந்ததே!
குந்தி நாமும் காத்திருப்போம்
　　குண்டை ஏற்கவே!
குறுகி வருது கம்யூனிஸ்டுக்
　　குண்டர் கும்பலே!

குடி வெறியோடு,இந்தப் பாட்டை அவர்கள் திரும்பத் திரும்பப் பத்துத் தடவைக்குமேல் பாடி யிருப்பார்கள். ஒவ்வொரு தடவை பாடி முடிந்ததும், அவர்கள் விம்மி விம்மி அழுதார்கள். கிரிமியாவின் சகாப்தம் உண்மையிலேயே நெருங்கிவிட்டது என்று அவர்கள் சொன்னார்கள்.

என்றாலும் பெரெகாப் பூசந்தியை மட்டும், இன்னும் கம்யூனிஸ்டுகளால் அண்ட முடியா தென்றார்கள்.

இந்த விஷயங்களைப்பற்றி நான் அவர்களுடன் விவாதிக்கக் கூடா தென்று பேசாம லிருந்தேன். கொமராவைப் படுக்கையில் கொண்டுபோய் விட்டேன். சாராயமும் கஞ்சாவும் குடித்த குடி மயக்கத்திலே, அவன் செத்த பிணம் போல் தூங்கினான். தன்னை உற்சாகப் படுத்திக் கொள்வதற்காக, நாள் முழுவதும் அவற்றை அவன் குடித்துக்கொண்டே யிருந்தான்.

அடுத்த நாள் அவன் எழுந்தபோது உடல் வெளிறிட்டு, நோய் பிடித்திருந்தான். தன் இயற்கை நிலையைத் திரும்ப அடைவதற்காக, அவன் மீண்டும் கஞ்சாவைக் குடிக்க வேண்டிய தாயிற்று.

அவனை நான் வியப்புடன் பார்த்தேன். ஒரு குடியானவனின் மகன் இயற்கையிலே நல்ல தேகாரோக்கியமும் வலிமையும் உள்ளவனா யிருப்பான். அப்படிப்பட்ட ஒருவன் இவ்வளவு சொல்ப காலத்திலே எப்படி உடல் மெலிந்து, நாடி தளர்ந்து போனான்? இது எனக்குப் புரியவே யில்லை. ஆனால் வெகு சீக்கிரத்திலே ஒரு விஷயத்தைக் கொமராவ் என்னிடம் ஒப்புக் கொண்டான். பயிர்ப் புலங்கள், இயற்கை இவற்றின் புதல்வன்தானும் அவன். என்றாலும், அவன் தகப்பன் வெறும் குடியானவன் அல்ல; கிராமத்துப் பாதிரியாம். பாதிரி பெருங் குடியன். கடைசியில் ஆலயத்திலே தூக்குப் போட்டுக்கொண்டு அவன் மாண்டு விட்டானும்.

இந்த இயற்கையின் புதல்வன் என்னிடம் மகா மரியாதையாகவும் கண்ணியமாகவும் நடந்து கொண்டான். ஆனால் நாங்கள் வெளியே போகும்போது, என் தலையிலே தொப்பியை நிர்ப்பந்தமாக அணிந்துவிட்

டான். தொப்பி அணிவது மெத்த அவசியம் என்று அவன் சொன்னான். கௌரவத்தைக் காப்பாற்றிக் கொள்ள அது மிக முக்கியமாம். எனக்கோ தொப்பி அணிந்து கொள்ளப் பிடிக்கவில்லை. அதை அணிந்து வழக்கமு மில்லை. ஒரு சீமாட்டியைப் போல் நடப்பது எனக்குப் பெரும் மனக் குழப்பம் உண்டாக்கியது.

அப்போது என் உடம்பு உண்மையிலே வெயிலில் அடிபட்டுக் கறுத்திருந்தது. என் உடம்பைப் போலவே என் கைகளும் கறுத்தே யிருந்தன; சிவப்பா யில்லை. என் முகமோ ஆப்பிரிக்க நீக்ரோவின் முகம் மாதிரி வெயிலில் கருகியிருந்தது. எனவே, என் புதிய வேஷத்தைக் கண்டு, அகதியாய் ஓடிவந்த யாரோ ஒரு பிரபுகுலச் சீமாட்டி என்றே என்னை எல்லாரும் எண்ணி யிருப்பார்கள்.

கொமராவும் நானும் ஸிம்பெரபோல் நகரத் தெருக்களில் நடந்து செல்லும்போது, ஏராளமான மக்கள் என்னையே வெறித்து வெறித்துப் பார்த்தார்கள். நான் மிக நேர்த்தியான மெல்லிய உடையுடன், சிறகுகளும் குஞ்சலங்களும் தொங்கிய தொப்பி அணிந்திருப்பேன். இது எனக்கு நன்றாய் நினைவிருக்கிறது. அப்போது அக்டோபர் பிறந்துவிட்ட தென்றாலும், ஸிம்பெரபோல் நகரில் குளிர் விழவில்லை. கதகதப்பான வெயில் இன்னமும் காய்ந்துகொண் டிருந்தது. யாரும் கோட் அணியாமலே வெளியில் நடமாடிக்கொண் டிருந்தார்கள்.

கொமராவ் என் மீது கொண்ட காதலால் பித்துப் பிடித்திருந்தான். மகா நேர்த்தியாய் உடை அணிந்து, அழகா யிருந்த என்னை ஒவ்வொருவரும் வெறித்து வெறித்துப் பார்த்ததிலே அவனுக்கு என்னவோ ஓர் ஆனந்தம். இதனால், அவன் நாள் முழுவதும் என்னை

அழைத்துக் கொண்டு தெருவிலே நடப்ப தென்றாலும் தயாரா யிருந்தான்.

ஆனால், பணக்காரர்களுடன் இப்படிக் கூடிக் குலவும் உல்லாச வாழ்வினால், என் உண்மையான நோக்கத்தில் அக்கறை குறைந்து, நான் குருடாகி விடவில்லை. என் நோக்கத்தை நான் ஒருபோதும் மறக்க வில்லை. அதைப் பற்றிய சிந்தனையே அல்லாமல் வேறு எதிலும் எனக்குச் சிந்தனை யில்லை.

எவ்வளவு சீக்கிரம் முடியுமோ அவ்வளவு சீக்கிரத் தில் நாங்கள் யால்டா செல்ல ஏற்பாடு செய்யும்படி, நான் கொமராவிடம் சொன்னேன்.

இரண்டு வண்டி நிறைய எங்கள் மூட்டை முடிச்சு கள் இருந்தன. அவற்றைக் கண்டபோது, 'எவ்வளவு ஏராளமான சாமான்களை இவன் கொள்ளையடித் திருக்கி றான்' என்று நான் நினைத்தேன். எனக்குச் சிரிப்பு வந்து விட்டது. சடைரோமக் கோட்டுகள், சித்திரங்கள், பீங்கான் பாண்டங்கள், மேஜை நாற்காலிகள் இப்படி எத்தனையோ சாமான்கள் அவனிடம் இருந்தன.

நாங்கள் காரிலே முன்னதாகச் சென்று விட்டோம். வெகு சீக்கிரம் யால்டாவை அடைந்தோம்.

28. யால்டா நகரில்

யால்டா நகரம் என் மனத்தை மிகவும் கவர்ந்து விட்டது. அங்கே கண்ட நீலக்கடலும், அழகான வீடு களும், உலாவும் சோலைகளும் எனக்குப் பிடித்தமா யிருந்தன.

அந்தச் சமயத்தில் கடல் மிகவும் முரட்டுத் தன மாய்க் கொந்தளித்துச் சீறிக்கொண் டிருந்தது. அலைகள்

மிக உயரமாய் எழுந்து, ரஸ்தாவின் ஐந்தடியை வந்து மோதிக் கழுவின.

பிரான்ஸ் என்ற ஓட்டலில் நானும் கொமராவும் தங்கினோம். ருஷியா என்ற ஓட்டல்தான் மிகச் சிறந்தது என்றும், தனக்கிருக்கும் பணத்துக்கு நாங்கள் அங்கே தான் போய்த் தங்க வேண்டும் என்றும் கொமராவ் முதலில் விரும்பினான். ஆனால், மிகவும் ஆடம்பர மான ஜனங்கள் அந்த ஓட்டலின் அத்தனை அறைகளை யும் ஏற்கனவே நிறைத்துக்கொண் டிருந்ததால், அங்கே எங்களுக்கு இடம் கிடைக்க வில்லை.

நாங்கள் அங்கே போய்ச் சேர்ந்த முதல் நாளி லேயே, என் துணைவனைச் சிறிது குடிக்கச் செய்தேன். அந்தக் குடி மயக்கத்திலே, அவன் பெருந் தூக்கத்தில் ஆழ்ந்து விட்டான். என்னிடம் இருந்த விலாசத்தை அந்த நிமிஷமே நான் தேடிச் சென்றேன். போகும் போது, எனக்கு ஒரே ஆவேசமா யிருந்தது. இங்கே யுங்கூடத் தோல்வியுறுவே னானால், நான் ஒரு பயனு மில்லாதவள் என்றுதான் ருசுவாகிவிடும். என்னிடம் நண்பர்கள் வைத்த நம்பிக்கைக்கு நான் பாத்திர மில்லாதவளாகப் போய்விடுவேன். இப்படியெல்லாம் எனக்குத் தோன்றியது.

ஐந்தடியிலே நான் நடந்து சென்றபோது, என்னைச் சுற்றிலு மிருந்த ஜனக்கூட்டத்தைக் கண்டு நான் ஆச்சரிய மடைந்தேன். எந்த விதமான ஜனங்களை நான் மறந்தே போனேனோ அந்த விதமான ஜனங்களே சதா எனக்கு எதிர்ப்பட்டார்கள். இங்கே பொங்கிக் கொழித்துக்கொண் டிருந்த வாழ்க்கை நம் வாழ்க்கையி லிருந்து அடியோடு வேறானது.

சொகுசான பற்பல வகைச் சீமாட்டிகள், ஜரிகை யிழைத்த பட்டுக் குடைகளைப் பிடித்துக்கொண்டு, இங்கே

நடந்தார்கள். அவர்களின் தளுக்கும் மினுக்கும் எனக்கு எரிச்சல் மூட்டின. கொழு கொழு என்று பருத்திருந்த பணக்கார மிராசுதார்களும் ராணுவத் தளபதிகளும் ஏராளமான அதிகாரிகளும் வாலிபச் சீமாட்டிகளும் இங்கே சோலைகளிலே உலாவிக் கொண்டும் மனோகர மான இள வெயிலை அநுபவித்துக் கொண்டு மிருந்தார் கள். யுத்தத்தைப் பற்றியோ, தங்கள் வாயிற்படியிலே செஞ்சேனை வந்துவிட்டதே என்பது பற்றியோ யாரும் கவலைப்படுவதாய்த் தெரியவில்லை.

நான் மார்க்கெட்டைச் சுற்றிக் கடந்து, நகரத்தின் பழைய பகுதிக்குள் பிரவேசித்தேன். நான் கண்டு பிடிக்க விரும்பிய இடத்தை அங்கே சுலபமாய்க் கண்டு பிடித்தேன்.

வெகு நேரம் வரையில், அவர்கள் என்னை நம்பவே யில்லை. கதவுக்குக் கதவு என்னை மாற்றி மாற்றி அழைத்துச் சென்றார்கள். கடைசியிலே, ஒரு விதமாக நாங்கள் ஒருவரை யொருவர் அறிந்து கொண்டோம். தங்களிடம் என்னை நண்பர்கள் அனுப்பியிருக்கிறார்கள் என்று தெரிய வந்ததும், சில தோழர்கள் கண்ணீர் சொரிந்து விட்டார்கள். தங்களுக்கு அக்கறையுள்ள சகல விஷயங்களைப் பற்றியும் ஆவலோடு என்னை அவர்கள் கேள்வி கேட்டார்கள். நான் அவர்களுக்குக் கொண்டு வந்த சகல செய்திகளையும் அவர்களிடம் தெரிவித்தேன். பணம் என்ன ஆயிற்று என்பதையும் அவர்களிடம் சொன்னேன். பணம் அடங்கிய வார்க்கச்சையை நான் கண்டுபிடித்து விடுவதாகவும், அவர்களுக்கு வாக் களித்தேன்.

அதற்காக என் உயிரையே ஆபத்தில் சிக்கவைக்க வேண்டாம் என்று அவர்கள் எனக்குப் புத்திமதி கூறினார்

கள். ஆனால் உயிருக்கே துணியத்தான் துணிவதென்று மனத்துக்குள்ளே நான் ஏற்கனவே முடிவு செய்து விட்டேன்.

தங்களுடைய கஷ்டமான நிலைமைபற்றி அவர்கள் என்னிடம் சொன்னார்கள். ஸிம்பெரபோல் நகரில் இருந்த சகல தொழிலாளர் ஸ்தாபனங்களையும் தளபதி குடபாவ் அழித்துவிட்டது பற்றியும் சொன்னார்கள். இனி நாங்கள் அதிக காலம் காத்திருக்கத் தேவை யில்லை என்ற முடிவுக்கு வந்தோம். வெண்சேனை பெரும் பீதி யடைந்திருக்கிற தென்றும், இனி ஜயிக்க முடியும் என்ற நம்பிக்கையை அது இழந்து விட்ட தென்றும் அவர்கள் சொன்னார்கள்.

இதைக் கேட்டு நான் வியப்பும் களிப்பும் அடைந் தேன். அதனால் உண்டான உற்சாகத்திலே, என் பண வார்க்கச்சையைக் கண்டுபிடிக்க நான் உடனே முயல்வ தென்று தீர்மானம் செய்தேன். என்றாலும் இந்த முயற்சி பலன் தராது, தோல்வி நிச்சயம் என்றே தோன்றியது.

இந்தச் சிந்தனைகளுடன் நான் ஓட்டலுக்குத் திரும்பினேன்.

என் கொமராவ் அதற்கு முன்பே விழித்தெழுந்து மிக்க கவலையுடன் எனக்காகக் காத்துக்கொண் டிருந் தான். ஆனால், என்னைக் கண்டவுடனே அவன் கவலை யெல்லாம் பறந்துபோய்விட்டது. தன் பிரயாணப் பெட்டியிலிருந்து பற்பல விதமான அற்புதப் பொருள் களைச் சிறிது சிறிதாக எடுத்து, எனக்குப் பரிசளிக்கத் தொடங்கினான். அந்தப் பரிசுகளைக் கண்டு பேரானந்தம் கொண்டவள் போல்தான் நானும் பாவனை செய்தேன்.

வெளியே வீதி நடையில் உலாவச் சென்றோம். முந்தி நான் தங்கியிருந்த வீட்டுக்காரியைப் பார்த்து

வருவதற்காக, மறுநாள் ஸிம்பெரபோல் நகருக்குப் போய்வரலாமா என்று எண்ணுகிறேன் என்பதாக அவனிடம் சொன்னேன். இது வரையில் அவன் சுதந்தரமாகவே இருந்தான்; வேலை எதிலும் நியமிக்கப் பெற வில்லை. ஆகவே, தானும் என்னுடன் வருவதாக, அவன் சொன்னான். அவன் வரப்படா தென்று நான் மறுத்தேன். அவன் என்னைச் சந்தேகத்தோடு பார்க்கத் தொடங்கினான்.

இந்தச் சமயத்தில், நான் அவன் கையைக் கெட்டி யாய்ப் பிடித்துப் பிசைந்தேன். இந்த அல்ப சரசத் தினால், அந்த மடையன் அப்படியே உருகிப்போய் விட்டான். சகல ஜனங்களுக்கும் எதிரிலே என்னை அவன் கட்டித் தழுவிக்கொண்டு, முத்தமிடவும் முயன்றான். ஆனால், நான் மழுப்பி நழுவிவிட்டேன்.

நாங்கள் இப்போது வீதி நடையிலே நடந்து கொண் டிருந்தோம். மனோகரமான மாலை நேரம். கொமராவும் நானும் புஜத்தோடு புஜம் இணையக் கை கோத்து, மெல்லிய குரலில் பேசிக்கொண்டே நடந் தோம்.

திடீரென்று நான் நடுநடுங்கி உடல் வெளிறிட்டுப் போனேன். "என்ன சங்கதி? கிலிபிடித்தது போல் இருக்கிறாயே"' என்று கேட்டான் கொமராவ்.

என்னால் பேச முடியவில்லை. எங்களை நோக்கி நினா விக்டராவ்னா வந்துகொண் டிருந்தாள். அவ ளுக்குப் பக்கத்தில் தன் வழக்கப்படி டம்ப நடை போட்டுக்கொண்டு யூரி புனகாவ் வந்தான். அவர்கள் இருவருக்கும் பின்னாலே அதிக வயதான ஒரு ஸ்திரீயும் அவளோடு தளபதி துபஸாவும் குழந்தைகளைப் போல் நடந்து வந்தார்கள்.

என்ன செய்வதென்றே எனக்குத் தெரியவில்லை. நான் கொஞ்சம் தியங்கினேன். ஒரு பக்கமாய்த் திரும்ப முயன்றேன். ஆனால், கொமராவ் என்னைத் தடுத்துப் பிடித்துக் கொண்டான். இந்தச் சமயத்தில், அவர்களும் நாங்களும் மிக நெருங்கிவிட்டோம். அந்தக் கும்பல் முழுவதும் எங்களைக் கடந்து சென்றுவிட்டது. அவர்கள் என்னை அடையாளம் கண்டுகொள்ள வில்லை. தளபதிக்கு என் லெப்டினண்ட் கொமராவ் சலாம் வைத்துவிட்டு நடந்தான்.

ஆனால், நான் சற்று நின்று பின்னால் திரும்பிப் பார்த்தேன். இதே சமயத்தில் அவர்களும் வேலிக் கம்பிகளுக்குப் பக்கத்திலே நின்றுவிட்டார்கள். கடல் அலையில் துள்ளிவிழும் வர்ண மீன்களைப் பார்க்கத் தொடங்கினார்கள்.

நான் புனகாவை நோக்கினேன். இப்போது அவன் எப்படி இருக்கிறான் என்று பார்க்க விரும்பினேன். அவன் எப்போதும் போல்தான் இருந்தான். ஒரு வேளை தெற்கத்தி வெயில் பட்டுச் சிறிது கறுத்திருக்கலாம். ‘இன்பம்’ பற்றிய அவன் பாட்டு எனக்கு ஞாபகம் வந்தது. என் எண்ணத்தை அறிந்து கொண்டவன் போல, அவன் திடீரென்று, “இன்பம் என்பதும் ஏதடா ?” என்று பாடத் தொடங்கினான்.

அவன் வாயிலிருந்து வந்த இந்த வார்த்தைகளைக் கேட்டதும், நான் உரக்கச் சிரித்துவிட்டேன். அவர்களுடைய மரியாதைச் சம்பிரதாயங்களின்படி, இது மெத்த விரசமாகும். அனைவரும் என்னை வெறித்துப் பார்த்தார்கள். நான் மறுபுறம் திரும்பிக் கொண்டேன். இன்னமும் அவர்கள் என்னை அடையாளம் கண்டு கொள்ள வில்லை.

நான் பார்த்துக்கொண் டிருந்த மனிதனிடம், என் மடையன் வாஸிலி கொமராவுக்குத் திடீரென்று கடும் பொருமை வந்துவிட்டது. பொம்மை மாதிரி தோன்றும் அந்த உத்தியோகஸ்தனிடம் நான் கண்டதும் மையல் கொண்டுவிட்டதாக, கொமராவ் நினைத்துவிட்டான்.

அவன் முரட்டுத் தனமாய் என் புஜத்தைப் பிடித்து இழுத்தான். நாங்கள் மேலே நடந்தோம், ஆனால், உலாவ எனக்கு விருப்ப மில்லை. ஆகவே, ஓடியான் என்ற சங்கீத ஓட்டலுக்குள் நாங்கள் நுழைந்தோம். அது பூமிக்குக் கீழே ஒரு கட்டிடத்தில் இருந்தது. அங்கே நாட்டியப் பெண்களின் பாட்டைக் கேட்டோம். அந்தப் பாட்டுக்கிசைய அவர்கள் நர்த்தனமும் ஆடிக் கொண்டிருந்தார்கள். பாட்டு இதுதான் :

துன்பம் உருக்கொண்டு ஆடுது;
துன்பம் உருக்கொண்டு துள்ளுது;
துன்பம் உருக்கொண்டு பாடுது;

துன்பம் பாடுமது
இன்பத்தின் கீதம்.

29 கண்டெடுத்தேன்

அடுத்த நாள் சாயங்காலம், " நாம் இருவரும் இன்று இரவு நம் அறையிலே ஜோரான சாப்பாடு சாப்பிட வேண்டும்" என்று கொமராவிடம் நான் யோசனை சொன்னேன். கொமராவ் மிகவும் குடித்து மயங்கிக் கிடந்து, மறுநாள் காலையில் வெகு நேரம் கழித்தே எழுந் திருக்க வேண்டும் என்பது என் விருப்பம்.

அவனே மிகவும் தற்பெருமை கொண்டவன். எனவே, அவனைத் தூண்டிக் கிளப்பிவிடுவது எனக்கு வெகு சுலபமா யிருந்தது. " கஞ்சா எப்படிக்

குடிப்பது? எனக்குக் கொஞ்சம் சொல்லித்தாருங்கள்" என்றேன். அவ்வளவுதான். என் எதிரே யிருந்த அத்தனை கஞ்சாத் தூளையும் அவன் ஒரே இழுப்பில் இழுத்துவிட்டான். பின்பு, இரவு முழுவதும் ஏராளமாய்ச் சாராயம் குடித்தோம். நான் குடித்தது கொஞ்சம்; அவன்தான் நீரிலே மீன் துளைவது மாதிரி சாராய சமுத்திரத்திலே துளைந்தான். பேய் வெறி அவனுக்கு உண்டாயிற்று. என் மீது காதல் வந்துவிடும்! பிறகு, கொஞ்சம் மதுவைக் குடித்ததும், அவனுக்குத் தலை சுற்றிப்போகும். என்னைப் பேராச்சரியத்தோடு பார்ப்பான்; தொழுவான்.

இப்படியே பொழுது விடிகிறவரையில் குடியும் கூத்துமாய்க் கழிந்தது. கிழக்கு வெளுக்கும் சமயத்தில், அவன் பிரக்ஞையற்றுப் பொத்தென்று கீழே சாய்ந்தான். அவனுடைய தஸ்தாவேஜுகளையெல்லாம் என் கையில் சுருட்டிக் கொண்டேன். பிரயாண உடுப்பு அணிந்து கொண்டேன். ஏற்கனவே நான் அமர்த்தி வைத்திருந்த ஒரு டாக்ஸி காரில் ஜான்காய் நகருக்குப் போய்ச் சேர்ந்தேன்.

வழியிலே பற்பல இடங்களில், காவல் வீரர்கள் என்னை நிறுத்தி நிறுத்தி விசாரித்தார்கள். அவர்களிடம் என் தஸ்தாவேஜுகளைக் காட்டி, "நான் என் கணவனிடம் போகிறேன்" என்று சொன்னேன். என் 'கணவ'னின் தஸ்தாவேஜுகளில் 'விராங்கல்' என்ற கையொப்பம் இருந்தது கண்டு, அவர்கள் மாறுபேசாமல் என்னை விட்டு விட்டார்கள்.

கடைசியில் டாக்ஸி கார் டிரைவர் என்னை ஸிம்பெரபோல் நகரில் கொண்டுபோய் விட்டான். அங்கே ஒரு ரெயில் எஞ்சினுக்கு மாறினேன். எழுபத்தாருவது தந்திக் கம்பம் வரைக்கும் அதில் சென்றேன். அங்கே எஞ்சினை விட்டு இறங்கினேன். நடந்தேன். கணக்குப்

படி அடிகளை எண்ணிக்கொண்டே சென்றேன். ஆனால், என்ன விசித்திரம்! வார்க்கச்சை தென்படவில்லை. பல முறை நடந்து நடந்து அடிகளை எண்ணிக் கணக்கிட்டும் பலன் இல்லை. எனக்கு ஆத்திரம் ஆத்திரமாய் வந்தது. நானோ ஒரு சாரணி. அப்படி யிருந்தும், இந்த மாதிரி நடக்குமானால், அது மன்னிக்க முடியாத தவறுகும் அல்லவா ?

சாயங்கால நேரமானதால் மெல்ல மெல்ல வெளிச்சம் மங்கியது. தவிர, நான் தேடுவதை யாராவது கண்டால், கைதாகக் கூடிய அபாயத்துக்கும் பயந்தேன். பிறகுதான் தேடவேண்டும் என்று முடிவு செய்தேன்.

ஆனால், புல்லில் மறைந்துகிடந்த என் வார்க்கச்சை, நான் வீட்டுக்குப் போகலாம் என்று எண்ணிய அந்தச் சமயத்தில், தற்செயலாய்க் காலில் இடறியது. நான் சந்தோஷம் தாங்காமல் கத்திவிட்டேன்.

வார்க்கச்சையி லிருந்த பணத்தை எடுத்தேன். அது வெண் படையினரிடம் செலாவணியாகும் பணந்தான். பணத்தை என் ஜேபியிலே போட்டுக்கொண்டேன். வார்க்கச்சையை வீசி யெறிந்தேன்.

பின்பு, மிகுந்த சிரமத்துடன் ஜான்காய் நகருக்குத் திரும்பிப் போய்ச்சேர்ந்தேன். அங்கே பெரும் பணம் கொடுத்து ஒரு வண்டியை வாடகைக்கு அமர்த்திக் கொண்டேன்.

வண்டியில் அடுத்த நாள் காலையில்தான் நான் யால்டா நகரத்துக்குப் போய்ச் சேர முடிந்தது.

மிகுந்த கவலையோடு எங்கள் அறைக்குப் போனேன். கொமராவ் தூங்கிக்கொண் டிருந்தான். நான் திரும்பி வருவதை எதிர்பார்த்து எனக்காக அவன் காத்திருந்த நேரமெல்லாம் அவன் குடித்துக்கொண்டே

யிருந்திருக்கிருன் போல் தோன்றுகிறது. அறை முழுவதும் ஒரே அலங்கோலமா யிருந்தது. எங்கே பார்த்தாலும் பாட்டில்கள். ,என் பணத்தை ஒளித்துவைத்துவிட்டு, நான் படுக்கச் சென்றேன்.

சில மணி நேரத்துக்குப் பின்பு, அவனுக்கும் எனக்கும் பிரமாதச் சண்டை நடந்து, பிறகு சமாதானமானேம்.

கொமராவுக்கு இன்னமும் கொஞ்சம் சந்தேகம் இருந்தது. நான் ஏதோ அரசியல் சூழ்ச்சியோ காதல் சூழ்ச்சியோ செய்துகொண் டிருக்கிறேன் என்பது அவன் சந்தேகம். ஆனுல்,நான் அற்ப சரசம் செய்து கொஞ்சியவுடனே, அவனுடைய சந்தேக மெல்லாம் பறந்து போய்விட்டது.

என்ருலும், இப்போது அவன் ஜாக்கிரதையா யிருக்கத் தொடங்கிவிட்டான். என்னை ஒரு போதும் தனியே வெளியில் போக விடுவதில்லை. அவனிடம் தப்பித்துக்கொண்டு, நகரத்துக்கு ஓடிப் பணத்தைத் தோழர்களிடம் கொடுப்பதற்குள் மகா சிரமமாய்ப் போயிற்று. இந்தக் காரியம் முடிந்த பின்புதான், ‘அப்பாடா!’ என்று மூச்சு விட்டேன். கடைசியாக, என்னிடம் நண்பர்கள் ஒப்படைத்த கடமை நிறைவேறியது. ஆஹா! அதற்குள்தான் எத்தனை பரபரப்பான அநுபவங்கள்! என் கடமையை முற்றும் நிறைவேற்றி விட்டேன்.

அன்று மாலையில் நான் மிக்க மகிழ்ச்சியோ டிருந்தேன். இது கொமராவுக்கு மிகுந்த வியப்பு அளித்தது. அவன் மறுபடியும் என்னைச் சந்தேகிக்கத் தொடங்கினுன். ஏதோ ரகசியச் சதி நடவடிக்கைகளில் நான் கலப்பதாக எண்ணினுன்.

இந்த மனிதனின் மடத்தனமான தற்பெருமையும் ஆத்ம திருப்தியும், மீண்டும் என்னால் சகிக்க முடியாத அளவு எனக்கு எரிச்சல் மூட்டின. அவனோடு தோழமை கொண்டிருப்பதை என்னால் தாங்க முடியவில்லை.

ஆனாலும், அவனை விட்டு விலகச் சரியான தருணத்தை எதிர்பார்த்துக் கொண்டு, நான் காத்திருக்க வேண்டிய தாயிற்று.

30. வெளியேற்றம்

இதற்கிடையிலே, யால்டா நகரில் நிலைமை வரவர நெருக்கடி யாகிக்கொண் டிருந்தது.

கிரிமியா பிரதேசத்தை வெண்சேனை இனிக் காப்பாற்ற முடியாது என்று தெருவிலே ஜனங்களெல் லாம் பகிரங்கமாய்ப் பேசிக் கொண்டார்கள்.

என் கொமராவ் ஒரு நாள் ஆபீசுக்குப் புறப்பட்டு வெளியே போனவன், உடம்பெல்லாம் வெளுத்து, நடுங்கிக் கொண்டே திரும்பி வந்தான். நகரத்தைக் காலி செய்யவேண்டும் என்றும், சில இலாக்காக்கள் யாருக்கும் தெரியாமல் அன்றே வெளியேற வேண்டும் என்றும் அவன் சொன்னான்.

போர்முனையில் என்ன நடந்தது என்ற விஷயம் இன்னமும் அவனுக்குத் தெரியவில்லை. ஆனால், ஏதோ ஆபத்து நெருங்கிக்கொண் டிருந்தது என்று மட்டும் தோன்றியது.

திடீரென்று சில கப்பல்கள் யால்டா நகருக்கு வந்து சேர்ந்தன. அவற்றில் பிரயாணிகள் ஏறிக் கொள்ளவும் தொடங்கினார்கள்.

பிரமாதமான பீதி ஏற்பட்டது என்று சொல்வது சரி யாகாது. அநேகர் ஏற்கனவே இந்த நிலைமைக்குத்

தயாரா யிருந்தார்கள். அநேகர் ஏற்கனவே நகரை விட்டும் போய் விட்டார்கள். என்ருலும், நகரில் மிகுந்த பரபரப்பு இருக்கத்தான் இருந்தது. எங்கே பார்த்தாலும், பயமும் கவலையும் சூழ்ந்த முகங்கள் தென்பட்டன. ஜனங்கள் அங்குமிங்கும் விரைந் தோடிக்கொண் டிருந்தார்கள்.

துறைமுகத்தில் கப்பல் டிக்கட் கொடுக்கும் ஆபீஸில் ஜனங்கள் பெருந்திரளாய்க் கூடிவிட்டார்கள். ஆனுல், என்னதான் நிகழ்ந்தது என்று யாருக்கும் தெரியவில்லை. பெரெகாப் நகரம் விழுந்துவிட்டதா அல்லது வெண்படைகள் அதை இன்னமும் காத்து வருகின்றனவா? செம்படைகள் பயங்கரமாய்த் தாக்கி, வெண்படை அணிவகுப்பை முறித்து உள்ளே புகுந்து விட்டன என்று மட்டும் வதந்திகள் உலவின. ஆனுல், அது எவ்வளவு நெருக்கடியானது என்பதை யாரும் அறியவில்லை.

அடுத்த நாள் இன்னும் சில கப்பல்கள் யால்டா நகருக்கு வந்து சேர்ந்தன.

நடுத்தர வகுப்பு மக்களும் அதிகாரிகளும் தங்கள் பெட்டிகளையும் மூட்டை முடிச்சுகளையும் தூக்கிக் கொண்டு துறைமுகத்துக்கு ஓடினுர்கள்.

அநேக இலாக்காக்களின் சாமான்களைச் சுமந்து கொண்டு வண்டிகள் ஊர்ந்தன. அவற்றின் பக்கத்திலே பற்பல விதமான பிரபு குல மக்கள் பயமும் கவலையும் சூழப் பெருமூச்சு விட்டுக்கொண்டே நடந்தார்கள்.

இந்த வெளியேற்றத்தை, மிகுந்த உணர்ச்சியோடு நான் கவனித்துக்கொண் டிருந்தேன்.

ஒவ்வொரு கப்பலையும் பார்க்கச் சென்றேன். ருஷியாவின் பிரபுக்களும் வியாபாரிகளும் தாங்கள் பிறந்த தாய் நாட்டைக் கைவிட்டு ஓடுவதைக் கவனித்தேன்.

அவமதிப்புத் தாங்காமல் சீறியெழுந்த மக்களின் பேராத்திரம் என் உள்ளத்திலேயும் இப்போது கொதித்தது. எங்கே பார்த்தாலும் கவலையையும் அழுத முகத்தையும் நான் கண்டேன். பயத்தையும் கிலியையும் கண்டேன். ஆனால், என் உள்ளத்திலே பரிதாபம் சுரக்கவில்லை; வெற்றிக் களிப்பே நிறைந்தது. ஏனென்றால், பழிக்குப் பழி நிறைவேறும் நேரத்தை நேருக்கு நேரே என் கண்ணால் கண்டேன்; மேலான உணர்ச்சிகள் படைத்த மக்களின் மனத்தைப் புண்படுத்திய பழைய வாழ்க்கை முறை ஓட்டமெடுப்பதைக் கண்டேன்.

அது நம்ப முடியாத ஒரு காட்சி.

அது சரித்திரப் பிரசித்தியான ஒரு நேரம் - ருஷியாவின் பிரபு குலத்தினர் ஓட்டமெடுத்த நேரம்! பொது மக்களை அடக்கி ஒடுக்கிய கிராதகர்கள் ஓட்டமெடுத்த நேரம்! அவர்கள் ஓடோடியும் கடைசியிலே போக்கிடமற்றுத் தவித்த நேரம்! அவர்கள் கப்பலேறி, துருக்கி நாட்டுக்கு ஓடினார்கள்.

இந்தக் காட்சியால், என் உள்ளத்திலே பெருங் களிப்பு நிறைந்தது. நாள் முழுவதும் புன்சிரிப்புப் பூத்த வண்ணம் நான் நின்றுகொண்டே யிருந்தேன். இதனால் ஜனங்கள் என்னைக் கவனிக்கத் தொடங்கிவிட்டார்கள். ஆனாலும் நான் கைக்குட்டையை விசிறியபடி "போய்ச் சேருங்கள், என் அருமை நண்பர்களே! போய்ச் சேருங்கள்!" என்று முணுமுணுத்துக் கொண்டே யிருந்தேன்.

இதன் மத்தியில், கடற்கரையிலே பற்பல ஹாஸ்யக் காட்சிகளும் சோகக் காட்சிகளும் நடந்துகொண்டிருந்தன. சில சீமான்களின் மூட்டை முடிச்சுகள் அதிகமா யிருந்ததால், அவர்களைக் கப்பலில் ஏற்றிக்

கொள்ள முடியாதென்று கப்பல் அதிகாரிகள் சொன்னார்கள். இந்தச் சீமான்கள் கத்தினார்கள்; கூச்சல் போட்டார்கள்; பட்டே பட்டே பெயர்களையெல்லாம் சொன்னார்கள். ஒன்றும் பலிக்கவில்லை. தளபதிகளும், பெரும் பிரபுக்களும், கப்பல் அதிகாரிகள் விதித்த விதிகளுக்குப் பசுப்போல் பணிய வேண்டியதாயிற்று. கப்பலில் ஏறிய பிறகுதான், 'அப்பாடா!' என்று அவர்கள் கவலை தீர்ந்து மூச்சு விட்டார்கள்.

சிலர் அழுதார்கள். சிலர் "நாங்கள் இரண்டே வாரத்தில் திரும்பி வந்து விடுவோம்" என்றார்கள். ஒரு தளபதி, "எங்களை அவர்கள் திருப்பிக் கூப்பிடத்தான் போகிறார்கள். அவர்களிடம் மேழி பிடிக்கிறவர்களைத் தவிர, வேறே யார் இருக்கிறார்கள்?" என்று கூச்சலிட்டான்.

இந்த மிருகத்தை அறையவேண்டும் போல் எனக்கு ஆவல் துடித்தது. ஆனால், என்னை நானே அடக்கிக் கொண்டேன். இதற்கெல்லாம் நடுவிலே, என் பழைய எஜமானி பேரனெஸ் நினா விக்டராவ்னா பரதேசம் போவதைக் காண்பதில் எனக்குப் பரம ஆசை. அந்த அற்புதக் காட்சியை எப்படியோ நான் நழுவ விட்டு விட்டேன். கப்பல் புறப்பட்டபோதுதான், அவர்கள் கப்பலின் மேல் தட்டில் நிற்பதைக் கண்டேன். சீமாட்டி மிகவும் உடல் மெலிந்து, பிணம்போல் வெளுத்து, தளபதியின் புஜத்திலே சாய்ந்து நின்று கொண்டிருந்தாள். புனகாவ் எங்கேயோ வெகு தூரத்துக் கப்பால் கண்களைச் செலுத்தியவனாய்ச் சிந்தனையில் ஆழ்ந்திருந்தான். அவர்களைப் பார்த்துக் கேலியாக என் கைக்குட்டையை விசிறினேன். அவர்கள் என்னை அடையாளம் கண்டுகொண்டதாகத்தான் தோன்றியது. யுரோச்கா என்னை நோக்கிக் கையை நீட்டிச் சுட்டினான்.

அவர்கள் தூரதிருஷ்டிக் கண்ணுடியைக் கண்ணிலே பொருத்திக்கொண்டு என்னைப் பார்க்கத் தொடங்கினுர்கள்.

ஆனுல் கப்பல் ஏற்கனவே புறப்பட்டு விட்டது. நான் ஹோட்டலுக்குத் திரும்பிச் சென்றேன். திடீரென்று வெண்படைகள் யால்டா நகரிலே தோன்றின. இவை பெரகாப் நகரிலிருந்து பின்வாங்கிய இஜ்யும் பட்டாளத்தின் பகுதிகளே என்று நாங்கள் கேள்விப் பட்டோம். இந்த வெண் படைச் சோல்ஜர்கள் சிலரிடம் துப்பாக்கியையே காணவில்லை. சகலரும் மிகவும் சோர்ந்து போனவர்களாய்த் தோன்றினுர்கள். போர் முனையில் என்னதான் நடந்திருக்கிறது என்பதை இப்போது நாங்கள் எல்லாரும் ஊகித்து அறிந்து கொண்டோம்.

உணர்ச்சியும் பரபரப்பும் உச்சநிலையை அடைந்தன. கடைகளெல்லாம் அடைபட்டன. வீதி நடைகளில் உலவியவர்களெல்லாம் ஒரே நிமிஷத்தில் மாயமாய் மறைந்தார்கள்.

எல்லாவற்றையும் விட மோசம் என்னவென்ருல், படை வீரர்களுக்கு யால்டா நகரில் சப்ளை சரியாகக் கிடைக்காததால், நகரின் இரண்டு கடைகளில் அவர்கள் புகுந்து, அவற்றைச் சூறையாடி விட்டார்கள்.

இன்னும் சில கப்பல்கள் துறைமுகத்துக்கு வந்தன. இந்த வெளியேற்றத்துக்கு, எங்கேயோ இருந்தபடி யாரோ மிக ஒழுங்காய் ஏற்பாடு செய்துகொண்டிருக்கிருர்கள் என்று இப்போது நன்ருய்ப் புலப்பட்டது.

31. குடும்ப நாடகம்

இதற்கிடையில், தியொடோஸியா என்ற கப்பலிலே நாங்கள் புறப்படவேண்டுமென்று என் லெப்டினண்ட்

கொமராவ் என்னை எச்சரித்துவிட்டான். இந்தக் கப்பலே கடைசிக் கப்பல் என்று தோன்றுவதாகவும், இனி எங்கள் புறப்பாட்டை ஒத்திப்போட லாகாது என்றும் அவன் சொன்னான்.

"நாம் எங்கே போகப் போகிறோம் ?" என்று நான் கேட்டேன்.

"கான்ஸ்டாண்டிநோபிள் நகரத்துக்குப் போகப் போகிறோம். எதிர்காலத்தைப் பற்றிக் கவலைப்படாதே. நம் விதியை நான் தீர்மானம் செய்துவைத்துவிட்டேன்" என்று அவன் சொன்னான்.

இப்படிச் சொல்லி, தன் ஜேபியிலே அவன் கையை விட்டான். அந்த ஜேபியிலேதான் என்ன என்ன சாமான்களெல்லாம் பிதுங்கிக்கொண்டு கிடந்தன !

முடிச்சை அறுத்தெறிய வேண்டிய நேரம் வந்து விட்டது. ஆனால், 'குடும்பக் கலாட்டா' ஒன்றை நடத்துவது பயனில்லை என்று நான் உணர்ந்தேன். ஆகவே, நான் அவனோடு போகப் போவதில்லை என்று சொல்ல வில்லை.

"கொமராவ், நீர் முதலில் துறைமுகத்துக்குப் போய்ச் சேரும். இதோ ஒரு நிமிஷத்தில் நான் அங்கே வந்துவிடுகிறேன். நான் ஒரு சிநேகிதியிடம் விடை பெற்றுக்கொண்டு வரவேண்டும்" என்று சொன்னேன்.

அவன் மடையன்தானே ; அப்படியே புறப்பட்டு விட்டான்.

நான் எதிர்த் திசையில் ஓடினேன். கவனிப்பா ரற்றுக் காலியாய்க் கதவு திறந்து கிடந்த ஒரு வீட்டுக் குள்ளே நுழைந்தேன். ஒரு ஜன்னலண்டை உட்கார்ந்து கொண்டேன். கடலைப் பார்த்தேன். இப்படி நான் செய்தது எனக்கே களிப்பா

யிருந்தது. வீண் சமாதான மெல்லாம் சொல்லாமல் தப்பித்துக் கொண்டேன் அல்லவா ? என்ன சமாதானம் சொன்னாலும், அது நன்றா யிராது. இந்த மனிதனோ எனக்கு முற்றிலும் அந்நியன்; என் சத்துருவாக இருந்தவன். இவனை நான் என் காரியங்களை நிறைவேற்றிக் கொள்வதற்காகப் பயன்படுத்திக்கொண்டேன். இவன் கான்ஸ்டாண்டிநோபிளுக்குப் போகிறானோ, அல்லது நரகத்துக்குத்தான் போகிறானோ, எப்படி நாசமானால் எனக்கென்ன ? இவனிடம் என்ன நான் சமாதானம் சொல்லக் கிடக்கிறது !

அரை மணி நேரத்துக்கு மேல் அந்த அறையிலேயே உட்கார்ந்துகொண் டிருந்தேன். கப்பலி லிருந்து இரண்டு தடவை ஊதல் சத்தம் கேட்டது.எல்லாம் சரியாயிருக்கிறது என்று இதற்கு அர்த்தம். 'என் கொமராவ் என்னை எங்கெங்கேயோ தேடி யிருப்பான். பிறகு, சந்தேகமில்லாமல் மனம் சாந்தி யடைந்திருக்கும். இதன் பின், தன் விலை மதிப்பு மிக்க சொத்துக்களைச் சுருட்டிக்கொண்டு கிளம்பிப் போயிருப்பான்' என்று எண்ணினேன்.

ஆனால், திடீரென்று ஒரு கூச்சல் கேட்டது. ஜன்னல் வழியாகப் பார்த்தேன். நான் இருக்கும் வீட்டை நோக்கிக் கொமராவ் ஓடிவருவது கண்டு திகிலடைந்தேன். யாரோ ஒரு பெண் அவனுக்கு இந்த வீட்டைச் சுட்டிக் காட்டிக்கொண் டிருந்தாள்.

ஒளிக்காமல் சொன்னால் நான் ஒரேயடியாய்ப் பிரமித்துப் போய்விட்டேன். எனவே, என்னால் நகரவே முடியவில்லை.

வீட்டுக்குள்ளே பாய்ந்து வந்தான் கொமராவ். நிலைப்படியிலே நின்று கொண்டான். வெறிகொண்டு

படபடவென்று ஆடினுன். இரைக்க இரைக்க மூச்சு விட்டான்.

அவன் என்னைக் கண்டதும், தன் ரிவால்வரைத் தூக்கிப் பிடித்தான். என்ன என்னவோ கண்டபடி திட்டிக்கொண்டே, என்னைப் பார்த்துச் சுட்டான். ஆனுல், அவன் எண்ணத்தை மின்னலைப் போல் என் மனம் அறிந்து கொண்டதால், நான் சட்டென்று குனிந்து தரையில் படுத்துவிட்டேன். அவனுடைய துப்பாக்கிக் குண்டு என் தலையைத் தாண்டிச் சென்று விட்டது. அவன் மறுபடியும் சுடப் போனுன். ஆனுல் நான் அவனிடம், "வாஸ்யா, நீர் ஏன் என்னைச் சுடுகிறீர்?" என்று கேட்டேன்.

"ஏ நீச நாயே, குலமக்களின் சத்துரு நீ என்று நான் சந்தேகிக்கிறேன். ஆனுல், அதற்காக உன்னை நான் சுடவில்லை. நீ எனக்குத் துரோகம் செய்து ஓடிப் போக முயலும் ஒரு பெண். அதற்காகவே உன்னைச் சுடுகிறேன். நான் ஒரு குடியானவனின் மகன்..." என்றுன் கொமராவ்.

"நீ ஒரு குடியானவனின் மகன் என்பது வெறும் பாசாங்கு!" என்று சட்டென்று நான் கத்தினேன். அதே கணத்தில் அவன் அருகிலே பாய்ந்தோடினேன். அவன் கை ரிவால்வரைப் பிடுங்கிக் கொண்டேன்.

அவன் சிறிதும் திமிராமலே ரிவால்வரை என்னிடம் விட்டு விட்டான்.

நான் சுவரிலே சாய்ந்து கொண்டு, கையிலே ரிவால்வருடன் நின்று கொண்டேன். அவன் என்னையே பார்த்துக்கொண் டிருந்தான். அவன் விழிகள் மிரள மிரளச் சுழன்றன.

ஆனுல், பார்க்கப் பரிதாபமாய் மனம் குழம்பியிருந்த அவனைச் சுட எனக்குக் கை எழவில்லை.

"ஏ நாயே, இதைக் கேள். உன் முன்னே நிற்பவள் யார் தெரியுமா? உன் மானங் கெட்ட மூளைக்கு இதை அறியும் சக்தி எங்கே இருக்கப் போகிறது!" என்று கத்தினேன்.

"அட ஆண்டவனே! நீ யார் என்று இப்போது தான் எனக்குத் தெரிகிறது. உங்களில் ஒவ்வோர் ஆணும் பெண்ணும் உன்மாதிரியே ஆரோக்கியமும் பலமும் உள்ளவர்கள் போல் தோன்றுகிறது! அதனால் தான் சண்டைகளி லெல்லாம் எங்கள் சேனை தோற்று விட்டது!" என்று அவன் வியப்புடன் கூவினான்.

இதன் பிறகு அவன் என் முன்னே மண்டியிட்டு, "நீ என்னைச் சுட்டுவிடுவது பற்றி நான் பயப்படவில்லை. என்னைக் கைவிட்டு விடுவாயே! உன்னைத் திரும்பவும் அடையத் துளி நம்பிக்கைக்கும் இடமில்லையே! இதற்குத்தான் நான் பயப்படுகிறேன்" என்று புலம்பி னான்.

"நீ மகா நோஞ்சல்! ஒழுக்கங் கெட்டவன்! உன்னைச் சுடக்கூட அருவருப்பா யிருக்கிறது" என்று நான் சொன்னேன்.

கோபத்தோடு ரிவால்வரைத் தரையிலே வீசியெறிந் தேன். விழுந்த அதிர்ச்சியிலே அதன் ஒரு குண்டு வெடித்துவிட்டது.

நீ நினைப்பது போல் நான் அவ்வளவு நோஞ்சல் அல்ல. என்னை யறியாமல் கெட்டுப் போய்விட்டேன். நீதான் எனக்கு உதவி செய்ய வேண்டும்" என்றான் கொமராவ்.

"இல்லை, நண்பனே! உன்னைப் போன்ற மனிதர் களைக் காப்பாற்றுவதற்காக நான் பிறக்க வில்லை. யாருடைய ஆத்மாவையும் ரட்சிப்பதற்காக, நான்

இங்கே வரவில்லை. அதற்குத் துளியும் சம்பந்தமில்லாத வேறொரு கடமையைப் புரிவதற்காகவே, தோழர்கள் என்னை இங்கே அனுப்பியிருக்கிறார்கள். உனக்கு இஷ்டமானால், நீ இங்கே தங்கலாம். ஆனால், நான் உன்னோடு வசிக்கமாட்டேன். ஏ நாயே, சற்று முன்பு நீ என்னைப் பார்த்துச் சுட்டாயே, அது எவ்வளவு உண்மையோ அவ்வளவு உண்மை இப்போது நான் உன்னைப் பார்த்துச் சொல்வதும்" என்று சொன்னேன்.

என் வார்த்தைகளும், நான் அவனை நாய் என்று அழைத்ததும் அவனுக்குத் திடீரென்று பேராத்திரமூட்டி விட்டன. அவன் மனம் நிதானமிழந் திருந்ததால், சட்டென்று அமைதி குலைந்து ஆவேசம் கொண்டான்.

"ரத்தம் குடிக்கிற ஒரு போல்ஷ்விக்க அட்டை நீ. இன்னமும் நீ எங்கே என்னை விட்டுத் தப்பிப் போய் விட்டாய்! சோல்ஜர்களைக் கையில் கசையுடன் வரச் சொல்கிறேன். உன்னைப் போதிய அளவு கெஞ்சிப் பார்த்துவிட்டேன். இனி உனக்குச் சாட்டையடி கொடுக்கச் செய்வதுதான் சரி" என்று அவன் கத்தினான்.

இதுவரைக்கும் கீழே கிடந்த ரிவால்வரை, அவன் ஆத்திரத்தோடு பாய்ந்தெடுத்தான்.

ஆனால், அதே சமயத்தில், ஒரு பந்தை உதைப்பது போல், அவன் கையைப் பார்த்து நான் ஓர் உதை விட்டேன். 'ஹோ!' என்று புலம்பி, அந்தரடித்துக் கொண்டு அவன் கீழே விழுந்தான்.

"இப்போது இங்கே பார்! இந்த நிமிஷமே துறைமுகத்துக்குப் போ; அங்கேயிருந்து கான்ஸ்டாண்டி நோபிளுக்குப் போய்த் தொலை! இல்லையானால், நானே உன்னை அந்த இடத்துக்கு அனுப்பிவிடுவேன். ஆனால்,

அது பூலோகமார்க்கமாக அல்ல, தேவலோக மார்க்க மாக " என்று அவனுக்குச் சொன்னேன்.

நான் தமாஷ் செய்யவில்லை என்று கொமராவ் உணர்ந்து கொண்டான். எழுந்திருந்து, குழந்தை போலச் சொன்னான் : " ஆனால், கப்பல் போய் விட்டதே, அனுஷ்கா ! நான் எங்கே போவேன் ?" என்றான்.

" துறைமுகத்துக்குப் போய்ப் பார். ஒரு வேளை அங்கே ஏதாவது இருக்கலாம். இருந்தால், - தெய்வத் தின் மீது ஆணையாகச் சொல்லுகிறேன் - அதிலே நீ போய்விடு !" என்றேன்.

" சரி, அப்படியே நான் போய்ப் பார்க்கிறேன். ஆனால், அங்கே ஏதும் இல்லாவிட்டால், நான் திரும்பி வந்து தங்குவேன். ஏதாவது இருந்தால், போய் விடுகிறேன். விதி விட்டபடி நடக்கிறேன் " என்றான்.

இப்படிச் சொல்லி, ஒரு பித்துக்கொள்ளியைப்போல் அவன் துறைமுகத்துக்கு ஓடினான். நிகழ்ந்த நிகழ்ச் சியைக் கண்டு நிம்மதி குலைந்தவளாக, நான் அந்த வீட்டிலேயே உட்கார்ந்திருந்தேன்.

துறைமுகத்தில் என்ன நடந்தது என்று எனக்குத் திட்டமாகத் தெரியாது. மீன் பிடிக்கும் சிறு கப்பல் ஒன்றில் ஏறுவதற்காகப் போட்டிருந்த படிக்கட்டிலே கொமராவ் ஏறினானும். அப்போது ஆடிவிழுந்து கொண்டே நடந்ததால், கால் தவறிக் கடலில் விழுந்து விட்டானும். விழும்போது, ஒரு பாறையில் மோதிக் கொண்டானும். கடுமையான காயத்தோடு அவனை அந்தச் சிறிய கப்பலில் தூக்கிப் போட்டுக் கொண்டு, தியொடோஸியாவுக்கோ வேறே எங்கேயோ கொண்டு போனார்களாம். இதையெல்லாம் நான் பின்னால்தான் கேள்விப்பட்டேன்.

ஆனால், அதற்குப் பின்பு என்ன நடந்தது என்பது எனக்குத் தெரியவே யில்லை. அவன் சாகாதிருந்தானால், ஒரு வேளை அவனை அவர்கள் கான்ஸ்டாண்டி நோபிளுக்கு அனுப்பியிருக்கக் கூடும்.

இந்த மனிதனிடம் எனக்கு இரக்கம் வரவேயில்லை. ஏனென்றால், அவன் என் சத்துரு. தவிர, நான் கேடு செய்யாமலே, தானாகவே நாசமாய்ப் போனவன். அவனைச் சரியான மார்க்கத்தில் சீர்திருத்திவைப்பது என் வேலை அல்ல.

32. முடிவுரை.

அன்று தினமே செஞ்சேனையை நாங்கள் யால்டா நகரில் எதிர்பார்த்தோம். ஆனால், அது வரவில்லை. மூன்று நாள் கழித்துத்தான் நகரத்துக்குள் செஞ்சேனை வீரர்களின் முதல் கோஷ்டி தென்பட்டது. அது அபூர்வமான, ஆனந்தமான நாள்; அடிமைத்தனத்திலிருந்து விடுபட்ட மக்களின் திருவிழா நாள்.

அந்த நாளிலே என் வாழ்வில், சிறிது இருள் சூழ்ந்தது உண்மை. நான் வெண்படை அதிகாரி ஒருவனின் மனைவியாக இருந்தவள் என்றும், புரட்சிக்கு விரோதிகளா யிருந்தவரின் உளவிலாகாவிடம் சம்பளம் வாங்கும் துப்பாளி என்றும், என்னைப் பற்றி யாரோ தகவல் கொடுத்துவிட்டார்கள். ஆனால், இதெல்லாம் தவறென்று உடனேயே ருசுவாகிவிட்டது. என் மீது ஏற்பட்ட சந்தேகங்க ளெல்லாம் நிவர்த்தியாகிவிட்டன. என்றாலும், இரண்டு மணிநேரம் கைதியாக இருந்தது, எனக்கு மகா வெறுப்பாய்ப் போயிற்று.

பொக்காரா கோமகன் ஒருவனுடைய மாளிகைக்கு என்னை அழைத்துச் சென்றார்கள். அதுதான் கைதிகளைக் குறுக்கு விசாரணை செய்யும் இடம். தோழர்களில்

ஒருவன், தனக்கு வந்த உற்சாகத்திலே, என்னை ஒரு சத்துருவைப்போல் சுட்டுத் தள்ளுவதாகக்கூட உறுமினன். நமது சொந்தக் குண்டு ஒன்றினாலேயே செத்து மடியப் போகிறேனே என்று ஒரு நிமிஷம் நான் பெரிதும் பயந்து போனேன். ஆனால், அதற்குப் பின்பு, நம்முடைய யால்டா நகரத் தோழர்களில் ஒருவன் உள்ளே வந்தான்; என்மீது ஏற்பட்ட சகல சந்தேகங்களையும் அவன் தட்சணமே தெளிவு செய்தான்.

அதன் பின்பு, என்னைப் பற்றிக் கேள்விப்பட்ட ஒவ்வொருவரும் என்னைப் பாராட்டுவதற்காக என்னிடம் வந்தார்கள். என் கையைப் பிடித்துக் குலுக்கினார்கள். அன்பு மிகுதியால் என்னைக் கட்டி முத்தமிட்டுக் கொண்டார்கள். நாம் மகத்தான வெற்றி பெற்றதற்காக என்னைப் புகழ்ந்தார்கள்.

இதற்குப் பிந்தி என் வாழ்க்கையை இப்படி நான் சுருக்கிச் சொல்லிவிடலாம்: காஸ்யனுவ் என்ற என் பெயரையே படைத்த அந்தத் தோழனை அதே வருஷத்தில் நான் மணந்து கொண்டேன். எகாடெரினுஸ்லாவ் நகரில் எனக்கு அறிமுகமான அதே தோழனைத்தான். இவன் மரணமடையும் வரையில், நாங்கள் மிக்க மகிழ்ச்சியாகவும், உள்ளங் கனிந்த ஒற்றுமையுடனும் வாழ்ந்தோம்.

இந்த அருமையான புருஷனை இழந்தது எனக்கு மிகவும் துக்கமாயிருந்தது. உண்மையான தோழனின் உணர்ச்சி இவனிடம் இருந்தது. என் முதல் புருஷனைப் போர்முனையிலே இழந்தபோது நான் எப்படி வாய்விட்டு அலறினேனே, அதேபோல, இவனை இழந்தபோதும் அலறிவிட்டேன்.

ஆமாம்; புரட்சி நாட்களில் என் வாழ்நாளிலே பற்பல அருமையான மனிதர்களை நான் இழந்துவிட்

டேன். ஆனால், அதற்கெல்லாம் ஈடாக எனக்குத் தினசரி மகிழ்ச்சியும் பெருமையும் தரும் ஒரு புதுமையைக் கண்டு கொண்டேன்.

நாம் இன்று அமைத்துவரும் வாழ்க்கைக்கு மாறான ஒரு வாழ்க்கையைப் பற்றி நினைத்துப் பார்த்தாலே, எவ்வளவு கஷ்டமும் வேதனையும் உண்டாகின்றன! நம் மக்களுக்கு மாறுபட்ட மக்களை, நடுத்தர வகுப்பினரை நடுவிலே கொண்ட மக்களை, புரட்சிக்கு முந்தி யிருந்த மக்களைப்பற்றி நினைத்துப் பார்த்தாலே, எவ்வளவு கஷ்டம் உண்டாகிறது! ஒரு புறம் வியாபாரிகள், நேர்த்தியான சீமாட்டிகள், கோமகன்கள், மிராசுதார்கள் ஆகிய இவர்களெல்லாம் இருக்க, மறுபுறம் துன்பத்திலும் வறுமையிலும் உழன்று மனித கௌரவத்தையே இழந்து மானங் கெட்டு வாழும் மக்களைத் திடீரென்று காண நேர்ந்தால், அதை நம்மால் துளியும் சகிக்க முடியுமா ?

என் மக்கள் மகத்தான புரட்சி ஒன்றைச் சாதித்து முடித்து, வருஷந்தோறும் மேலும் மேலும் சிறந்தோங்கி வரும் ஒரு புது வாழ்வைப் படைக்க இயன்றதை நினைக்கும் போதெல்லாம் நான் அளவற்ற குதூகலம் அடைகிறேன்.

நான் அடைந்த நஷ்டங்களுக்கெல்லாம் ஈடாக நான் கண்டு கொண்டது இதுதான்.

என் பழைய வாழ்க்கை எவ்வளவு நெடுந்தூரத்துக் கப்பால் பின்னே சென்று மறந்துபோன ஒரு கதையின் அத்தியாயம் போல இப்போது எனக்குத் தோன்றுகிறது! உதாரணமாக, நான்கு வருஷங்களுக்கு முன்பு ஒரு நண்பரைச் சந்தித்தேன். அவர் வெகு காலமாக வெளி நாடுகளுக்குப் போயிருந்தவர். அகதியாய் ஓடிய சீமாட்டி நினா விக்டராவ்னாவின் வாழ்க்கை பற்றிய சில தகவல்

களை இந்த நண்பரிடம் நான் கேள்விப்பட நேர்ந்தது. பாரிஸ் நகரில் அவள் ஒரு நாகரிகத் தையல் கடை வைத்துக் கொள்ளை கொள்ளையாய்ப் பணம் சம்பாதித்து விட்டாள் என்று தெரிகிறது. அவளுடைய கடை நாகரிக மோஸ்தருக்குப் பிரசித்தி பெற்றுவிட்டதாம். தன் கணவனை தளபதியிடம் அவள் விவாக ரத்துச் செய்துகொண்டு விட்டாளாம். அந்தக் கிழத் தளபதியோ, தன் தள்ளாத பருவத்தில் எங்கேயோ ஒரு ஹோட்டலில் பட்லராய்த் தட்டு தூக்கிக்கொண் டிருக்கிருனும்.

அவர்கள் யுகோஸ்லாவியாவில் இருந்தபோதே, யூரி புனகாவ் தன்னைத்தானே சுட்டுக்கொண்டு செத்து விட்டானும். அவன் நோஞ்சலாய், உயிர் வாழவே தகுதி யில்லாதவனு யிருந்தான். கண்ணுடிப் பெட்டிக்குள் போட்டு மிகவும் தளுக்காய் நடுத்தர வகுப்பார் தங்கள் தோட்டங்களிலே எக்காரணம் பற்றியோ வளர்க்கிருர் களே சில பூச்செடிகளை, அந்த மாதிரி ஒரு செடி அவன்.

காப்டன் கிளெப் ஸ்வெதயேவின் விஷயம் என்ன வென்ருல், அவன் வெகுநாள் வரையில் பாரிஸ் நகரில் ஒரு டாக்ஸி கார் டிரைவராக இருந்திருக்கிருன். பின்பு எழுபது வயதான அமெரிக்கக் கிழப் பணக்காரி ஒருத்தியை மணந்து கொண்டு சௌக்கியமா யிருக்கிருனும்.

பணக்காரர்களையும் வியாபாரிகளையும் கொண்ட பழைய ருஷியா, இறந்த கால இருளிலே ஆழப் புதைந்து மறைந்துவிட்டது. சரித்திரத்தின் அந்த ஏட்டை நேரிலே கண்ட ஒரு சாட்சி நான். அதனுல் தான், என் வாழ்க்கை வரலாற்றைப் பற்றிச் சொல்ல, நீங்கள் ஒரு வேளை நினைத்திருக்கக் கூடியதைவிட அதிக நேரம் எனக்குப் பிடித்தது.

—

நாவலர் பெருமான்

வித்துவான் கா. மாயாண்டி பாரதி

- "...புகழ் பெற்ற பெரியாராகிய ஆறுமுக நாவலரின் வாழ்க்கை வரலாற்றை ஆதியோடு அந்தமாக விரிவான முறையில் அழகிய தமிழில் எழுதியுள்ளார்....இந் நூலாசிரியரின் ஆராய்ச்சித் திறன் நம்மை மகிழ்விக்கின்றது. ...உயர்தரக் கலாசாலைகளில் பாட புத்தகமாக வைக்கத் தகுதியுடையது." **—சுதேசமித்திரன்.**

- "...தமிழில் வளர வேண்டிய துறைகளில் வாழ்க்கை வரலாற்றுத் துறையும் ஒன்றாகும்....ஆசிரியரின் நன் முயற்சி பாராட்டத்தக்கது....நிகழ்ச்சிகள் சுவைபடத் தரப்பட்டுள்ளன." **—திருச்சி வானொலி.**

- "...இதுவரையும் நாவலரைப் பற்றி வெளிவந்த வரலாற்று நூல்களுள் இது முதன்மையான இடத்தைப் பெறுகின்றது. ...உரை நடை பெரும்பாலும் தூய செந்தமிழ் நடையில் அமைந்திருப்பது போற்றற் பாலது....எல்லாரும் படித்து இன்புறுதல் வேண்டும்." **—சுதந்திரன்.**

- "...தெள்ளத் தெளிந்த உயர்தரமான தமிழ் நடையில் இப் பெரியார் எழுதியுள்ள இந்த நூல் பெரியோர்களைப் போலவே பாடசாலை மாணவருக்கும் பெரும் நன்மை பயக்கும் தன்மை வாய்ந்தது." **—ஈழகேசரி.**

- "...தூய்மையான தமிழ் நடையில் தெளிவாக எழுதியிருக்கிறார்...முயற்சி பாராட்டத் தக்கது...தமிழ் மாணவ உலகத்திற்குப் பெரும் நற்பயனை அளிக்கும்." **— வீரகேசரி.**

பழனியப்பா பிரதர்ஸ்

சென்னை-5 — திருச்சி